கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(08.01.2017 - 08 தை, 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 151, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05






# 2017ஆம் ஆண்டு தூய யோசேவ்வாஸ் ஆண்டாகப் பிரகடனம்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது 2017ஆம் ஆண்டினை தூய யோசேவ்வாஸ் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. 2017ஆம் ஆண்டு தை மாதம் 16ஆம் திகதி 2018ஆம் ஆண்டு தை மாதம் 18ஆம் திகதி வரையான ஓராண்டு காலப்பகுதியை உள்ளடக்கிய காலப்பகுதியில் இந்த தூயவரைப் பற்றிய தெளிவை எம் மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## நிகழ்ச்சி நிரல்

### தொடக்க நிகழ்வும் முடிவு நிகழ்வும்

14ஆம் திகதி சனிக்கிழமை 2017 மாலை 6.00 மணிக்கு தூய யோசேவ்வாஸ் ஆண்டின் தொடக்க நிகழ்வு கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் நடைபெறும்.

பேராயர், துணை ஆயர்கள், சிறப்பு பணி முதல்வர்கள், மூன்று மறைக்கோட்டங்களிலும் சார்ந்த பிரதிநிதிகளும், பங்குதந்தையர்கள் மற்றும் பங்குகளின் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பிப்பர்.

அன்றைய தினம் அவருடைய திருப்பண்டமாகிய துகில், பவனியாக எடுத்துவரப்பட்டு பின்னர் மக்களின் மரியாதைக்காக பேராலயத்தில் வைக்கப்படும்.

இறை இரக்கத்தின் ஆண்டு முடிவு நிகழ்வுகள் : 2017ஆம் ஆண்டு தை மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பேராலயத்தில் நடைபெறும்.

அன்று மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று இறைஇரக்கத்தின் ஆண்டு நிறைவு செய்து, புனித யோசேவ்வாஸ் ஆண்டு பிரகடனப்படுத்தப்படும்.

இவ்வாண்டுக்கான வழிபாட்டு நூல் உயர் மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையத்தால் வெளியிடப்பட்டு, பங்குகளுக்கு அனுப்பப்படும்.

J.K.S பெரேரா என்பவரால் இயற்றப்பட்ட "வந்தனீய வூ பூஜனியவூ" என்னும் தூய யோசேவ்வாஸ் குறித்த பாடல் இவ்வாண்டின் திருப்பலிகளின்போது பயன்படுத்தப்படும்.

**இதுபற்றிய மேலதிக முழு விபரங்களும் அடுத்த ஞானஒளியில் வெளியாகும் என்பதை அறியத்தருகின்றோம்.**

## புனித யோசேவ்வாஸ் ஆண்டிற்கான செபம்

வல்லமைமிக்க, இரக்கத்தின் தந்தையே இறைவா!

எமது தாய்நாட்டின் அப்போஸ்தலராக புனிதயோசப்வாஸ் அடிகளாரை எமக்குத் தந்தமைக்காக, எமது சிரம் தாழ்த்தி உமக்கு நன்றி கூறுகின்றோம்.

எமது மூதாதையர்களின் விசுவாச வாழ்விற்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட வேளையில், புனித யோசப்வாஸ் அடிகளாரின் எளிமை நிறைநத் தூய்மையான வாழ்வினாலும் அவருக்குள் பற்றி எரிந்த ஆன்மீக வாஞ்சையுடன் கூடிய மறைபரப்பு ஆர்வத்தினாலும் எமது மூதாதையர்களின் விசுவாச வாழ்வு ஆழப்படுத்தப்பட நீர் சித்தம் கொண்டீர்.

புனித யோசப் வாஸ் அடிகளாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாண்டிலே, அவரது முன்மாதிரிகையான வாழ்வைப் பின்பற்றி, குருக்கள், துறவிகள், பொது நிலையினராகிய நாம், திருமுழுக்கினால் பெற்றுக்கொண்ட ஆழமான விசுவாசத்துடன் கூடிய தியாக வாழ்வை, தூய உள்ளத்துடன் வாழவும் இயேசுவின் நற்செய்தியைப் பறைசாற்றவும் விசுவாசம் குன்றி தத்தளித்து வாழ்வில் அர்த்தத்தைத் தேடும் எமது கத்தோலிக்க குடும்பங்கள், நசரேத்து திருக்குடும்பத்தைப் போல புரிந்துணர்வுடன் வாழவும் உமது அருளைப் பொழிந்தருளும்.

விசுவாச வாழ்வில் நாம் முன்னெடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் உம்மால் புனிதப்படுத்தப்படவும் எமது இலங்கைத் திருநாட்டின் திருச்சபையில், நாம் அனைவரும் பங்குபற்றும், செயலா -ற்றும் மறைபரப்பாளர்களாகத் திகழவும் எம் ஒவ்வொருவரையும் நீர் வழிநடத்தியருளும்.

இவை யாவற்றையும் உம் திருமகன் கிறிஸ்து வழியாக உம்மிடம் இரந்து வேண்டுகின்றோம். ஆமென்.

தமிழர் போற்றும் பொங்கல் திருநாளில் பொங்கல் மட்டுமல்ல தமிழர்களின் உள்ளங்களும் இல்லங்களும் இறைவன்பால் இணைந்தே பொங்கிட வேண்டும். உங்கள் அனைவருக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்.



**"ஆண்டவரின் மாட்சி உன்மைமேல் உதித்துள்ளது" (எசாயா 60)**

# திருக்குடும்பப் பெருவிழா



திருக்குடும்ப பெருவிழாவை முன்னிட்டு அவிசாவளை பென்றித்தோட்ட மக்கள் தங்கள் திருமணம் முடித்த ஐந்து, ஐந்து வருடங்கள் திருமணமான நிகழ்வை கடந்த வாரம் (30.12.2016) அன்று வெள்ளிக்கிழமை திருப்பலியோடு கொண்டாடினர். இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தமிழ் அப்போஸ்தலிக்க பொறுப்பாளர் வணக்கத்திற்குரிய அருட்பணி மனோகுமாரன் அடிகளார் அழைத்து வரப்பட்டு நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அன்றைய தினம் தந்தை அவர்களுடைய குருத்துவ வாழ்வின் 25வருட நிறைவை முன்னிட்டு தமது வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்ந்தனர்.

**தகவல் : மேரி இருதயநாதன், இரத்தினபுரி**

# தெஹியோவிற்ற புனித அசுந்தா ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த நாடக விழா



தெஹியோவிற்ற புனித அசுந்தா ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த நாடக விழா ருவன்வெல்ல கலாநிதி என். எம். பெரேரா ஞாபகார்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பிரதம அதிதிாக அருட்பணி. டேமியன் பெர்ணான்டோ அடிகளார் கலந்துகொண்டார். சிறார்கள் தேசிய கீதம் இசைப்பதை படத்தில் காணலாம்.

**தகவல் : ஜே. அந்தனி**

# மறைப்பாடசாலை பரிசளிப்பு விழா – 2016



கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் ஆலய மறைப்பாடசாலையினர் தங்களது, வருடாந்த பரிசளிப்பு விழாவினை மார்கழி மாதம் 3ந் திகதியன்று சிறப்பாக நடத்தினார்கள். பங்குத் தந்தை அகஸ்டின் அடிகளாரின் தலைமையில், மறையாசிரியர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழா நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக அருட்சகோதரி இஸ்டெலா மரியா மற்றும் அருட்சகோதரி சாந்தனா ஆகியோர் வருகைதந்து சிறப்புரை ஆற்றி விழாவினைச் சிறப்பித்தார்கள். தொடர்ந்து மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு நடனம், நாடகம் என கலை நிகழ்ச்சிகளுடன் கரோல் கீதங்களும் இசைக்கப்பட்டு, பாலன் பிறப்பு காட்சி அமைக்கப்பட்டு, கிறிஸ்மஸ் தாத்தாவின் வருகையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

# மரியாயின் சேனையாளரின் 2016 ம் ஆண்டிற்கான வருடாந்த ஆண்டுப் பொது ஒன்றிப்பு விழா



கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் பங்குகளில் இயங்கிவரும் மரியாயின்சேனை தமிழ் பிரசீடியங்களை ஒன்றிணைத்து நிர்வகிக்கும் அதன் மேற்சபையான பரிகார மாதா கொமிசியமும், அவ்வாறே பங்குகளிலுள்ள பாலர் பிரசீடியங்களை பரிபாலிக்கும் மேற்சபையான திருச்சபை மாதா கியூறியாவும் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மேற்படி ஆண்டுப் பொது ஒன்றிப்பு விழா கடந்த 04.12.2016 ஞாயிறு பி.ப 2.00 மணிக்கு, கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்திலமைந்துள்ள புனித 2ம் அருள்சின்னப்பர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ்விரு மேற்சபைகளின் தலைவர்களின் வழிநடத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சேனையில் இணைந்து 60 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து சிறப்புப் பணியாற்றிய சகோதரர் யேசுதாசன் வில்லவராஜன் பிரதம விருந்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். சேனையாளர்களின் பல்வேறு கலைநிகழ்வுகளுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில் சேனைக் கைநூல் அறிவுப் போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய சிறுவர் பிரசீடிய சேனையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. கொழும்பு மறைமாவட்ட மரியாயின் சேனை ஆன்ம இயக்குனரும் தேசிய ஆன்ம இயக்குனருமான அருட்பணி இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளார் பிரதம விருந்தினராகவும், அருட்பணியாளர் லூயிஸ் (கார்மேல் சபை), கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலய சேனை ஆன்ம இயக்குனரும் பேராலய உதவிப் பங்குத்தந்தையுமான அருட்பணி யேசுதாஸ் சில்வர் அடிகள் (திருவுளப்பணியாளர் சபை) ஆகியோர் உட்பட அருட்சகோதரிகள் பலரும் விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்திருந்த இந்நிகழ்வில் கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் 22 வளர்ந்தோர் பிரசீடியங்களும் 15 சிறுவர் பிரசீடியங்களுமாக (கத்தோலிக்க பாடசாலை பிரசீடியங்கள் உட்பட) மொத்தம் 37 பிரசீடியங்கள் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**தகவல் : இராஜேந்திரம் தங்கராஜா கொமிசியச் செயலாளர்**

# சதா சகாய அன்னையே! வாழ்க அபாயம் காக்கும் புனிதையே வாழ்க!

இரத்தினபுரி பேராலய பங்கிற்குச் சொந்தமான கரப்பிஞ்ச தோட்டத்து பாதுகாவலியான புனித சதா சகாய அன்னையின் வருடாந்த விழா கடந்த 16.11.2016 அன்று அருட்பணி. எட்வட் ஜெயபாலன் (O.F.M) அடிகளாரினால் கொடியேற்றப்பட்டு தொடர்ந்து நவநாளும் திருப்பலியும் நடைபெற்றது. 18.11.2016 சனியன்று அருட்பணி. எட்வர்ட் ஜெயபாலன் மாலை ஆராதனை நடத்தினார். பேராலய பங்குத் தந்தை என்ஸ்லி சுரங்க அடிகளாரும் கலந்து கொண்டார். நற்கருணை பவனியும் இடம்பெற்றது. 20.11.2016 ஞாயிரன்று திருநாள் திருப்பலியை அருட்பணி எட்வர்ட் ஜெயபாலன் அடிகளாரும், பேராலய உதவி பங்குத்தந்தை சம்பத் விஜேரட்ண அடிகளாரும் நிறைவேற்றினார்கள்.

# பாலன் குடில் போட்டி




ஹெரானை மத்துகம பங்குகளில் தோட்டங்களுக்கு இடையிலான பாலன் குடில் போட்டிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. கிட்டத்தட்ட 25 தோட்டங்கள் இப்போட்டியில் பங்குபற்றின. மக்கள் மிகவும் உற்சாகத்துடன் தங்களுடைய ஆர்வத்தையும் பங்களிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளுக்கான பாலன் குடில்கள் அனுசரனை செய்த திருவாளர் சுகுமார், ரெஜர் மற்றும் ஏனையவர்க்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**தகவல் : அருட்தந்தை ஒனாசியஸ் உதவிப்பங்குத் தந்தை மத்துகம**

## பாராட்டுகின்றோம்! இறை இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு கேகாலை வயோதிபர் மடத்தில் இடம்பெற்ற நிகழ்வு

அவிசாவளை பங்கிற்குச் சொந்தமான கொஸ்கம திரு இருதய ஆண்டவர் தேவாலய இளைஞர்கள் (இளைஞர் சபையிலுள்ளோர்) வயோதிபர்களுக்காக ஒருவேளை உணவும் - ஏராளமான பெறுமதியான பரிசில்களும் வழங்கினர். அத்துடன் அவர்களுக்கு விநோதமான விளையாட்டிலும், ஆடல் பாடல்களிலும் ஈடுபடச் செய்து அவர்களை மகிழ்வித்தனர். பங்குத்தந்தையும் இளைஞர்களும் கலந்து ஆடிப் பாடி அவர்களை மகிழ்வித்தனர்.

இறுதியாக ஒரு தாயார் நன்றியுரை வழங்கும்போது அவருடைய கண்களில் கண்ணீர் மல்க “இக்காலத்தில் நவீன நாகரீக மோகத்தில் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். விநோத பயணம் செல்கின்றனர். ஆனால், இந்த இயேசுவின் இளைஞர்கள் எம்மை மகிழ்வித்தனர். பணத்தைத் தேடலாம். ஆனாலும் இவ்வாறான சந்தோஷத்தை பணம் கொடுத்தும் வாங்கமுடியாது. இவர்களை இறைவன் மேலும் ஆசீர்வதிக்க வேண்டும். எம்மை தேடிவந்த இந்த இறை பயணத்தை ஆசீர்வதிக்க வேண்டுமென” கூறினார். இவ்வாறான ஒரு விநோத பயணம் அல்லது வயோதிபர்களைத் தேடிச்சென்ற பயணத்தை இளைஞருக்கு ஊக்குவித்து அர்த்தமுள்ள பயணமாக மாற்றியமைத்த அவிசாவளை பங்கு ஆலய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி கிளேரியன் பெர்ணான்டோ அவர்களைப் பாராட்டுகின்றோம். மேலும் பணிசிறக்க வேண்டுகின்றோம்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**

ஞான ஒளி
GNANA OLI
கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984, 0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
08, தை 2017 ஞாயிற்றுக்கிழமை.

## "உண்மை கிறிஸ்தவ மறைப்பரப்பாளர் தூய யோசேவ்வாசைப் போன்று திருச்சபையினூடாக சான்று பகர்வோம்"

இறைவனின் ஆசியால் உங்கள் அனைவரையும் புதிய ஆண்டில் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நாம் வாழ்வதற்காகவும் எமது வாழ்வினை புதுப்பிப்பதற்காகவும் இறைவனால் இந்த புதிய ஆண்டு தரப்பட்டுள்ளது. புதிய திட்டங்களை அமைத்துக்கொள்ள, எமது வாழ்வினை மாற்றி அமைத்திட, தீமைகளை அகற்றி நன்மைகள் புரிந்திட, பாவ வழி விலகி நல்வழி சென்றிட, இறைவனில் நிலைத்து வாழ தரப்பட்டதுதான் இந்த புதிய ஆண்டு. எமது தாய் திருச்சபையானது இவ்வாண்டினை தூய யோசேவ்வாஸ் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. இந்திய மகனாக பிறந்து எமது மண்ணின் தூயவராக திகழும் தூய யோசேவ்வாஸிடமிருந்து எமது வாழ்விற்காக பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகள் ஏராளம் ஏராளம். இலங்கை கத்தோலிக்கரின் அவல நிலைக்கண்டு அவர்களின் மீது இரக்கங்கொண்டவராக துணிவுடன் தனி ஒருவராக இலங்கை மண்ணில் காலடியெடுத்து வைத்தார். கிறிஸ்தவம் எமது மண்ணில் மலர்ந்திட தன்னையே உடைத்தார். தனக்கென ஒரு குழுவை உருவாக்கினார். ஆம், தொடக்கநூலில் இறைவன் தாம் படைத்த அனைத்தையும் நல்லதென கண்ட இறைவன் ஒன்றை மட்டும் நல்லதல்ல என கண்டார். அதுதான் மனிதன் தனித்திருப்பது நல்லதல்ல என்று கண்டார். அவனுக்கேற்ற துணையை கொடுத்தார். குழுவாக, குடும்பமாக இயங்கும்போது அங்கே ஒரு உறுதிப்பாடும் நம்பிக்கையும் கலந்த நல்லதொரு உறவு சமுதாயம் மலரும்.

இன்றைய மனிதன் தான் மட்டும் வாழ வேண்டும், வளர வேண்டும் என்பதற்காக பல்வேறு வகையான செல்வங்களை தேடி அலைகின்றான். இராப் பகலாக உழைக்கின்றான். கைநிறைய சம்பாதிக்கின்றான். ஆனால் எதிலும் அவன் அமைதி காண்பதில்லை. காரணம் அவன் மட்டும் வாழ்ந்துவிட்டால்போதும் என்ற நிலையில் இருக்கின்றான். அவை எதுவும் மகிழ்ச்சியையும் நிலைவாழ்வையும் தருவதில்லை. நிலைவாழ்வை எமக்குத் தருவது இறைவார்த்தை ஒன்று மட்டுமே. இறைவார்த்தையில் நிலைத்திருந்து இயேசுவின் விழுமியங்களில் வாழ்வோர் மாத்திரமே நிலைவாழ்வை அடையலாம். இந்த நிலைவாழ்விற்கு உதாரணமாக திகழ்பவர்தான் தூய யோசேவ்வாஸ் முனிவர். மறை எனும் ஒளி எமது திருநாட்டில் பற்றியெரிந்திட அரும்பாடுபட்டவர். அது இன்றுவரையில் இலங்கையில் சுடர்விட்டெரிகிறது. இச்சுடருக்கு இன்னுமாக பிரகாசத்தை கொடுத்திட நானும் நீங்களும் தூய யோசேவ்வாசைப் போன்று சாட்சிய வாழ்வு வாழ வேண்டும். சாட்சிய வாழ்வு என்பது இறைபிரசன்னத்தில் வாழ்வதாகும்.

இன்றைய மனிதர்கள் கையடக்கத் தொலை பேசியுடனும் கணினியுடனும் தனிமை விரும்பிகளாக இயந்திர மனிதர்களாக வாழ விரும்புகின்றனர். ஒருவரோடு ஒருவர் பேசுவதுமில்லை பேச விரும்புவதுமில்லை. உறவுகள் இல்லாது ஏது சாட்சிய வாழ்வு? ஏது உறவு சமுதாயம்? அன்று தனித்த வந்த தூய யோசேவ்வாஸ் முனிவர் தனித்தே இயங்கியிருந்தால் ஒரு குறுகிய வட்டத்துக்குள் நாமும் வாழ்ந்திருப்போம். ஆனால் அவர் அப்படி செய்யாது தனது பரந்து விரிந்த சேவையினால் தனது சொல்லாலும் செயலாலும் இறைவனுக்குள் சாட்சிய வாழ்வு வாழ்ந்தார். இந்த சாட்சிய வாழ்விற்கு என்னையும் உங்களையும் அழைத்து நிற்கின்றார். தை மாதம் 16ம் திகதி பரிசுத்த திருச்சபையானது தூய யோசேவ்வாஸின் திருநாளை கொண்டாடி மகிழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழர் போற்றும் பொங்கல் திருநாளில் பொங்கல் மட்டுமல்ல எமது உள்ளங்களும் இல்லங்களும் இறைவன்பால் இணைந்தே பொங்கிட வேண்டும். உங்கள் அனைவருக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்.**

இறையாசீருடன்
ஆசிரியர்



# ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா

பேசும் இறைவா, பேதை நான் கேட்கிறேன். விழியால் உம்மை காண்பேன் என் விழிகளில் பேசும், மொழியால் உம்மை கேட்பேன், என் செவிகளில் பேசும்" இயேசுவின் பிறப்புச் செய்தியை கேட்டு இறைவனைக் கண்டு கொள்ளச் சென்றனர் ஞானிகளான மெல்கியோ, பல்தசார், கஸ்பார். திருக்காட்சியை ஆங்கிலத்தில் 'Ephipany" என அழைப்பார். இச்சொல் கிரேக்க மூலச் சொல்லின் இருந்து வருகிறது. இதற்கு இறைவனின் வெளிப்பாடு" இறை சக்தியின் வெளிப்பாடு அல்லது இறை மாட்சியின் வெளிப்பாடு என்று பொருள். இதனை திருவெளப்பாடு" எனவும் அழைக்கலாம்.

இயேசு பிறந்த போது ஏரோது தேடினான் அவரைக் காணவேண்டும் என்று, ஆனால் அவனது தேடலில் அன்பு இல்லை, அதிகாரம் இருந்தது. கொல்வதற்கான தேடல். அதனால் இயேசுவைக் காணும் வாய்ப்பு அவனுக்கு கிடைக்கவில்லை.

ஞானிகளின் தேடலில் அதிகாரம் இருக்க -வில்லை. அன்பு இருந்தது. ஆவல் இருந்தது. எனவே கண்டார்கள் பாலன் இயேசுவை. கண்ட அவர்கள் தன்னிலை துறந்து, ஏழ்மையாக்கி ஏழையின் குடிசைக்கு சென்று உள்ளத்தையும் உள்ளதையும் கொடுத்து உறவை வளர்த்துக் கொண்டார்கள். மூன்று ஞானிகளும் தங்கள் பயணத்தின் குறிக்கோளை அறிந்து உள்ளதை காணிக்கையாக்கி உன்னத நிலை அடைந்தார்கள். தங்களது, ஞானம், அறிவு, பட்டம் புகழ் இவற்றை விட்டு விட்டு ஒன்றிணைந்து தேடினார்கள்.

ஆகவே ஞானிகளைப்போல இறைதேடலில் அமைதியைப் பெறுவோம். உறவை வளர்த்துக் கொள்வோம். அத்தோடு இத்திருக்காட்சிப் பெருவிழா மரியாவிடம் மனிதராகப் பிறந்த இறைமகன் இஸ்ரயேல் மக்களுக்காக மட்டும் வரவில்லை. மாறாக, அவர் பிறப்பிடம் தேடிப் பயணித்த ஞானிகள் வருகை மூலம் ஓட்டுமொத்த மானுடத்திற்கே அவர் சொந்தம் என்பதை முன் உணர்த்துகின்றது. அரசர்களாகக் கருதப்படும் இஞ்ஞானிகள் வான்கோளையும் அவைகளின் மாற்றங்களையும் ஆய்ந்தறிந்தவர்கள். தமது அன்றாட வாழ்வை அவைகளின் விட ஆழமானப் பொருள் சார்ந்த உண்மையைத் தேடியவர்கள். கடவுள் இவ்வுலகை அன்பு செய்கிறார். அனைத்து மக்களையும் பேதங்கள் கடந்து ஒருங்கிணைகிறார் என்றும் நம்பியவர்கள். நம்பிக்கையின்படியும் விண்மீன் வழிகாட்டுதல்படி பயணித்தவர்கள். தேடலின் விடையாக எருசலேம் நகர் வந்தவர்கள். உலகில் விடுதலை அருளும் விடியலாம் இறைமகன் இயேசுவை பெத்லகேமில் பாலனைக் கண்டார்கள்.

ஆனால், கீழ்த்திசையில் இருந்து பயணப்பட்ட ஞானிகள் பாதையில் தடைகளையும் எதிர்ப்புகளையும் சந்தித்தார்கள். எருசலேமில் ஏரோது உருவில் முதலில் வழிகாட்டுதலையும் பின்னர் எதிர்ப்பையும் சந்தித்தவர்கள். உண்மை இறைவனை சந்தித்து தரிசிக்கும் அவர்களின் பயணத்தில் ஏரோது குள்ள நரித்தனத்துடன் செயல்படுவதையும் கண்டுணர்ந்தார்கள். தனது அதிகாரத்தினால் மக்களை அடக்கி ஆண்டுவந்த அவன், "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" என்னும் ஞானிகளின் தேடலைப் புரிந்து கொள்ளவில்லை. ஞானிகளிடம் விண்மீன் தோன்றியது பற்றி கேட்டறிந்தவன் பிறந்திருக்கும் மெசியாவை வணங்கவல்ல, தனக்கொரு எதிரி என அவரைக் கொன்றழிக்கவே எண்ணினான். அவன் கயமையும், கள்ளத்தனமும் வார்த்தைகளில் தொனிக்கின்றன (மத் 2:8). எனவே தான், இயேசுவை சந்தித்த பின் வேறுவழியாகத் தங்கள் நாடு திரும்பிய ஞானிகள் (மத் 2:12) தன்னை ஏமாற்றியதை கண்டு ஏரோது "பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் ஆள்களை அனுப்பி இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றான்"(மத் 2:16).

ஞானிகள் தங்கள் பயணத்தில் சந்தித்த இன்னோர் இடையூறு எருசலேமிலிருந்த தலை-மைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும், ஏரோதுவின் மெசியா பிறப்பை பற்றிய கேள்விக்கு இறைவாக்கினர் முன்னறிவிப்புக்களில் இருந்து பெத்லகேமில் தான் "இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர்" தோன்றுவார் எனக் கணிக்க முடிந்தது (2:5-6). ஆனால் ஞானிகளோடு தாங்களும் மெசியாவை சந்திக்கச் செல்லும் உள்ளார்ந்த விருப்பமோ அவர்களோடு உடன் பயணித்து உண்மை இறைவனைக் கண்டு தரிசிக்கும் உளமோ இருக்கவில்லை. அவர்கள் மறைநூலைத் தவறாது வாசிப்பதிலும் அதற்கான பொருளை ஆயந்தறிவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார்களே தவிர மறைநூல் முன்னுரைத்த மெசியா வருகையை கண்டுணரவில்லை. உண்மை இறைவனைத் தேடும் பயணத்தில் ஈடுபடவில்லை தேடிய ஞானிகள் கண்டார்கள்.. மீண்டும் விண்மீனை, அதன் ஒளி வழியில் உண்மைக் கடவுளை! கண்டவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள். பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள் (மத் 2:11). தேடிப் பயணித்-தவர்களுக்கு கடவுள் தந்த பரிசு புதிய பாதை (2.12), புதிய வாழ்வு. கடவுளை சந்தித்த அவர்கள் அனைத்து மக்களையும் பேதங்கள் பாராமல் தங்கள் சகோதர சகோதரிகளாக ஏற்றுக்கொள்வார்கள்.
கடவுள் நம்மோடு என....

15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்





# கிறிஸ்தவ பொங்கல் விளக்கமும், வழிபாடும்

- பழைய ஏற்பாட்டில் மக்கள் அறுவடையின் முதற்கனியாகிய கதிர்கட்டை இறைவனுக்குக் காணிக்கையாக அளித்தனர்.
- கிறிஸ்து விண்ணகத் தந்தையின் தலைப்பேறான மகன். ஆகவே மோசே சட்டப்படி மரியா, தன் தலைப்பேறான இயேசுவை ஆண்டவருக்கு அர்ப்பணித்தார்.

ஒரு சமுதாயத்தின் பண்பாடு, அச்சமுதாயத்தில் நிலவும் சமயத்தோடு நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ளது. இவ்வுண்மையை நன்குணர்ந்த திருச்சபை, பண்பாட்டிற்குப் பெரும் மதிப்பு அளித்து வந்துள்ளது. திருச்சபைக்கும் பண்பாட்டிற்குமுள்ள நெருங்கிய தொடர்பை 2-ம் வத்திக்கான் சங்கம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறது. (காண்க, ”இன்றைய உலகில் திருச்சபை எண். 53 தொடர்ச்சி) மேலும் திருச்சபையின் ”அமைப்பிற்கு வெளியே தூய்மை, உண்மை என்னும் அம்சங்கள் பல காணப்படுகின்றன”, (திருச்சபை-3) என்று இச்சங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது. எனவே ”பிற மறைகளிலே காணக் கிடக்கின்ற உண்மையானதும், தூய்மையான எதையும் திருச்சபை உதறித் தள்ளுவதில்லை”. மாறாக அவைகளை ”உண்மையாகவே மதிக்கிறது”. (கிறிஸ்தவமில்லா மறைகள்-2) ”இயலுமாயின் ...... இறைபணியிலும் கூட அதை ஏற்றுக்கொள்ளுகிறது” (இறைபணி-37, 40).

ஆகவே தமிழர் பண்பாட்டின் சிறப்பு அம்சமான பொங்கல் விழா கிறிஸ்தவ இறைபணியில் ஏற்றுக்கொள்ளப்பட தகுதிவாய்ந்ததா என்று ஆராய்ந்து, ஆவன செய்து நமது பண்பாட்டையும், கிறிஸ்தவ மறையையும் இன்னும் சிறக்கச்செய்ய வேண்டும் அது தமிழன் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

## பொங்கல் விழா

தமிழர்களிடத்தில் தை மாதத்தின் முதல் நாளில் பொங்கல் விழா மங்களச் சிறப்போடு கொண்டாடப்படுகிறது. இது ஓர் அறுவடைவிழா. இறைவன் நல்கிய நல் விளைச்சலுக்காக அவருக்கு நன்றி செலுத்தும் விழா. இவ்விழாவிற்கு முந்திய நாளை, மக்கள் தயாரிப்பு நாளாக கொள்கின்றனர். இது ”போகிப் பொங்கல்” என்று அழைக்கப்படுகிறது.

மூன்று நாள் கொண்டாட்டத்தில் முதல்நாளில், மக்கள் ஞாயிற்றை நன்றியுணர்ச்சியுடன் நினைக்கின்றனர். ஏனெனில் அவன்தான் தன் கிரணக்கையால் பயிர்களைச் செழித்து வளரச் செய்தவன். இரண்டாவதுநாள், மாட்டைப் பெருமைப்படுத்துகின்றனர். ஏனெனில், மாடு உழவர்களின் வலக்கரமாய் இருந்து உதவுகிறது. மூன்றாம் நாள், உற்றார் உறவினர், ஒருவர் ஒருவரைச் சந்தித்துத் தங்களது மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கின்றனர்.

## பொங்கல் ஒரு முதற்கனி விழா

பொங்கலைக் கடவுளுக்குப் படைத்தல்தான் பொங்கல் விழாவின் முக்கியக் கட்டமாய் அமைந்துள்ளது. இப்பொங்கல், நிலத்திலிருந்து கிடைக்கும் முதற்கனியாகிய அரிசியிலிருந்து சமைக்கப்படுகிறது. நிலத்தின் முதற்கனியை இறைவனுக்குப் படைப்பது திருவிவிலியத்தில் எங்கும் காணப்படுகிறது.

## பழைய ஏற்பாட்டின் முதற்கனி

பழைய ஏற்பாட்டில், ஏப்ரல் மாதத்தில் பார்லியையும் (2 சாமு 21:9) மே மாதத்தில் கோதுமையையும் மக்கள் அறுவடை செய்தனர். அப்போது அவர்கள் எல்லாரும் மகிழ்ந்திருந்தனர். (இச16:15) இம்மகிழ்ச்சியில் மக்கள் படைப்பில் இறைவனை மறந்துவிடவில்லை. அறுவடைக்காலம் இறையருட் பெருக்கின் அருங்குறி. ஆகவே நல்ல விளைச்சலை நல்கிய இறைவனுக்கு நன்றி செலுத்தினர் (திபா 67:6). அறுவடை விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர். இவ்விழாவின்போது அறுவடையின் முதற்கனியாகிய கதிர்கட்டை இறைவனுக்குக் காணிக்கையாக அளித்தனர் (லேவி 23:10). இதனால்தான் அறுவடைவிழா, “முதற்கனியின் நாள்“ என்று அழைக்கப்பட்டது (எண் 28:26).

இதன் தொடர்ச்சியாகவே, மிருகங்களின் தலைக்குட்டியையும், மனிதர்கள் தம் தலைப்பேற்றையும், குறிப்பாக ஆண்குழந்தையையும் (விப13:12,தொ.நூ22:2) இறைவனுக்குக் காணிக்கையாக அளிக்கும் வழக்கம் உருப்பெற்றது.

## கிறிஸ்து தலைப்பேறானவரும், முதற்கனியும்

கிறிஸ்து விண்ணகத் தந்தையின் தலைப்பேறான மகன். ஆகவே மோசே சட்டப்படி மரியா, தன் தலைப்பேறான இயேசுவை ஆண்டவருக்கு அர்ப்பணித்தார் (லூக் 2:22-24). பழைய ஏற்பாட்டில் அறுவடை நாளன்று முதற்கனியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட கதிர்கள், ஐம்பதாம் நாள் அப்ப காணிக்கையாய் அளிக்கப்பட்டன (லேவி 23:16). அதுபோல பிறந்தவுடன் முதற்பேறான காணிக்கையாய் ஒப்புக்கொடுக்கப்பட்ட இறைமகன் கிறிஸ்து, இறுதியில் பெரிய வியாழன், புனித வெள்ளியன்று அப்பமாய்க் காணிக்கையானார். ஆகவே இயேசுவின் வாழ்க்கையே ஓர் அறுவடை விழா கிறிஸ்து படைப்பனைத்திலும் தலைப்பேறு (கொலோ 1:15) திருச்சபையில் திருமுழுக்கு பெற்ற அனைவரும் முதற்கனியாக ஒப்புக்கொடுக்கப்படுகின்றனர் (யாக் 1:18, 1கொரி 16:15). ஆகவே ஒவ்வொரு அறுவடைவிழாவும் அல்லது முதற்கனி விழாவும் நாம் பெற்ற திருமுழுக்கை நமக்கு நினைவூட்டுகிறது.

## பொங்கலும் கிறிஸ்தவரும்

பொங்கல் விழா, அறுவடையின் முதற்கனியை இறைவனுக்குப் படைக்கும் விழா என்பதாகக் கண்டோம். அறுவடையின் முதற்கனியை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தல், விவிலிய பொருட்செறிவு கொண்ட ஓர் இறையியல் கோட்பாடு என்றும் நோக்கினோம். எனவே தமிழ் கிறிஸ்தவர்கள் பொங்கல் விழாவைச் சிறப்புடன் கொண்டாடுவது மிகவும் பொருத்தமாகும்; பொருளுடையதாகும். ஒரு தமிழ்க் கிறிஸ்தவர், தமிழர் என்ற முறையிலும் பொங்கல் விழாவைக் கொண்டாடத் தகுதியுடையவராகிறார். ஏனெனில் இவ்விழா, கிறிஸ்தவனின் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்து, உயிர்த்தெழுதலில் அவரது நம்பிக்கையையும் உறுதிப்படுத்தி, விண்ணுலக வாழ்வை இம் மண்ணுலகிலேயே முன்சுவையாக அனுபவிக்க உதவுகிறது.

பொங்கல் ஓர் அறுவடை விழா. ஆகவே எல்லாருக்கும் பொதுவான ஒரு சமூக விழா. பொதுப்படக் கூறின் இந்து மக்களின் விழாக்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட புராணக் கதையின் அடிப்படையில் எழுந்ததாகவே இருக்கும். ஆனால் பொங்கல் விழாவைப் பொருத்தமட்டில், அது எத்தகைய புராணத்தையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. இறைவன்பால் மக்கள் கொண்டிருந்த நன்றிப் பெருக்கே பொங்கல் விழாவாக உருவெடுத்தது.

ஆகவே பொங்கல் விழா இன,மத வேறுபாடின்றி தமிழ்ப் பேசும் மக்கள் அனைவருக்குமுரிய ஒரு பொது விழா. ஒரு சமூக விழா. நிலத்தை பண்படுத்திப் பயிர் செய்யும் உழவர்கள் மட்டுமல்ல, அதன் பலனை உண்டு மகிழும் அனைவருமே இந்நன்றிப் பெருவிழாவைக் கொண்டாட வேண்டும்.

## புதிதாய் பிறப்பெடுப்போம்

மலரும் பூ வாசம் பெறுவதுண்டு
மண்ணில் உதிர்ந்த பூ புதிதாய்ப்
பிறப்பெடுப்பதுண்டு

உருவியமும் மனம் பிறப்பெடுப்பது
மனதை உறுதிப்படுத்த

துவண்டு போனவர் பிறப்பெடுப்பது
துடுப்பாய் மாற

கரம் நீட்டியவர் பிறப்பெடுப்பது
பிறரிடம், கைகோர்த்து நிற்க
பூமியில் பிறக்கும் மனிதர் பிறப்பெடுப்பது
புத்துவகைப் படைக்க

பல பொழுதுகள் விடிவதில் பிறப்பது
என்பது புதுமைகள் காண

மானிடா ஆண்டுகள் பல கடந்து
செல்லும் ~ நீ
அதில் ஆயுள் கைதியாக
இருந்து விடாதே
புதியதாய் மாற நினைத்தால்
நவீனத்தையும் கூட்ட புதுமையாய்
படைக்கலாம் புது ஆண்டிலே

பயணத்தில் புதிய
பாதையைத் தெரியும் ~ நீ
உள் வாழ்க்கையிலும் புதிய பாதையைத்
தெரிந்துக் கொள்
அர்ப்பணமாய் புதிய ஆண்டில்
புதுமைகள் செய்ய
புதிதாய்
பிறப்பெடுப்போம் பேரொளி
வீசுவோம்

## பொங்கல் விழா மலரட்டும்

பொங்கல் திருநாளாம் இந்நாளில்
பொய்ம்மை மறையும் நன்நாளில்
பொங்கல் வாழ்த்துதனை நானும்
பொறாமையின்றி கூறிட விழைகிறேன் !

நாட்டில் உள்ளோர் அனைவரும்
நாணயமான வாழ்வுதனை நடத்தட்டும்
நல்லோரும் வல்லோரும் இணைந்து
நானில புத்துலகை அமைக்கட்டும் !

உலகில் வாழும் தமிழரெல்லாம்
உயர்ந்த வாழ்வு நடத்தட்டும்
உரிமைக்குரலை நாளும் ஒலித்திடவே
உண்மையாக யாவரும் உழைக்கட்டும் !

தைமகள் வருகையை எல்லோரும்
தவறாமல் எதிர்க்கொண்டு நோக்கட்டும்
தமிழரின் தன்மானம் உலகில்
தனித்தன்மை யோடு திகழட்டும் !

தைத்திங்கள் முதல்நாள் பிறக்கட்டும்
தரணிவாழ் தமிழர்கள் சிறக்கட்டும்
பொங்கல் விழாவதுவும் மலரட்டும்
பொதுமைக் கருத்துக்கள் உலாவரட்டும் !
எல்லார்க்கும் எல்லாமும் கிடைக்கட்டும்
என்றென்றும் உலகமக்கள் யாவரும்
எல்லா வளமும் பெற்றிட்டே
ஏற்புடனே திகழ்ந்து மகிழட்டும் !

# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா



06

## அழைப்புக்குள்

## ஓர் அழைப்பு

1946ம் ஆண்டு ஆவணி மாதத்தில் நடந்த அப்படுகொலைக்குப் பின் தெரேசா கல்கத்தா நகரைவிட்டு இமயமலை அடிவாரத்தில் உள்ள டார்ஜிலிங் நகருக்குப் பயணமானார். ஆண்டு தோறும் எட்டுநாள் ஞானஒடுக்கம் செய்வதற்கு பள்ளி விடுமுறை நாட்களில் தெரேசா டார்ஜிலிங் செல்வது வழக்கம். என்றும்போல் அன்றும் தொடர் வண்டியில் தான் பயணம். அதற்குமுன் எத்தனையோ முறை வண்டியில் லிங்குக்குத் தொடர் வண்டியில் பயணம் செய்திருக்கின்றார். ஆனால் என்றும் இல்லாத ஒரு திருப்பம் அவரது வாழ்வில் அன்று நடைபெற்றது. அது எவ்வாறு நடந்தது என்று அவரே இவ்வாறு கூறுகின்றார்.

“ஞான ஒடுக்கம் செய்ய நான் டார்ஜிலிங்கை நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தேன். அந்தச் சிறு ரயில் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்த போதுதான் அந்தக் குரலை நான் கேட்டேன். மிகத் தெளிவாக அக்குரல் எனக்கு அறிவுறுத்தியது. சேரிகளில் வாழும் மக்களிடம் செல், அங்கே ஏழைகளிலும் மிக ஏழையாய் வாழும் மக்களுக்கேத் தொண்டு செய்”. இதுவே சகோதரி தெரேசாவின் வாழ்வில் ஏற்பட்ட திருப்புமுனை. 1931ம் ஆண்டில் இரண்டாண்டு நவசந்நியாச வாழ்வின் முடிவில் முதல் வார்த்தைப் பாடுகளைக் கொடுத்த போது அவர் தம்மை முற்றிலும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்திருந்தார். அதில் மனநிறைவு கண்டார். ஆனால் 1946ம் ஆண்டில் ஞான ஒடுக்கம் செய்ய டார்ஜிலிங்குக்குச் சென்று கொண்டிருந்த தெரேசாவின் மனதில் அமைதியில்லை. அவரது 18வது வயதில் இறைவன் அவருக்கு விடுத்த முதல் அழைப்பு. இப்போது தமது 36வது வயதில் அவருக்கு வந்தது வேறு ஓர் அழைப்பு. “லொரேட்டா கன்னியர் மடத்தையும் பாடசாலைத் தலைமை ஆசிரியர் பொறுப்பையும் துறந்துவிட்டுத் தெருவுக்குச் செல். நீ உன் சொந்த நாடாகிய யூகோஸ்லாவியாவையும், பெற்றோர், உற்றார், உறவினரையும் துறந்து இந்தியாவுக்கு வந்தது சொகுசு வாழ்வு வாழ்வதற்கா? வகுப்பறையில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கா? உனக்கு வேறொரு பணி காத்திருக்கின்றது. யாவற்றையும் துறந்து என்னைப் பின்செல்” மிகத் தெளிவாகத் தெரேசா இவ்வார்த்தைகளைக் கேட்டார்.

இனிமேல் அவருக்கு லொரேட்டா கன்னியர் மடத்தில் என்ன வேலை ஏழைகள் வாழும் சேரியில் தான். ஆணித்தரமாக, அழுத்தம் திருத்தமாக சந்தேகத்திற்கு சிறிதும் இடமில்லாமல் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது அந்த அழைப்பு. இதைத்தான் “அழைப்புக்குள் ஓர் அழைப்பு” என அவர் குறிப்பிடுகின்றார். இது நிகழ்ந்தது 1946ம் ஆண்டு புரட்டாதி திங்கள் 10ம் நாளில். அந்த நாளைத் தான் “இறை ஏவுதல் நாள்” எனப் பலர் குறிப்பிடுகின்றனர். தெரேசா நிறுவிய “அன்பின் மறைப் பணியாளர் சபை” அன்றுதான் உருவானது என்றால் அது மிகையாகாது. அச்சபையின் சட்டதிட்டங்கள் அடங்கிய நூலின் தொடக்கத்தில் “நமது துறவறக் குடும்பம் 1946ம் ஆண்டு புரட்டாதி திங்கள் 10ம் நாளில், அன்னை தெரேசா பரிசுத்த ஆவியினால் தனிப்பட்ட அருளால் ஏவப்பட்டபோது உருவானது” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு தெரேசாவின் வாழ்வில் இரண்டாவது முறையாகத் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு புதிய அத்தியாயமே தொடங்கியிருக்கின்றது எனலாம்.

ஆனால் இதை எப்படிச் செயற்படுத்துவது என்றுதான் தெரேசாவுக்குத் தெரியவில்லை. தாம் ஏற்கனவே இருக்கும் துறவற சபையை விட்டு வெளியே சென்றால் தம்மைப் பற்றி மற்ற சகோதரிகள் என்ன நினைப்பார்கள்? ஒரு சபையில் நிரந்தர வார்த்தைப் பாடுகளைக் கொடுத்தபின் அவ்வார்த்தைப் பாடுகளில் இருந்து விலக்கீடு பெறுதல் அவ்வளவு சுலபமான காரியமா? ஆயினும் விலக்கீடு பெறத்தான்வேண்டும். விலக்கீடு தரக்கூடியவர் உரோமையில் வாழும் திருத்தந்தையே அவருக்கு கல்கத்தா பேராயர் வழியாக தெரேசா விண்ணப்பிக்க வேண்டும். இதற்கெல்லாம் தெரேசாவுக்கு உறுதுணையாக இருந்து உதவி செய்யக் கூடியவர் அவருடைய ஆன்மீக வழிகாட்டி அருட்பணி வான் எக்செம் என்னும் குருவானவரே. இவரைப் பற்றி நாம் போகப் போகத் தெரிந்து கொள்வோம்.

தெரேசா வான் எக்செம் அடிகளாரிடம் சென்று தம் உள்ளத்தில் நடந்த போராட்டங்களையும் அவற்றின் முடிவுகளையும் அவரிடம் கூறினார். அவர் கேட்டுக் கொண்டதின் பேரில் யாவற்றையும் ஒரு தாளில் எழுதி அவரிடம் கொடுத்தார். சகோதரி தெரேசா. அதில் தாம் செய்ய விரும்பும் பணிகளைப் பற்றிச் சுருக்கமாக எழுதியிருந்தார். ஏழைகளுக்காகத் தம்மை முற்றிலும் அர்ப்பணித்திருப்பதாகவும், அப்பணிக்கென்று ஒரு தனி வார்த்தைப் பாட்டை எடுக்கப் போவதாகவும் அத்தாளில் தெரேசா குறிப்பிட்டு இருந்தார்.

தெரேசா எழுதிக் கொடுத்த தாளைப் படித்துப் பார்த்தார் வான் எக்செம் அடிகள். இரண்டாம் உலகப் போரின்போது கல்கத்தாவுக்கு சமயத் தொண்டு புரிய வந்தவர் அவர். பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்தவர். அராபி மொழியை நன்கறிந்த அவர் கல்கத்தாவில் வாழ்ந்து வந்த முஸ்லிம் நண்பர்களோடு மிக நெருங்கிப் பழகி வந்தார். கெய்ரோ, பெய்ரூட், தமாஸ்கால், அம்மான் போன்ற இடங்களுக்குச் சென்று இஸ்லாமிய கலாச்சாரத்தை நன்கு கற்றிருந்தவர்.



இரண்டாம் உலகப் போரின் போது கல்கத்தாவில் உள்ள புனித மரியன்னை ஆலயத்தின் பெரிய கட்டிடங்களை இராணுவத்தினருக்கு விட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. அவ்வேளை மரியன்னைப் பாடசாலையில் ஆன்மீகப் பணிபுரிந்து வந்தவர் வான் எக்செம் அடிகளார். அப்போதுதான் அவர் சகோதரி தெரேசாவைச் சந்திக்க நேர்ந்தது. மரியன்னைப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்றிருந்த தெரேசா மிகவும் சுறுசுறுப்புடையவராகக் காணப்பட்டார் என அவர் கூறுகின்றார்.

அவரிடம் தெரேசா தமது எதிர்கால வாழ்வை ஏதோ துறவற வாழ்வில் ஏற்பட்ட அதிருப்தியால் எழுந்தவை அல்ல இறைவனுடைய ஏவுதலால் நிகழ்ந்தவை என அவரால் கண்டு கொள்ள முடிந்தது. அவற்றிற்குத் தாம் ஆதரவு அளிப்பதாகவும் கூறினார். அதன்படியே 1946ம் ஆண்டின் இறுதியில் வான் எக்செம் அடிகளார் கல்கத்தா பேராயர் மேதகு பெரியார் ஆண்டகையைச் சந்தித்து தெரேசாவின் விருப்பத்தை அவருக்குத் தெரிவித்தார்.

பேராயர் தெரேசாவின் எண்ணத்தைச் சோதித்து அறிய விரும்பினார். தெரேசாவின் விருப்பத்துக்கு இணங்கி அவருக்கு வார்த்தைப் பாடுகளில் இருந்து விலக்கீடு அளித்தால் லொரெட்டோ சகோதரிகள் தம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்? கல்கத்தாவின் தெருக்களிலே ஓர் அருட்சகோதரி தன்னந்தனியாக விடப்பட்டிருக்கின்றார் என மேலதிகாரிகளுக்குத் தெரிய வந்தால் தம்மைப் பற்றி அவர்கள் எதுவும் சொல்ல மாட்டார்களா? இது யோசிக்க வேண்டிய விடயம். பொறுத்திருந்து பொறுமையாக ஆராய்வோம் என தெரேசாவுக்கு தெரிவிக்கப்பட்டது.

1947ம் ஆண்டு முழுவதும் தெரேசா பொறுத்திருந்தார். இதற்கிடையில் இந்திய நாடு விடுதலை அடைந்துவிட்டது. விடுதலையுடன் நாடு இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. நாடு விடுதலையடைந்த அவ்விழாவிலும் பஞ்சாபிலும், மேற்கு வங்காளத்திலும் மீண்டும் இனக்கலவரங்களும், வன்முறைகளும் தாண்டவமாடத் தொடங்கி விட்டன. வங்காளத்தை இரண்டாகத் துண்டு போட்ட அரசியல் கோடு பல இடங்களில் மக்கள் வாழும் கிராமங்களையும் பயிரிடும் வயல்களையும் இரண்டாகப் பிரித்துச் சென்றது. வங்காளத்தின் மொத்தப் பரப்பளவில் 28,000 சதுர மைல்கள் இந்திய நாட்டுக்கும், 54,000 சதுர மைல்கள் கிழக்குப் பாகிஸ்தானுக்குமாகப் பிரிக்கப்பட்டது. இதன் விளைவாக இந்துக்களும், முஸ்லிம்களும், குழந்தைகளுமாக ஏறத்தாள ஒரு கோடி அறுபது இலட்சம் பேர் தங்கள் மூட்டை முடிச்சுக்களுடன் இடம்பெயர்ந்து செல்ல வேண்டியிருந்தது.

இந்த இடமாற்றம் பெரிய இடரை ஏற்படுத்திவிட்டது. பஞ்சாப் மாநிலமும் இரண்டாகத் துண்டிக்கப்பட்டது. மேற்குப் பகுதியில் வாழும் இந்துக்களும், சீக்கியர்களும், இந்தியாவுக்கும், கிழக்குப் பகுதியில் வாழும் முஸ்லிம்கள் மேற்குப் பாகிஸ்தானுக்கும் இடம்பெயர்ந்து செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அதன் விளைவு என்ன? இனக்கலவரங்களும், இரத்தக்களரிகளும் தான். கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சை, அமைதி முறையில் தாம் விடுதலை அடைந்தோம் எனப் பெருமையுடன் இந்தியர்கள் சொல்லிக் கொள்கின்றனர். ஆனால் சமயக் காழ்ப்பினாலும், இனவெறியினாலும் வன்செயல் புரியும் புன்மையினின்று அவர்கள் ஏன் நாமும் கூடத்தான் இன்னும் விடுதலை பெறவே இல்லை என்பதற்கு 1946ம் ஆண்டு ஆவணி மாதம் 16ம் நாள் நடந்த வங்காளப் படுகொலையும், 1947ம் ஆண்டு ஆவணி மாதம் 14ம் நாள் விடுதலையின் போது நடந்த வன்முறைகளுமே போதுமான சான்றுகள்.

**தொடரும்**

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்



# உன்னதத்தின் தேவன் தோன்றிவிட்டார்.

வான் வேந்தன் பூமியில்
மனுவானாரே
வார்த்தையின்
வடிவினில்
உருவானாரே
வாழ்வு அளித்திடவே
பிறந்தாரே எம்
வாழ்வினை
உயர்த்திடவே
ஜெனித்தாரே

அன்னை மரியின்
மகனாய்ப் பிறந்தாரே
ஆண்டவர் இயேசு
இம்மண்ணிற்கு
கொடுக்கப்பட்டாரே
அன்பின் வழியை
எமக்கு காட்ட நம்
அன்பராம் இயேசு
உருப்பெற்றாரே

எம் பாவம் போக்க
பாலனாய்
தோன்றினாரே
எம் இருள் அகற்றும்
ஒளியானாரே
எழுந்து நாம் ஒளி வீச
- அவர்
எளிமையாய் மண்ணில்
உதித்தாரே

தாவீதின் குலத்தில்
மலர்ந்தாரே
ராஜாக்களும் அவரை
வணங்க வந்தனரே
பூவுலகை ஆளும்
மன்னன் - இன்று
புல் மேடையில்
தவழ்கின்றாரே

உன்னதத்தின் தேவன்
அவரே
உலகிற்கு மீட்பரும்
அவரே
உனக்காய் எனக்காய்
பிறந்தவர் அவரே
உயிர் கொடுத்து
காத்திடும் உண்மையின்
தீபமும் அவரே

மகிழ்ந்து நாம்
போற்றுவோம்
புகழ்ந்து நாம்
பாடுவோம்
கைகளை சேர்த்து நாம்
தாளம் தாட்டுவோம்
ஆடிப் பாடியே நாம்
கொண்டாடி மகிழ்வோம்

ஏழை எளியவரோடு
நத்தாரைப் பகிர்ந்து
கொள்வோம்
ஏழ்மையாய்
வந்த பாலனை
மகிமைப்படுத்திடுவோம்
இறைவனின் விருப்பம்
நிறைவேற
நாம் இன்றே மனம்
மாறிடுவோம்.

# மனிதனாய் வாழ்ந்த இறைவன்

ஏழ்மையின் வடிவிலே
மனுவானார் - எம்
குறைகள் நீக்கவே
அவர் பிறந்தார்
ஏழைகள் நாம்
உயர்த்தப்பட - அவர்
தாழ்மையின் கோலத்தை
தேர்ந்துகொண்டார்.

மரியன்னை வயிற்றினில்
பிறந்த இவர்
மாசற்றவராய்
வளர்ந்து வந்தார்
தச்சன் மகனாய்
வாழ்ந்த இவர்
தந்தையின் தொழிலிலே
உதவி செய்தார்

யோர்தான் ஆற்றினில்
திருமுழுக்குப் பெற்றார்
அலகையால் மும்முறை
சோதிக்கப்பட்டார்
கலிலேயாவில் தன் பணி
வாழ்வை ஆரம்பித்தார்
தோழர்கள்
பன்னிருவரையும்
தெரிவு செய்தார்

சாதனைகள் பல
கிடைத்திட - தம்
வாழ்வை அவர்
போதனையாக்கினார்
புதுமைகள் பலவும்
புரிந்திட்டார் - பிறர்
புன்னகைத்திட தன்னை
வருத்திக்கொண்டார்

இயேசு, உவமைகள்
வாயிலாகப் பேசினார்
ஊமைகளையும்
பேசச் செய்தார்
பாவிகளோடு
உணவருந்தினார்
பெரும் பாவங்களைக்
கூட மன்னித்தருளினார்

நோய்களையும்
குணமாக்கினார்
பேய்களையும்
விரட்டி விட்டார்
இறந்த இலாசரை
உயிர்ப்பித்தார்
இறைமகன்
இல்லாதாரின் பசியையும்
போக்கினார்.

ஜெஸ்தமணி எனும்
தோட்டத்தில் - இவர்
இரா முழுதும்
வேண்டுதல் செய்தார்
இறுதி உணவை
பகிர்ந்திட - தன்
சீடர்களோடு
பந்தியமர்ந்தார்.

தோழர்களின் பாதம்
கழுவிய இவர் - தன்
தோள்களில்
சிலுவையை சுமந்து
கொண்டார்
கசையடிகள் பலவும்
பட்ட பரமன் -
நமக்காய்
கரடு முரடான
பாதைதனில் நடந்து
சென்றார்

நல்மனம் கொண்ட
தேவன் - நமக்காக
தன் உயிரையும்
தந்தார்
மூன்றாம் நாளிலே
உயிர்ப்பெற்றெழுந்தார்
மரணத்தையும்
வெற்றிகொண்டார்

மாவீரன் இவரை நாம்
வாழ்த்தியே பாடுவோம்
மரணத்தை வென்ற
இவரை நாம்
போற்றியே புகழ்வோம்
உயிர் தந்த இவரை
எம் உறவாகக்
கொள்வோம்
உளத் தூய்மை
பெற்று உன்னதனை
மகிழ்விப்போம்

**ஆக்கம P.M. மேரி பெனடிக்கா**
**பென்றித் அவிசாவளை**




விடுதலைப் பயணம் 17:8-16

இங்கு செபத்தைப் பற்றிய வெளிப்பாடு கூறப்படுகிறது. இஸ்ராயேல் மக்கள் பொதுவாக மோயீசனிடம் இறைவனைப் பற்றி குற்றம் சுமத்தியவாறு முறைப்பாடு செய்வர். இது விசுவாசம் குறைந்த நேரங்களில் நடந்தது. அது மட்டுமல்ல இறைவனைச் சோதித்துப் பார்ப்பதும் நடந்தது. இறைவன் இந்த மக்களைத் தெரிவு செய்து வாக்குறுதி கொடுத்தார். “நீங்கள் எனது மக்கள் நான் உங்களை அன்பு செய்வேன்”. இந்த வாக்குறுதி இறுதியில் உடன்படிக்கையாக மாறியது. இவர்களுக்கு மற்றவர்கள் அநியாயம் செய்யும் போது இறைவன் அநியாயம் செய்பவர்கள் மீது தமது கோபத்தை வெளிப்படுத்துவார். ஆனால் அநியாயத்துக்கு உட்பட்டு பாதிக்கப்பட்டவர்களின் பக்கமே செயற்படுவார்.

1 தெச 5:17 “**இடைவிடாது** இறைவனிடம் வேண்டுங்கள்”

எபிரேயர் 13:15 “அவர் வழியாக **எப்போதும்** நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப் பலியைச் செலுத்து-வோமாக......”

இஸ்ராயேல் மக்கள் கைகளை உயர்த்தி மன்றாடுவது அவர்களது செப முறைகளில் ஒன்றாகும்.

1 அரசர் 8:21 “சாலமோன் ஆண்டவரின் பலிபீடத்தை நோக்கி நின்றுகொண்டு இஸ்ராயேல் சபையார் அனைவர் முன்னிலையில் வானத்திற்கு நேரே தம் கைகளை உயர்த்தி அவர் மன்றாடியது .....”

கைகளை உயர்த்தி மன்றாடுவது செபத்தின் அடையாளமாகும்.

“நாளை நீ போய் அமலேக்கியரை எதிர்த்துப் போரிடு. நான் கடவுளின் கோலைக் கையில் பிடித்தவாறு குன்றின் உச்சியில் நின்று கொள்வேன்”. என்று மோசே யோசுவாவை நோக்கிக் கூறினார்.

- ✷ இறைவனிடம் கேட்பதற்காகக் கைகளை உயர்திச் செபிப்பது அடையாளமாகும்.
- ✷ நாம் இடைவிடாது செபிக்க வேண்டும்.
- ✷ செபத்தில் ஒரு சலிப்புத் தன்மை, களைப்பு, சோர்வு, வரட்சி நிலை வரும். ஆனால் இடைவிடாது தொடர்ந்து செபிக்க வேண்டும்.
- ✷ நாம் பொதுவாகச் சாயும் போது விழாத ஒன்றின் மீதுதான் சாய்ந்து நிற்போம். அதே போன்று உறுதியான இறைவன் மீது சாய்ந்து நின்று விசுவாசத்தோடு தொடர்ந்து செபிக்க வேண்டும். தொடர்ந்து விசுவாசம் தேவை.

விசுவாசத்தில் சோர்வு ஏற்பட்டால் இடைவிடாது தொடர்ந்து செபிக்க முடியாது. ஆமென் என்பது எமது உறுதியை வெளிப்படுத்தும் சொல்லாகும். தொடர்ந்து செபிப்பதில் எமது விசுவாசம் வெளிப்பட வேண்டும். விசுவாசம் இல்லாதவர்கள் இங்கே யுத்தத்தில் தோற்றதைக் காண்கின்றோம். செபத்தில் சலிப்பு களைப்பு வந்தாலும் நிறுத்த வேண்டாம். தொடர்ந்து செபிக்க வேண்டும். செபத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கூடாது. இதன் அர்த்தம் என்ன? இறைவனுடன் இருக்கும் தொடர்பை நிறுத்தக் கூடாது என்பதே.

- ✷ நாம் ஒரு இடத்தில் அமர்ந்து குறிப்பிட்ட விதத்தில் செபிப்பது ஒரு முறை.
- ✷ ஒரு இடத்தில் அமராது தொடர்ந்து செபிப்பது மற்றொரு முறை.
- ✷ அதே போன்று புனித இக்னேசியஸ் கூறுவது போல் சுவிசேச வார்த்தைகளைத் தியானித்துக் கற்பனை பண்ணி அந்த வார்த்தையில் உள்ள நிகழ்ச்சிகளில் உள்ளாகுவது மற்றொறு முறை.
- ✷ தொடர்ந்து நாம் செய்யும் வேலைகளின் ஊடாகவும் தொடர்பு வைத்த வண்ணமே இருப்பது இன்னுமொரு முறை.

இறைவனுக்குச் செவிசாய்க்க வேண்டும். அவருக்குச் செவிசாய்ப்பது என்றால் என்ன?

அவருக்குக் கீழ்ப்படிவதே ஆகும். இறை கட்டளைகளுக்குச் செவிசாய்க்க வேண்டும். இறைவனது மொழியாகிய தூய ஆவியானவரின் வழிநடத்துதலைக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போது புதுமை செய்யக் கூடிய விசுவாசத்தைப் பெறுவோம். ஆகவே நாம் தொடர்ந்து செபிக்க வேண்டும். அதாவது இறைவனுடன் தொடர்ந்து தொடர்பை வைத்துக் கொள்ள வேண்டும். நிறுத்தக் கூடாது. துண்டிக்கக் கூடாது.

**லூக்கா 1–8**

மனந் தளராமல் எப்போதும் தொடர்ந்து மன்றாட வேண்டும். இதைத் தொடர்ந்து செய்யும் செபம் என்பர். செபத்தை இடையில் நிறுத்தி அதைக் கூடாததாக ஆக்கக் கூடாது. கூடாதது ஆக ஆக்குவது என்பது என்ன?

1. களைப்பு, சலிப்பு வந்ததும் செபத்தை நிறுத்தி விடுவது தவறு.
2. திருப்தி, சந்தோசம் செபத்தில் கிடைக்கவில்லை-யென்றால் நிறுத்தி விடுவதும் தவறு.
3. எமது பழக்கப்பட்ட கீழ் மனம் கூறுவதை எதிர்த்து களைப்பு வந்தாலும் விடாமல் செபிப்பது முக்கியம்.



# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

128

**எமது மீட்புக்கு செபம் முக்கியம்.**

லூக்கா சுவிசேசத்தில் 18:1-8 நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும் என்ற உவமையும் கூறப்படுகிறது. மனந் தளராமல் எப்பொழுதும் இறைவனிடம் மன்றாட வேண்டும் என்று கூறப்படுகிறது. “நான் கடவுளுக்கு அஞ்சுவதில்லை மக்களையும் மதிப்பதில்லை என்றாலும் இக்கைம்பெண் எனக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பதால் நான் இவருக்கு நீதி வழங்குவேன். இல்லையென்றால் இவர் என்னுயிரை வாங்கிக் கொண்டே இருப்பார் என்று தமக்குள்ளே சொல்லிக் கொண்டார்”. இங்கே தான் ஒரு பாவியென்பதை நடுவர் ஒத்துக்கொள்கிறார். கைம் பெண் என்பவர் பொதுவாக துன்பம் கஸ்டத்துக்கு உட்பட்டவரே மேலும் நடுவர் ஒரு பாவியாக இருந்தாலும் தனக்கு ஒரே தொல்லை கொடுத்துக் கேட்ட வண்ணம் இருந்ததால் அதை வேண்டா வெறுப்புடனாவது கொடுப்பார். அப்படியானால்

“தாம் தேர்ந்து கொண்டவர்கள் அல்லும் பகலும் தம்மை நோக்கி கூக்குரல் இடும் போது கடவுள் அவர்களுக்கு நீதி வழங்காமல் இருப்பாரா” அப்பாவியாகிய நடுவர் அப்பெண் தொல்லை கொடுத்ததால் நீதி வழங்கினார். ஆனால் இறைவன் தமது மக்கள் தொடர்ந்து கேட்டால் கேட்கும் போதே விடை தராமல் இருப்பாரா? இறைவன் எமது செபத்தை கேட்க வேண்டுமானால் தொடர்ந்து செபித்துக் கொண்டே இருக்க வேண்டும். மோட்சம் செல்ல வேண்டுமானால் தொடர்ந்து செபிக்க வேண்டும். அதாவது தொடர்ந்து இறைவனோடு தொடர்பில் இருக்க வேண்டும். துண்டிக்கக் கூடாதா.

தொடரும்

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**



# இறைவார்த்தை வழிபாடு

## WLX

- பேதுரு -

### ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா (08.01.2017)

**வாசக விளக்கம்:** கடவுள் தன்னையே இந்த உலக மக்களுக்கு வெளிப்படுத்தும் திருக்காடசி விழாவில் பங்கு கொள்ள வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே! தேடல் இல்லாத மனிதனோ, மனித சமூகமோ இருக்க முடியாது. கலாச்சாரத் தேடலின் விளைவே முன்னேற்றம். தேடல் மனிதனை உந்தித்தள்ளும் ஒரு ஊக்கசக்தி, நம்பிக்கையும் விசுவாசமும் தான் மூன்று ஞானிகளையும் உந்தித்தள்ளியது. மீட்பின் ஒளியைக் கண்டு கொள்ள ஏவியது. இவ்விழாவானது இறைமகன் இயேசு உலக மக்கள் அனைவருக்கும் தரிசனம் கொடுத்ததை நமக்கு நினைவூட்டுகின்றது. அத்துடன் இயேசுவின் மீட்புச் செயல் அனைவருக்கும் உரித்தானது அனைவருக்கும் பொதுவானது என்பதையும் பறைசாற்றுகின்றது. ஞானிகள் வந்தனர் கண்டனர், பாதை மாறினர். நாமும் ஞானிகளாவோம் இயேசுவைத் தேடி வருவோம். அவர் தரும் மீட்பை அடைவோம். நம் வாழ்க்கை முழுவதையும் மாற்றுவோம். இதற்கு வேண்டிய அருளைப் பெற்றிட இறைவனிடம் மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : எசாயா 60:1-6**
ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது

**பதிலுரைப் பாடல் :** ஆண்டவரே எல்லா இனத்தாரும் உமக்கு ஊழியம் செய்வார்கள்.

**இரண்டாம் வாசகம் : எபேசி 3:2-3, 5-6**
பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளர் என இப்போது வெளிப்படுத் தப்பட்டுள்ளது.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி:**
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவரின் விண்மீன் எழக்கண்டோம். அவரை வணங்க வந்திருக்கின்றோம் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத் 2:1-2**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவராம் இயேசுவையும் அவரது வார்த்தை -களையும் என்றும் வெளிப்படுத்தும் தூய திருச்ச -பையை ஆட்சி செய்யும் திரு அவையையும் அதன் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனவைருக்கும் உமது தரிசனத்தையும் ஆசீரையும் பொழிந்தருள வேண்டுமென்று...

ஏரோதுவைப் போன்று சூழ்ச்சிகள் நிறைந்த மனநிலையுடன் வாழும் அரசியல் சமூகத் தலைவர்களும் மக்களும் மனம் மாறி உண்மையைத் தேடிக் கண்டு கொண்டு மக்களுக்கு வழிகாட்டவும் மக்களை மகிழ்விக்கவும் வேண்டிய மனதை எல்லோருக்கும் வழங்கிட வேண்டுமென்று...

ஆண்டவர் இயேசுவின் திருக்காட்சி விழாவைக் கொண்டாடும் நாம் அனைவரும் இந்த விழா எமக்கு விடுக்கும் செய்தியைப் புரிந்து கொண்டு இயேசு அனைத்து மக்களுக்கும் உரித்தானவர் எனவே அவரை அனைவருக்கும் வெளிப்படுத்தி அவரைப் பின்பற்றி வாழ்ந்திடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு (15.01.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு தினத்திலே இறைவனுக்கு நன்றிப் பலி செலுத்த ஒன்று கூடிவந்துள்ள இறை உறவுகளே, அன்பு நெஞ்சங்களே! இன்றைய வார்த்தை வழிபாடானது இயேசு கிறிஸ்துவே வாக்களிக்கப்பட்ட மீட்பர், வரவிருக்கும் மெசியா, வழிகாட்டும் நல்ல ஆயன் என சுட்டிக் காட்டுகின்றன. இதன் மூலம் மீட்புப் பணி புரிய ஆண்டவர் நம்மையும் அழைக்கின்றார் இதற்கு இயேசுவின் தன்னல மற்ற மனப்பான்மை நமக்கு அவசியம். அத்தடன் தூய மனப்பான்மையும் நமக்கு இருக்க வேண்டும். திருச்சபையிலும் பலரும் பலவிதமான பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவை அனைத்தும் மனித நேயத்தை நோக்காகக் கொண்டே நிகழ்த்தப்படுகின்றன. நாமும் எமது பணிகளின் மூலம இயேசுவை பிறருக்கு சுட்டிக்காட்ட வேண்டும் எனவே அதிகாரம் சுயநலம் பதவி மோகம் கொண்ட பணிகளாக இல்லாமல் பொதுநலனும் மனித நேயமும் கொண்ட பணிகளாக இருக்க இறைவனிடம் மன்றாடுவோம். பலியில் இணைவோம்

**முதல் வாசகம் எசாயா 49:3,5-6**
உலகம் முழுவதும் மீட்பு அடைய உன்னை ஒளியாக ஏற்படுத்தினோம்

**பதிலுரைப்பாடல் :** ஷஉமது திருவுளம் நிறைவேற்ற ஆண்டவரே இதோ வருகிறேன்

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 1:1-3**
நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.

**நற்செய்திகது முன் வாழ்த்தொலி**
அல்லேலூயா அல்லேலூயா வாக்கு மனிதரானார். நம்மிடையே குடிகொண்டார். அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அளித்தார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவான் 1:29-34**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

இருள் நிறைந்த உலகிற்கு ஒளி வழங்க என்றும் முனைப்புடன் செயல்படும் இறை ஊழியர்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவியர் பொதுநிலையினர் ஆகிய அனைவரும் நற்செய்தியின் வழியில் உலகை ஒளிர்விக்க அயராது உழைத்திட வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

நாட்டின் தலைவர்களும் மக்களும் இயேசுவின் பெயரால் வறுமையில் வாடுவோருக்கு அடைக்கலம் கொடுக்கவும், அநீதியைக் களைந்து சாதி சமய தீவிர வாத பேதங்களைத் துடைத்தெறிந்து சமுதாயத்தில் அனைவருக்கும் சமநீதி வழங்கி அனைவருக்கும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வை வழங்கிடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

நல்ல ஆயனாம் கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் அனைவரும் போதனைப் பணி, கல்விப் பணி, ஆற்றுப் படுத்தும் பணி குணப்படுத்தும் பணி, மருத்துவப் பணி மனித நேயப் பணி போன்றவற்றில் ஈடுபட்டு அனைவருக்கும் இயேசுவை வெளிப்படுத்தி அவரை மாட்சிமைப்படுத்த வேண்டிய வரங்களை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

## கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்




ஹெரானை மத்துகம பங்குகளுக்கு சொந்தமான தோட்டங்களில் நத்தாரை முன்னிட்டு நத்தார் ஒன்றுகூடல் மார்கழி மாதம் முழுவதும் கிட்டத்தட்ட 13 தோட்டங்களில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்வுகளில் கத்தோலிக்க மக்களோடு ஏனையவர்களும் உற்சாகத்தோடு பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது. மேலும், நத்தார் செய்தியானது மேதகு ஆயர் இம்மானுவேல் ஆண்டகை (காணொளி வாயிலாக) அவர்களால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சிகளுக்கு அருட்தந்தை தேவசீலன், அருட்தந்தை மில்பா (cmf), அருட்சகோதரி மேரி, திருவாளர் ஜஸ்டின் அவர்களும் அவர்களது குழுவினரும், களுத்துரை வட்டார இளைஞர் முன்னனியினரும் இந்நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு உதவி செய்தார்கள். **தகவல் : அருட்பணி. ஒனாசியஸ் அடிகளார்.**




### முத்திப்பேறு பெற்ற [அருளாளர்]

## தேவசகாயம் பிள்ளை

இவர் தமிழ் மண்ணில் பிறந்தவர் என்பதால் தமிழர்கள் அனைவருக்கும் தனிப்பெரும் சிறப்பாகும். இப்பேறு பெற்ற தேவசகாயம்பிள்ளை 1712ஆம் ஆண்டு சித்திரை மாதம் 23ஆம் திகதி குமரிமாவட்டம் நட்டாளம் என்னும் ஊரில் பிறந்தவர். பிறப்பால் நீலகண்டன் என பெயர் சூட்டப்பட்ட தேவசகாயம்பிள்ளை தனது அறிவுக்கூர்மையாலும் திறமையாலும் அரசனின் முக்கிய அவை உறுப்பினராக இடம் பெற்றார். மார்த்தாண்டவர்மனின் படைத்தளபதியான டச்சுக்காரர் யுஸ்டாக்கியுஜ் தே லன்னோயின் நட்பைப் பெற்றதேவசகாயம் பிள்ளை அவரிடமிருந்து கிறிஸஸ்தவ மறை உண்மைகளைக் கற்று, 1741ஆம் ஆண்டு வடக்கன்குளம் பங்குக்கோவிலில் திருமுழுக்குப் பெற்று, தனது பெயரை லாசர் என்று மாற்றிக்கொண்டார்.

இவரது மனைவி பார்கவியும் மனம் மாறி ஞானப்பூ (தெசரா) என்ற பெயரைப் பெற்றுக்கொண்டார். இவர் மனம் மாறியதை இவரது இனத்தவரும் சமூகத்தினரும் ஏற்கவில்லை. இவர் மீது போலிக்குற்றச்சாட்டுக்கள் ஒன்றன்மீது ஒன்றாக சுமத்தப்பட்டு இவரது வாழ்க்கை துன்பமாக மாறியது.

மூன்று ஆண்டுகள் சொல்லோணாச் சித்திரவ -தைகளுக்கு உள்ளாக்கப்பட்டார். இருப்பினும் தனது விசுவாசத்தில் இன்னும் உறுதியாக இருந்தார். இவரை அவமானப்படுத்தும் நோக்கில் எருமை மேல் ஏற்றப்பட்டு மக்கட்கூட்டம் நிறைந்த தெருக்களின் வழியாக ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.

பின்பு இவரைக் கொல்ல நினைத்த இவரது எதிரிகள், போர் வீரர்களை ஏவி போர் வீரனை அழைத்து அவனது துப்பாக்கியால் சுடச் செய்தனர். எனினும் தோட்டாக்கள் இவரைத் தொட மறுத்தன.

ஒரு போர்விரனை அழைத்து அவனது துப்பாக்கியை தொட்டு ஆசீர்வதித்து தன்னை விரும்பினால் சுடலாம் என்று பணித்து வீரமரணம் அடைந்தார். இவரது சீடர்கள் இவரது உடலை கோட்மாறு என்னும் இடத்தில் அமைந்திருந்த புனித சவேரியார் ஆலயத்தில் அடக்கம் செய்தனர். உடனடியாகவே பெருமளவில் மக்கள் இவரது கல்லறையில் செபம் செய்து புதுமைகள் அனுபவித்தனர். முத்திப்பேறு பெற்ற தேவசகாயம் பிள்ளையின் உடையும் சில உடைமைகளும் இன்றும் வடக்கன் குளம் ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தற்போது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் இவர் புனித நிலைக்கு உயர்த்தப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**“கிறிஸ்துவின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையின் வழியாக கடவுளை உறுதியான நம்பிக்கையோடு அனுகும் உரிமையும், துணிவும் நமக்கு கிடைத்துள்ளது”**

# புனித யோசேவ்வாஸ் முனிவரின் வாழ்க்கைச் சுவடுகள்

"இலங்கையின் அப்போஸ்தலர்" என்ற சிறப்புடன் அழைக்கப்பட்ட புனித யோசேவ்வாஸ், இலங்கைக் கத்தோலிக்கர்கள் ஒவ்வொருவராலும் அறியப்படவேண்டியவர். இலங்கை ஒல்லாந்தரின் ஆட்சி அதிகாரத்தின் பிடியில், கத்தோலிக்க மதம் நசிக்கப்பட்டு, அழித்தொழிக்கப்பட்ட, உயிராபத்து மிகுந்த சூழலில் இலங்கைக்குள் நுழைந்து, கத்தோலிக்கத்துக்கு புது இரத்தம் பாய்ச்சி, மறுமலர்ச்சியை ஏற்படுத்தி நாடு முழுவதிலும் சத்திய மறை தளைக்கச் செய்த இறைதூதன் அவர். அவரது வாழ்வின் முக்கிய வரலாற்றுக் கட்டங்களை இக்கட்டுரை வெளிப்படுத்து -கின்றது.

## பிறப்பும் இறை ஊக்கமும்.

இந்திய துணை கண்டத்தில் அதன் மேற்கே அமைந்துள்ள, மலையும், நதியும், இயற்கை வனப்பும் நிறைந்த கோவைப் பிரதேசத்தில், கிறிஸ்தோப்பர் வாஸ், மரியா டி மிரண்டா ஆகிய பிரமாணிக்கமிக்க, கொங்காணிய பிராமணிய கிறிஸ்தவ தம்பதியினரின் ஆறு குழந்தைகளில் மூன்றாவது குழந்தையாக 1615ம் ஆண்டு சித்திரை மாதம் 8ந் திகதி யோசேவ்வாஸ் பிறந்தார். பக்தியும் பிரமாணிக்கமும் மிக்க கிறிஸ்தோப்பவர் வாசின் குடும்பச்சூழல் யோசேவ்வாசை இறைவழியில் புலன் செலுத்தி வளரச் செய்தது. தனது மகனின் எதிர்காலத்தினை திருஷ்டியினால் உணர்ந்தோ என்னவோ கிறிஸ்தோப்பர் வாஸ் "1615 சித்திரை 21ம் திகதி எனக்கொரு மகன் பிறந்து ஞானஸ்நானம் அளிக்கப்பட்டான். அவனுக்கு யோசேவ் என பெயர் சூட்டப்பட்டுள்ளது. காலம் வரும்போது அவன் பெரியவனாய் இருப்பான்" என ஒரு எதிர்வு கூறலை எழுதி வைத்துள்ளார்.



அவரது சொந்த ஊரான பெனாலிம்மில் உள்ள புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்திலேயே இவருக்கு திருமுழுக்கு அளிக்கப்பட்டது.

கோவையிலுள்ள "பெனோலிம்" என்னும் கிராமமே யோயேவ்வா-ஸின் பிறப்பிடமாகும். (தாயின் கிராமம்) வளர்ந்தது தந்தையின் சொந்த இடமான "சண்கோலில்" யோசேவ்வாஸ் சிறிய வயதில் இருந்தே இறை ஊக்கத்தில் வளர்வதற்கு அவரது குடும்பச்சூழல் காரணமாக அமைந்திருந்தது. கிறிஸ்தோப்பர் வாஸின் இரண்டு விதவை சகோதரிகள் அவர்களுடன் வாழ்ந்த காரணத்தினால், வழிபாடுகள், செபங்கள், செபமாலைத்தியானங்கள் என பக்திமுயற்சிகளில் பாலப்பருவத்திலிருந்தே ஈடுபட்டார். சிறிய வயதிலேயே கதவை சாத்திவிட்டு தியானம் செய்யும் அளவுக்கு ஊக்கம் பெற்றிருந்தார். இந்த அடிப்படை வாழ்வியலே அவரை இறை ஊழியத்திற்கு இட்டுச் செல்லும் அத்திவாரமாக அமைந்திருந்தது.

## கல்வி

யோசேவ்வாஸ் தனது 5வது வயதில் அவர்களது சொந்த கிராமத்திற்கு அருகில் இருந்த (சண்கோலில்) ஆரம்ப பாடசாலையில் சேர்க்கப்பட்டார். போர்த்துக்கேயத்தை அங்கு கற்றார். கெட்டித்தனமான மாணவனாக இருந்தது மட்டுமன்றி பிறருக்கு உதவுதல், செபித்தல் போன்ற உயர்ந்த பண்புகளால் பலராலும் பாராட்டப்பட்டார். இவரது பாலப்பருவத்தில் பயபக்தியை அவதானித்த தந்தையார் தேவசேவைக்கு ஒப்படைக்க நினைத்தார். அதற்காக பெனாலிம்மிலே உள்ள மேன்நிலைப்பள்ளியில் அவரைச் சேர்த்தார். அங்கும் தனது நற்பண்புகளால் கவரப்பட்டார். இங்கு லத்தீன் மொழியை கற்றுத் தேர்ந்தார். 15 வயதானவுடன், மேற்படிப்புக்காக கோவைப்பட்டணத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு இயேசுசபைக்குருக்கள் நடத்திய புனித சவேரியாரால் நிறுவப்பட்ட "புனித சின்னப்பர் கல்லூ-ரியில்" சேர்க்கப்பட்டார். புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் இருந்த ஆச்சிரமம் ஒன்றில் இருந்தவாறு கல்லூ-ரிப்படிப்பினைத் தொடர்ந்தார். வரலாறு, இதிகாசம், இலக்கியம், தர்க்கம், நீதிநூல், சோதிடம், சங்கீதம் போன்ற பாடங்களை கற்றுத்தேறினார். அவர் தேர்ந்தெடுத்த பாடங்களும் அவரது இறை போதக வாழ்வுக்கு உதவின.

புனித சின்னப்பர் கல்லூரியில் இருந்து குருத்துவக் கல்விக்காக புனித தோமஸ் உயர் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். புனித சாமிநாதர் சபைக்குருக்கள் நடத்திய அக்கல்லூ-ரியில் ஆர்வத்துடன் தத்துவயியல், இறையியல் துறைகளை கற்று கல்வியைத் தொடர்ந்தார். செபமாலை மாதா ஆலயத்தில் இருந்த குருத்துவ விடுதியில் தங்கியே கல்வியைத் தொடர்ந்தார். இறைபக்தி அவரில் ஊற்றெடுத்து பாய்ந்தது. கல்வியில் சிறந்து விளங்கினார் அவரை பரீட்சித்த சாமிநாதர் சபை பண்டிதர் "யோசேவ்வாஸ் அறிவு சாதுரியத்தில் மிகுந்த முதிர்ச்சி உள்ளவர்" என்று விசேட சான்று பகர்ந்துள்ளனர். குருமடத்தில் இருந்த காலத்தில் செபதவங்களில் அதிக ஈடுபாடு காட்டினார். நற்கருணைக்கு முன் அதிக நேரத்தினை செலவிட்டு கோவிலிலேயே உறங்கியும் போய்-விடுவாராம். அந்தளவுக்கு இறைஉறவை வளர்த்துக் கொண்டார். பிற்பட்ட கால சவால் மிகுந்த வாழ்வுக்கு இறைவன் அவரை தயார்படுத்தினார் போலும்.

## குருத்துவ அபிஷேகம்

1671ம் ஆண்டு தனது 20வது வயதில், முன் குருத்துவ தொண்டர் நிலைகளைப் பெற்று திருச்சபை ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்தார். 23வது வயதில் 1674இல் உபதொண்டர் அபிசேகத்தினை பெற்றார். இவரை அபிஷேகம் செய்தவர் கெயிற்றியை சேர்ந்த பிராமணியக்குலத்தைச் சேர்ந்த "டொன் குஸ்ரோடியோ டி பிறேரே" ஆவார். இவர் உரோமிலே படித்து குருப்பட்டம் பெற்றவர். பாப்பரசரின் பிரதிநிதியாக இருந்தவர்.

1676ம் ஆண்டு யோசேவ்வாஸ் தனது 25வது வயதில், அதிமேற்றாணியார் "அன்ரோணியூ பிரந்தாவு" வினால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அவர் குருவானது கண்டு கிறிஸ்தோப்பர்வா-ஸின் குடும்பம் பேருவகை அடைந்தது. இறைஊழியத்தின், ஒரு பெருந்தூணாக இலங்கைத் திருச்சபையைக் கட்டி எழுப்பப்போகின்ற மறைத்தூதுவனாக அவர் அபிஷேகம் செய்யப்படுகின்றார் என்பதனை யாரும் உணர்ந்திருக்கவில்லை.

## தொடக்கப் பணிகள்

குருவாக அபிஷேகம் செய்யப்-பட்டதும் சொந்த இடமான "சண்கோலில்" பணிசெய்ய அனுப்பப்பட்டார். சண்கோலிலும், அயற்கிராமங்களிலும் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றினார். பக்தியுடன் பலிப்பூசை நடத்துவதிலும், இறைவார்த்தையை, பிரசங்கிப்பதிலும், பாவசங்கீர்த்தனம் கேட்டல், இறந்தோருக்காக செபித்தல் போன்ற விடயங்களிலும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார். "ஆன்மாக்களின் தேவையையும், அவற்றின் புனிதத்துவத்தை பேணவும் அவர் ஆரம்ப காலத்தில் இருந்தே பணிசெய்யத் தொடங்கினார்.அவரது பிரசங்கத்தினால் பலரும் ஈர்க்கப்பட்டார்கள். சிறந்த பிரசங்கியாக பெயர் பெற்ற இவர் பலரின் மனமாற்றங்களுக்கு தூண்டியாக இருந்தார். அப்போதைய கோவைப் பிராந்தியத்தின் அரச மேலாளராக இருந்த "டொன்றொத்திற்கு கொஸ்தா" முதலாக இவரது உபதேசம் மனம்மாறி வாழ்வையும் மாற்றி நிர்வாகத்தையும் சீர்செய்யுமளவுக்கு யோசேவ்வாஸின் ஆன்மீக போதனை வலுவானதாக இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர் சண்-கோலில் செயலாற்றிய 5 வருடங்களுக்குள், தனது எதிர்காலத்தின் கடுமையான பணிக்கான உடன் ஊழியர்களை உருவாக்கும் பணியினை தன்னை அறியாமலேயே மேற்கொண்டிருந்தார். அங்கு இலத்தீன் பாடசாலை ஒன்றினை தாபித்து, இளைஞர்களை ஒன்றிணைத்து, கல்விப்பணியை ஆரம்பித்தார். இப்பணியின் மூலம் உருவாகி குருக்களாக மாறிய யோசே கார்வாலோ, யோசே தே மெனரோஸ் போன்றவர்கள் இவருக்கு பின்நாளில் இலங்கைக்கு வந்து உடன் ஊழியம் செய்தனர்.

## கன்னடத்தில் மகத்தான சேவை

சண்கோலில் யோசேவ்வாஸ் பணியாற்றிக் கொண்டிருந்த காலத்திலேயே, இலங்கையில் நிலவிய துர்ப்பாக்கிய சூழலையும், ஒல்லாந்தரின் கொடுங்கோண்மை ஆட்சியால் கத்தோலிக்கம் முற்றாக ஒடுக்கப்பட்டிருப்பதனையும் அறிந்தார். இலங்கைக்குச் சென்று பணியாற்ற வேண்டுமென்ற பேரவா அவருக்குள் துளிர்த்திருந்தது. ஆனால் இலங்கைக்கு இலகுவில் செல்ல முடியாது என்பதும் போவது தற்கொலைக்கு ஒப்பானது என்பதையும் கோவைத் திருச்சபை நன்கறிந்திருந்தது. எனவே யோசேவ்வாஸினை அங்கு செல்வதற்கு எந்த சாதகமான குறிப்பையும் மேற்றாசனம் காட்டவில்லை. இறைவனும் அவரை நன்கு தயார்படுத்த நினைத்தாரே என்னவோ இலங்கையை ஒத்தவகையான சிக்கல்கள் நிறைந்த கன்னட மாநிலத்திற்கு பணிதேடிக் கொள்ளும் அழைப்பு யோசேவ்வாசிற்கு கிடைத்தது. அதனை மகிழ்வுடன் ஏற்று, தனது யோசேவ் கர்வாலோவையும் அழைத்துக் கொண்டு 1681 பங்குனி நடையாகவே சென்றார். அங்கு அனைத்தும் பாழ்பட்டுக்கிடந்தன. ஆன்மீக வழிகாட்டிகள் இன்றி பாழ்பட்டிருப்பது கண்டு மனம் வருந்தினார். சிதறிக்கிடந்த மக்களை ஒன்றிணைத்து சிறிய சிறிய கோவில்களை அமைத்து வேதத்திற்குப் புத்துயிர் அளித்தார். பாடாசாலைகளை நிறுவி கல்வியைத் தொடர வழி செய்தார். அரசியல் கலகங்களால் இன்னல்பட்ட மக்களுக்கு தன்னிடமிருந்த பொருள் பணம் யாவற்றையும் கொடுத்து உதவினார். ஊழியர்களிடம் பிச்சைபோல் உணவு பெற்றே தனது பசியையும் போக்கினார். துர் நடத்தையாளர்கள் சிலரை கண்டித்தால், கல்லெறிபட்டு படுகாயமடையுமளவுக்கு பணிசெய்தார். அதுமட்டுமன்றி கத்தோலிக்க பரிபாலகர்களுக்கும், மறை அறிவிப்பாளர்களுக்கு இடையிலான முரண் அங்கு பெரும் பின்னடைவைக் கொடுத்திருந்தது. எவ்வளவோ தேவைகள் இருந்தும் அங்கு குருக்கள் அனுப்பப்படவில்லை. இவற்றையெல்லாம் கண்டித்து துணிந்து அதிமேற்றாணியாருக்கு கடிதங்கள் வரைந்தார். அவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அக்கடிதங்களால் அவரை எதிரியாகவே நோக்கினார். ஆனால் மனந்தளராது மூன்று ஆண்டுகள் கன்னட தேசத்திலே பணிசெய்தார். அவர் ஆற்றிய சேவையும், பணியும் கன்னடக் கடிதங்களின் முற்சார்பினால் கண்டு கொள்ளவில்லை.

## மிலா கிறிஸ்தவ துறவற சபையில்

இலங்கைக்குச் சென்று பணியாற்ற வேண்டுமென்ற பேராவலை இறைவன் அவருள் தோற்று-வித்திருந்த காரணத்தால் அதை நோக்கி அவரை வழிநடத்தவோ என்னவோ அவரின் மனதில் மாற்றத்தை உருவாக்கி, “மிலா கிறிஸ்தவர் துறவற சபையில்” அவரை இணைய வைத்தார். 1685ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ம் திகதி, யோசேவ்வாஸ் மிலாகிறிஸ்தவ துறவியர் சபையில் இணைந்து கொண்டார்.

இவரது தியாகம், அர்ப்பணிப்பு, தாழ்மை அனைத்தும் அச்சபையினரை வெகுவாகக் கவர்ந்தது. ஆறு மாதங்களில் அச்சபையினரின் தலைவராகவும் மாற்றினார்கள். சுதேச சபையாகிய அச்சபையில் ஒழுங்கான சட்டதிட்டங்கள் இல்லாதது கண்டு, அதனை சீர்செய்ய விரும்பிய யோசேவ்வாஸ் புனித பிலிப்நேரியாரின் தியான சம்பிரதாயங்களை பின்பற்றி சபை ஒழுக்கங்களை தயாரித்தார். மிகக் குறைந்த துறவிகளே இருந்த சபையில் அதன்பின் பலர் இணையத் தொடங்கினர். சபையை ஒழுங்குபடுத்தியவர் தலைமைப் பொறுப்பினை மீண்டும் “கொஸ்தா” என்ற மூத்த துறவியிடம் ஒப்படைத்துவிட்டு இறுதியாக சபையிலே இணைந்த பவுலே தே சூசாவையும், ஸ்ரெவனோ தேசிக்ரேயையும் அழைத்துக் கொண்டு இலங்கைக்குப் புறப்பட்டார். இலங்கையில் இருக்கும் ஆபத்தை விளங்கிக் கொண்ட இரு துறவியரும் மறுத்துத் திரும்பினர். தனது உறவினரான யுவாமை மட்டுமே அழைத்துக் கொண்டு முனிவர் இலங்கைப் பயணத்தினை தொடர்ந்தார். எனினும் உடனடியாக இலங்கை வரமுடியவில்லை. சிறிதுகாலம் கன்னடத்திலும், கேரளாவிலும் பணியாற்றினார். இக்காலத்தில் அவர் தமிழை நன்கு கற்றார். அங்கு இயேசுசபைக் குருமார் அவருக்கு உதவி புரிந்தனர்.


## இலங்கையில் முனிவர்

1687ம் ஆண்டு பங்குனி மாதம் தனது 35வது வயதில் 10வருட குருத்துவ அனுபவத்துடன் இலங்கைக்குப் புறப்பட்டார். இயேசுசபைக் குருமாரின் ஆலோசனையின்படி தனது குரு உடையை களைந்து, கம்பனியினரின் அடிமை அணியும் காவி உடையை அணிந்தவாறு தூ த்துக்குடி வந்துசேர்ந்தார். தூத்துக்குடியில் இருந்தும் உடனடியாக பயணம் மேற்கொள்ள முடியவில்லை. அப்போதைய போக்குவரத்து நடைமுறைகள் மிகவும் கடுமையாக இருந்தன. இவர் ஒரு குரு என்றும், மாறுவேடத்தில் இலங்கைபுகவுள்ளார் என்பதனையும் அறிந்து கொண்ட தூத்துக்குடி அதிகாரி கடுமையான உத்தரவு பிறப்பித்தான். முனிவர் மிகவும் உருக்கமுடன் இறைவனை வேண்டினார். குறுகிய காலத்தில் அவன் நோய்வாய்ப்பட புதிய அதிகாரி வந்தான். அவனிடம் இரப்பவர் போல் வேடமிட்டு சென்ற முனிவர் உத்தரவு பெற்று இலங்கைக்குப் பயணமாகினார். அங்கிருந்த ஒரு பறங்கி அவருக்கு உதவி செய்வதாக வாக்களித்தான்.

தூத்துக்குடியில் இருந்து நான்கு நாட்கள் பயணத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவேண்டிய படகு, இடையில் ஏற்பட்ட பெரும்புயலில் அகப்பட்டு திசை தெரியாமல் அலைந்து 20 நாட்களின் பின்னரே மன்னார் துறைமுகத்தில் கரை இறங்கியது. நல்ல உணவு இல்லாமலும் புயலின் கோரத்திலும், நன்கு களைத்துப்போன இருவரும் குற்றுயிராகவே இலங்கை வந்து சேர்ந்தனர். கையில் பணம் ஏதுவுமில்லாமல் வந்த முனிவர், யுவாம் இரந்து வாங்கி வரும் உணவை உண்டே தேறினார். சிலகாலம் ஆறியபின் அங்கிருந்து ஒரு அரச படகில் ஏறி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். மேன்மைமிக்க இறைபணிக்காக தன்னை அர்ப்பணித்த முனிவர் இலங்கை வருவதற்கு முன்னரே அனுபவித்த துன்பங்கள் போதும் போதுமென்றாயின.

## யாழ்ப்பாணத்தில்

1687 வைகாசி மாதமளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த முனிவர் தங்குவதற்கு இடந்தேடி அலைந்து ஈற்றில் ஒரு பெண்ணில் தயவில் அவரின் வீட்டுத் திண்ணையில் உறங்கினார். யுவான் இரந்து கொண்டுவரும் உணவை உண்டு ஓரிரு நாட்களை கடத்தியபோது சாத்தான் அவரை மேலும் சோதித்தான். தீராத வயிற்றோட்ட நோயினால் முனிவர் பாதிக்கப்பட்டார். வைசூரி நோய் நடைபெற்ற காலமென்பதனால் அவரை வலுக்கட்டாயமாக



அழைத்துக்கொண்டு போய் காட்டுப்பகுதியில் விட்டனர். யுவாமும் நோயில் விழுந்தார். மரணத்தின் விளிம்புவரை அவர்களை சாத்தான் கொண்டு சென்றான். ஈற்றில் இறைவன் அருளால் ஒரு வழிப்போக்கரான பெண்ணின் தயவினால் அவள் கொடுத்த கஞ்சியை குடித்து தேறினார்கள்.

நோயினாலும் பசியினாலும் மெலிந்து, நீண்ட தாடியுடனும், இரப்பவர்க்குரிய அடிமை உடையுடனும் உண்மையான இரப்பவர்களாகவே மாறி கத்தோலிக்கர்களை தேடத் தொடங்கினார்கள். கழுத்திலே நீண்ட செபமாலை ஒன்றை அணிந்திருந்தார். அதுவே அவர் தன்னை அடையாளம் காட்ட வைத்துக்கொண்ட ஒரே அடையாளம். யாழ்ப்பாணத்தில் கல்வின் மதத்தைத் தவிர எதையும் பின்பற்ற முடியாது என்ற இறுக்கமான சட்டத்தால் கத்தோலிக்கர்கள் எவரும் தம்மை நேரடியாக வெளிப்படுத்த முடியாதிருந்தனர். எனினும் அவரை அறிந்த சிலர் அவர் யாரென கண்டுபிடித்தனர். “பவுலு தேபர் ரொஸ்” என்ற பறங்கிய செல்வந்தர் மூலம் தாபரிக்கப்படடு அவர் யாழ்ப்பாணத்தில் இருப்பது ஆபத்து என கூறப்பட்டு சில்லாலைக்கு இடம் மாற்றப்பட்டார். அங்கு கோவிலை எண்சார் வீடு போல மாற்றிய மூப்பர் குடும்பத்தை சூழ்ந்த பிரமாணிக்கமான கத்தோலிக்க சமூகம் இருந்தது. அவர்களை சின்ன ரோமை என டச்சாரர் அழைக்கும் அளவுக்கு அம்மக்கள் வேதத்தில் உறுதியாக இருந்தனர். ஒரு குருவானவர் வந்துவிட்டார் என்று அறிந்ததும் அவர்களின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. பாலைவனத்தார் கண்ட நீரூற்றைப்போல யோசேவ்வாஸின் வருகை சில்லாலை மக்களுக்கு அமைந்திருந்தது. அங்கு தேவ கடமைகள் அனைத்தையும் துரிதமாய் முனிவர் மேற்கொண்டார். பல அற்புதங்கள் சில்லாலையில் நடைபெற்றதாக கூறுவர். இரவுவேளைகளில் வழிபாடுகளையும், திருப்பலிகளையும் முனிவர் நிறைவேற்றினார்.

## சில்லாலையில் கலாபனை

யாழ்ப்பாணத்தில் நீறு பூத்திருந்த கத்தோலிக்க விசுவாசம் முனிவரின் வருகையினால் பிரகாசமாய் பற்றி எரியத் தொடங்கியது. நாலாபக்கமும் செய்தி பரவியது. 1689 மார்கழி கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட முனிவர் விரும்பினார். மூன்று இடங்களில் திருப்பலி நிறைவேற்வதற்கு முனிவர் திட்டமிட்டார். இச்செய்தி, ஒல்லாந்த தேசாதிபதி என்றிக் வான்றீட்டின் காதில் எட்டியது. அவன் கொதித்தெழுந்து முனிவரை பிடிப்பதற்கு திட்டமிட்டான். கிறிஸ்மஸ் திருப்பலி முடிந்ததும் வான்றீட்டின் கூலிப்பாட்டாளத்தினர் சில்லாலையில் புகுந்து மிகப்பெரிய கலவரம் செய்து 300 பேர்வரையில் கைது செய்தனர். இதில் தொன்பேதுருவும், வேறு 7 பேரும் யாழ்ப்பாணத்தில் முதல் வேதசாட்சிகளாக மரித்தனர். அந்த கலாபனையில் இருந்து தப்பிய முனவர் உடடினயாகவே பூநகரி வந்து சேர்ந்தார். அங்கிருந்து ஒல்லாந்தரின் அதிகாரத்துக்குட்படாத பிரதேசத்துக்கு செல்வதே வழி எனக் கண்டு புத்தளம் பயணமானார்.

## புத்தளத்தில் முனிவர்

கண்டிப்பிரதேசம் 2ஆம் இராஜசிங்கனின் மகன் விமலதர்ம சூரியனின் ஆட்சிக்கு கீழ் இருந்தது. புத்தளம் கண்டி இராச்சியத்துக்குள் இருந்த காரணத்தினால் அங்கு பயமின்றிப் பணியாற்றக் கூடியதாக இருந்தது. கொழும்பில் இருந்த ஒரே குரு குருவான “யுவாம் தே பிரகான் சா” சுவாமியாரும், முனிவர் வந்ததை அறிந்து இணைந்து கொண்டார். இருவரும் இணைந்து பணி செய்ய தொடங்கினார். அங்கிருந்து பணிசெய்ய குருக்களை அனுப்புமாறு கொச்சினுக்கு கடிதம் எழுதினார். படிப்படியாக கண்டியில் தனது பணியினை முனிவர் ஆரம்பித்தா. கண்டி மன்னன் 2ஆம் விமலதர்ம சூரியன் கத்தோலிக்கருக்க அதிக மதிப்பளித்தான். இதுகண்டு பொறாமை கொண்ட “லனறோல்” என்பவன் முனிவர் போர்த்துக்கேயரின் ஒற்றன் எனக்கூறி முனிவரையும், யுவானையும் சிறையில் அடைப்பிடித்தான்.

## சிறையில் மலர்ந்த சிலுவைப்பணி

சிறையில் சொல்லொணா துயரம் அனுபவித்த முனிவர் தனது பண்பினால் தன்னை பிரகாசிக்கச் செய்தார். இதனை அறிந்த மன்னன் அவரில் கருணை காட்டத் தொடங்கினான். சிறையில் இருந்த காலத்தில் சிங்களம் கற்கத் தொடங்கியதுடன், யுவானுக்கும் இலத்தீன் கற்பித்து குருத்துவ பணிக்கு அவனை தயார் செய்யத் தொடங்கினார். சிங்கள அகராதியையும் அங்கிருந்து எழுதினார். மன்னன் காட்டிய கருணையினால் சிறைச்சாலைக்குள்ளேயே சிலுவை ஒன்றினை நாட்டி திருப்பலி நிறைவேற்றத் தொடங்கினார். பலரும் அவரது செயல்களினால் ஊக்கம் பெற்று திருப்பலியில் பங்குகொள்ளத் தொடங்கினர். மன்னரின் அனுமதி பெற்றுப் பலரும் சிறைச்சாலையில் திருப்பலி காண சென்றனர். சிறைச்சாலைக்குள் முனிவரின் சிறிய குடிசை கோவிலாக மாறியது. இதனை அறிந்த மன்னன், அவர் ஒற்றர் அல்ல குருதான் என்று தெரிந்து விடுதலை செய்தான். விடுதலை செய்ததுமட்டுமன்றி அவருக்கு வேண்டிய உதவிகளையும் இன்முகத்தோடு மேற்கொண்டான்.

விடுதலை பெற்ற முனிவர் கண்டியில் ஓலையினால் ஒரு கோவில் அமைத்து “மனந்திருப்புதல் மாதாவின்” பெயரில் அதனை அபிஷேகம் செய்து வழிபாடுகளை நடத்தியதுடன் அருட்சாதனங்களையும் நிறைவேற்றினார். அத்தோடு நிற்காது மாறுவேடத்தில் கொழும்புக்குள்ளும் நுழைந்து வேதம் தளைக்கச் செய்தார். கண்டியில் பொறாமை கொண்டோர், சுதேசிகள், புத்தபிக்குகள், முனிவருக்கு எதிராக பல முறைப்பாடுகளை முன்வைத்தும், கிறிஸ்தவ விசுவாசிகளை அச்சுறுத்தியும் பல முட்டுக்கட்டைகளை இட்டனர். முனிவர் எதற்கும் அஞ்சாது பணி தொடர்ந்தார். கண்டியில் மழையில்லாத பெரு வரட்சியின்போது தனது செபத்தினால் அற்புதமாக மழை பொழிய செய்தார். இதனால் மன்னனின் ஆதரவு பெருகியது. புத்தளத்தின் ஆலயம் பெரிதாக அமைக்கப்பட்டது. குருக்கள் தேவையென்ற கோரிக்கை கொச்சினுக்கும், போர்த்துக்கலுக்கும் கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டது. இரண்டு குருக்கள் அனுப்பப்படுவதற்கு ஒப்புதல் வந்தது.

முனிவர் விடாமுயற்சியோடு, சிலாபம், புத்தளம், மாந்தோட்டம் வரை நீண்ட பயணங்கள் செய்து கோவில்களை நிறுவி மூப்பர்கள், சங்கிடுத்தாம்களை ஏற்படுத்தி வேதத்திற்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தினார். 1696ன் முடிவில் அவரது ஊரான “சாண்கோலை” சேர்ந்த “யோசேவ் தே மெனசொய்” என்ற குருவும், முனிவரின் மருமகனான யோசேவ் கார்வலு என்ற இரண்டு குருக்களும் புத்தளம் வந்திறங்கினர். முனிவரின் பணிச் சிறப்பை அறிந்த திருச்சபை முனிவரையே இலங்கையின் பிரதிநிதியாக 1696 மாசி 10இல் இருந்து நியமித்தது. எனவே முனிவர் குருக்களை புத்தளம், கண்டி ஆகிய இடங்களில் அமர்த்தி தங்குமிடங்களையும் ஏற்படுத்திக் கொடுத்தார். முனிவர் யாழ்ப்பாணம், தீவகம் வரை சென்று வேதத்திற்குப் புத்துயிர் அளித்துவந்தார்.

தொடர்ச்சி 15ம் பக்கம்




மெழுகு வர்த்தியும், தீக்குச்சியும் ஒரே வயிற்றில் பிறக்காத சகோதரர்கள், சிறந்த நண்பர்கள் விற்பனை நிலையத்தில் தான் இருவருக்கும் யுத்தம். பொருட்கள் வாங்க வருபவர்களிடம் எங்களைப் பிரித்து விடாதீர்கள் என்று அவர்களின் இரக்கத்தை சம்பாதித்து வைத்திருந்தனர் இருவரும். ஒரு நாள் வேறு வழியின்றி கடை முதலாளி மெழுகுவர்த்தியை விற்றுவிட்டார். பிரிவில் வாடியது தீக்குச்சி. காலப்போக்கில் தீக்குச்சியும் விற்கப்பட்டது. ஆச்சரியம் பேச வார்த்தைகள் கூட கிடைக்கவில்லை. சந்தோஷத்தில் திளைத்தன. தீக்குச்சியும், மெகுழுவர்த்தியும் இருவரும் மீண்டும் இணைந்தன. ஆனால் அந்த சந்தோஷம் நீண்ட நாள் நீடிக்கவில்லை. "திருவிழா தேருக்காகத் தான் வாங்கப்பட்டது மெழுகுதிரி" என்றதும் தீக்குச்சி அழுது புலம்பியது. தேரில் மெழுகுவர்த்தியை வைத்து தீயேற்ற நினைத்த போது

# தியாகச் சுடர்



தீக்குச்சிக்கு வாய்ப்பு கிடைத்தது. தீக்குச்சி மறுத்தது. "என் உயிர் நண்பனை நான் கொளுத்துவதா?" சாத்தியமில்லை என்று சோகத்தின் விளிம்பில் நின்றது. தழுதழுத்த குரலில் மெழுகுவர்த்தி "நண்பா உடல் அளவில் மட்டுமே நாம் பிரிந்து இருந்தோம். வா இருவரும் மரணம் என்ற பாதையில் ஒன்றாக பயணிப்போம். நீ என்னில் தீயாக எரிய, உன்னை நினைத்தே நான் உருக, மரணத்திலும் மகிழ்ச்சியாக பயணிப்போம்" என்றது. வாயடைத்து நின்றனர் அருகில் இருந்த மனிதர்கள். "அன்பு எவ்வளவு ஆழமானது" என்பதை உணர்ந்தார்கள்.

## ஹாய் குட்டீஸ், கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளை படத்தோடு சேர்த்து வாசித்து வாக்கியங்களாக எழுதவும்

1.  தான் உடலுக்கு 

2. நீ எழுந்து உன்னுடைய  தூக்கிக் கொண்டு  க்குப் போ

3. தம்  யை சுமக்காமல் 1,2,3,4,5 பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்.

4. நானே நல்ல 

## சிந்தனைக்காக சில துளிகள்

- ✷ மன்னி மன்னிக்கப்படுவாய். மன்னிக்க தெரிந்தவன் அன்போடு வாழத்தெரிந்தவன்.
- ✷ தீயதை அறிவதை விட (அனுபவங்களால் தெரிவதை விட) தெரியாமல் இருப்பது நல்லது. ஒரு செயலின், சொல்லின், எண்ணத்தின் பாவத்தை அறிந்து செயல்படுகிறவர்கள் அதிகமாக துண்டிக்கப்படுகிறார்கள்.
- ✷ முட்டாள் தனத்தை அனுபவிப்பதால் கல்வியை அறிய முடியுமா?
- ✷ ஒருவன் தன்னை முட்டாள் என எண்ணும்போது புத்திசாலியாகின்றான், ஒரு புத்திசாலி தன்னை புத்திசாலி என எண்ணும்போது முட்டாளாகின்றான்.
- ✷ சண்டை (யுத்தம்) செய்வதால் சமாதானத்தை அனுபவிக்க முடியுமா?
- ✷ நீ குடிகாரனாக மாறித்தான் போதையை அறிய வேண்டுமென்றல்ல.
- ✷ சேற்றில் வாழ்பவன் "சேறு" எவ்வளவு நாற்றம் என்பதை மிக அரிதாகவே அறிகின்றான். அதேபோன்று தான் பாவத்தில் வாழ்பவன் பாவச் செயலின் கொடூரத்தை அரிதாக விளங்கிக் கொள்கிறான்.
- ✷ மனம் மாற தேவையில்லாத 99 பேரைவிட மனம்மாற விரும்பும் ஒருவனையிட்டு விண்ணகத்தில் அதிக மகிழ்ச்சி ஏற்படும்.
- ✷ இறைவனுக்கும் உனக்கும் இடையே ஏற்பட வேண்டிய ஆழமான உறவுமுறைக்கு முட்டுக்கட்டையாய் இருப்பது உன் மனமே!
- ✷ ஒரு தாய் தான் கருவறையில் சுமந்த பிள்ளைகளுக்கு ஒரு கல்லறையை காட்டுவாளோ, அப்படியிருக்க நாம் ஏன் கல்லறைக்கு பதிலாக ஒரு இல்லத்தை காட்டி அனுப்புகின்றோம்.
- ✷ எனக்கொரு பிரச்சினை என்று பயந்து சொல்வதற்கு பதிலாக, எனக்கொரு சவால் வந்திருக்கின்றது என்று எண்ணிப்பார். தைரியம் கூடவே வரும்.

**தொகுப்பு : S. பிறவுன்சி, தரம் 9, புனித அன்னம்மாள் பங்கு, வெலிமடை**

# தெரிந்து கொள்ளுங்கள்

- ✷ உலகப் புகழ்பெற்ற சமூகசேகவி பெண் புனித தெரேசா
- ✷ அமெரிக்காவின் இரும்புப் பெண்மணி என அழைக்கப்பட்டவர் முன்னால் ஜனாதிபதி திருமதி. மார்கிறட் தட்சர்.
- ✷ இந்தியாவின் இரும்புப் பெண்மணி என அழைக்கப்பட்டவர் முன்னால் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி
- ✷ உலகத்திலே முதன்முதலாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதமர் சிறிமாவே பண்டாரநாயக்க (இலங்கை, மூன்று முறை பிரதமரானார்)
- ✷ இஸ்ரயேலின் இரும்புப் பெண்மணி கோல்டன் மேயர்
- ✷ மணிபுரி நாட்டின் இரும்புப் பெண்மணி இரோம் டிர்மிளா. அம்மாநிலத்தின் பெண் கவிஞரும் மனித உரிமைப் போராளியுமாவார்.
- ✷ இரண்டு முறை நோபல் பரிசு பெற்ற பெண்மணி மேரி கியூரி போலந்து நாட்டில் பிறந்தவர். அப்பொழுது அவருக்கு வயது 18
- ✷ விண்வெளியில் பூமியை சுற்றிப்பறந்த முதல் பெண்மணி வாலண்டினா தெரஸ்கோவா. இவர் ரஷ்யாவைச் சேர்ந்தவர்.
- ✷ விண்வெளியில் பயணம் செய்த முதல் பெண்மணி திருமதி. கல்பனா சல்வா. இவர் இந்தியாவைச் சேர்ந்தவர்.
- ✷ ஆசியாவின் முதல் பெண் ஜனாதிபதி கொராசன் சுகினா ஆவர்.

**ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12.**

"இந்தப் புதிய ஆண்டின் தொடக்கத்தில், உலகின் மக்களுக்கும், நாடுகளுக்கும், எனது இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்"

*- திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி -*



G. அலோசியஸ், தரம் 6, புனித யூதாததேயு ஆலயம், பாசறை


# எப்படியாகிலும் செய்து விடுங்கள்

*Do it Anyway*



- ✷ புரிந்துகொள்ள முடியாத, சுயநல மனிதர்களை சந்திக்கும்போது எப்படியாகிலும் அவர்களை மன்னித்து விடுங்கள்.
- ✷ இரக்கமுள்ளவராக இருக்கும்போது மனிதர்களால் வசை பாடப்படுவீர்கள். எப்படியாகிலும் இரக்கமுள்ளவராக இருந்து விடுங்கள்.
- ✷ வெற்றி பெற்றவுடன் சில நல்ல பகையையும், கெட்ட நட்பையும் பெறுவீர்கள். எப்படியாகிலும் வெற்றி பெற்றுவிடுங்கள்.
- ✷ நேர்மையாக இயல்பாக இருக்கும்போது ஏமாற்றப்படுவீர்கள், எப்படியாகிலும் நேர்மையாக இயல்பாக இருந்துவிடுங்கள்.
- ✷ பல வருட உழைப்பை, உருவாக்கத்தை மனிதர்கள், நொடியில் உடைத்துவிடுவார்கள். எப்படியாகிலும் உழைத்து உருவாக்கி விடுங்கள்.
- ✷ சாந்தமாக, சந்தோஷமாக இருக்கும்போது மனிதர் பொறாமைப்படுவார்கள். எப்படியாகிலும் சாந்தமாக சந்தோஷமாக இருந்துவிடுங்கள்.
- ✷ இன்றைய நற்செயல்கள் நாளை மறக்கப்படலாம். சிறந்ததை எப்பொழுதும் உலகிற்கு கொடுங்கள். அது போதாது என்ற குரல் ஒலிக்கும். எப்படியாகிலும் சிறந்ததை கொடுத்து விடுங்கள்.

ஆக இறுதியில் நிகழப்போகும் சந்திப்பு உங்களுக்கும், கடவுளுக்கும்தான், உங்களுக்கும் அவர்களுக்கும் இடையே அல்ல....



# திசை காட்டிகள்!

அந்த இளைஞனுக்கு 22 வயது. அவன் அண்ணனுடைய அச்சுக் கூடத்திலிருந்து பிலடெல்பியாவிற்கு ஓடி வந்துவிட்டான். அண்ணனின் பயிற்சித் தொழிலாளனாக வேலை பார்த்து வந்தான். அண்ணன் மிகுந்த கெடுபிடிக்காரன். இவன் அண்ணனுக்குத் தெரியாமல் பதிப்பித்த கட்டுரையால் வந்த வினை. அச்சுக் கூடத்திலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு விட்டான். பாஸ்டன் நகரிலிருந்தால் தண்டனை கிடைக்கும். எனவேதான் பிலடெல்பியாவிற்கு வாசம். அங்கேயும் அச்சுத் தொழிலில் சேர்ந்து படிப்படியாக முன்னேறி 18ஆம் நூற்றாண்டின் அமெரிக்காவின் சிறந்த சிந்தனையாளனாக, விஞ்ஞானியாக, எழுத்தாளராகப் புகழ்பெற்றான். அவன்தான் பெஞ்சமின் ஃபிராங்கிளின் இடிதாங்கியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி ஃபிராங்கிளின் தான்.

ஃபிராங்கிளின் பிலடெல்பியாவிற்கு வந்தவுடன் தனது வாழ்வின் முதன்மை நோக்கங்கள் என்னவென்று சிந்திக்கத் தொடங்கினான். தன்னை வழிகாட்டக்கூடிய நெறிகள் எவையாக இருக்கவேண்டும் என்று பட்டியலிட்டான். தன்னை ஆள வேண்டிய விழுமியங்கள் (governing values) இவை என்று கண்டான். அந்த வழிகாட்டும் நெறிகள் :

**மிதமான உணவு :**
மந்தப்படுத்தும் அளவிற்கு உண்ணாதே, மதிமயங்கும் அளவுக்கு குடிக்காதே.

**அமைதி :**
உனக்கும் - பிறருக்கும் பயன்படாதவற்றைப் பேசாதே.

**ஒழுங்கு :**
ஒவ்வொரு பொருளுக்கும் ஓர் இடம். ஒவ்வொரு வேலைக்கும் ஒரு நேரம்.

**தீர்மானம் :**
செய்ய வேண்டியதை முடிக்க உறுதிகொள், முடிக்க உறுதி கொண்டதைச் செய்து முடி.

**சிக்கனம் :**
உனக்கும் - பிறருக்கும் பயன்படாத எந்தச் செலவும் செய்யாதே. எதனையும் வீணாக்காதே.

**உழைப்பு :**
காலத்தை வீணாக்காதே. பயனுள்ள எதையாவது செய்துகொண்டே இரு. தேவையற்ற எதனையும் செய்யாதே.

**உண்மை :**
பிறரை ஏமாற்றாதே, நீதியானவற்றையே நினை. அவ்வாறே பேசு.

**நீதி :**
யாருக்கும் அநீதி இழைக்காதே.

**நிதானம் :**
எல்லை மீறிப் போகாதே, பிறரை மன்னித்திடு.

**தூய்மை :**
உடல், உடை, இருப்பிடம் எதிலும் அழுக்கை அனுமதியாதே.

**மனச் சமாதானம் :**
சிறியவற்றிற்கெல்லாம் கலங்காதே. தவிர்க்க முடியாதது நடக்கும்போது மயங்காதே.

**கற்பு :**
கற்பினைக் காத்திடு

ஃபிராங்கிளின் இந்தப் பன்னிரெண்டு தீர்மானங்களையும் எடுத்துக் கொண்டு தனது நண்பரிடம் சென்றார். அவரோ "உன்னிடம் அகந்தையைப் பார்க்கின்றேன்; தாழ்ச்சியையும் சேர்த்துக்கொள்" என்றார். எனவே 12ம் வழிகாட்டும் நெறியாக தாழ்ச்சியையும் சேர்த்துக் கொண்டார். தாழ்ச்சியின் கீழ் "இயேசுவையும், சாக்ரடீசையும் பின்பற்று" என்று குறித்துக்கொண்டார். அடுத்து 13 வாரச் சுழற்சியில் ஒவ்வொரு நெறியையும் ஒவ்வொரு வாரம் பயிற்சி செய்தார். தனது செயல் அனைத்திலும் அந்த வழிகாட்டும் நெறியை வாழ்ந்து காட்ட முயன்றார்.

பிறகு தனது 78வது வயதில் தன் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்து "நான் எனது முயற்சியில் முழுமையாக வெற்றி பெறாவிட்டாலும், பெருமளவிற்கு எனது இலக்கை எட்ட முடிந்தது. இம்முயற்சியே என்னை நல்லவனாக, மகிழ்ச்சி நிறைந்தவனாக ஆக்கிற்கு" என்று குறிப்பிடுகின்றார்.

ஃபிராங்கிளின் தனது வாழ்க்கையின் திசை காட்டிகளாக எடுத்துக் கொண்ட நெறிகளை நாமும் எடுத்துக் கொள்ள முடியுமா? அதனால் என்ன பயன்? பெரும் செல்வந்தராக ஆக அது உதவாது. ஆனால் நல்ல மனிதராக, மகிழ்ச்சி மிக்கவராக ஆக முடியும். ஃபிராங்கிளின் எடுத்துக் கொண்டவற்றையே நாமும் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நம்முடைய வாழ்க்கைச் சூழலின் தேவைக்கு ஏற்ப, நம்முடைய சிறப்புத் திறன்களுக்கு ஏற்ப நாம் வரைவு செய்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக, ஃபிராங்கிளின் நெறிமுறைகளைப் பற்றிக் குறிப்பிடும் ஹைரும் என்னும் நூலாசிரியர் தனது சொந்த வாழ்க்கை நெறிகளைப் பற்றியும் எழுதுகிறார். அவரை ஆள வேண்டிய விழுமியங்களாக எடுத்துக் கொண்டவை இதோ :

1. எனது இதயம், மனம், வலிமை முழுவதையும் கொண்டு இறைவனிடம் அன்பு செலுத்துவேன்.

## மாணவர் ஒளி

இறையரசைத் தேடுகின்றேன். அவருடைய சட்டங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் என் அன்பை வெளிப்படுத்துகிறேன். தொடர்ந்து இறைவனிடம் மன்றாடுகின்றேன். எதற்காக என்னை அவர் அழைக்கிறாரோ அதனை நிறைவேற்றுகிறேன்.

2. என்னுடைய அயலாரிடம் அன்பு கூர்கின்றேன். கடவுள் முன் அனைவரும் சமம் என்று ஏற்றுக்கொள்கிறேன். யாருடைய சுய மதிப்பையும் காயப்படுத்த மாட்டேன். என்னால் முடிந்த உதவியைச் செய்வேன்.

3. கடவுளுடைய கட்டளைகள் அனைத்தையும் கடைப்பிடிப்பேன்.

4. நான் தாழ்ச்சியுடையவனாக இருப்பேன். என்னுடைய தாழ்ச்சி கடவுளை நான் சார்ந்திருப்பதால் பிறக்கிறது. என்னுடைய உடைமை எல்லாம் கடவுளின் கொடை.

5. நான் ஓர் அன்பிற்குரிய கணவன், தந்தை, என்னுடைய மனைவியிடமும், குழந்தைகளிடமும் அவர்களுடைய ஆன்மீக, சமூக, அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்யும் வகையில் நேரம் செலவிடுவேன்.

6. என்னுடைய தந்தையையும், தாயையும் மதிக்கிறேன். என்னுடைய பெற்றோர்தான் எனக்குக் கிறிஸ்தவ வாழ்க்கைக் கொள்கைகளைக் கற்றுத் தந்தார்கள். எனக்கு முன்மாதிரி அவர்கள்தாம்.

7. எனது அறிவை வளர்த்துக் கொள்கின்றேன். நல்ல நூல்களையும், கட்டுரைகளையும் தினமும் வாசிக்கின்றேன்.

8. எல்லாவற்றிலும் நான் நேர்மையாக இருக்கிறேன் என்னுடைய மனச்சான்றின் கட்டளைப்படி முடிவுகளை எடுக்கின்றேன்.

9. நன்றாகப் பேசுகிறேன். பேசும் திறன் எனக்குக் கடவுள் கொடுத்த கொடை. அதனைத் தகுந்தவாறு பயன்படுத்துகிறேன்.

10. நான் உடல் நலத்தைப் பேணுகிறேன்.

11. காலத்தைப் பொன்போல் மதிக்கின்றேன்.

12. என்னுடைய பொருளாதார நிலைக்கு நான் யாரையும் சார்ந்திருப்பதில்லை.

13. தினமும் மூன்று மணி நேரம் என்னுடைய உள்ள அமைதிக்காகச் செலவழிக்கின்றேன். எனது குடும்பத்தினருக்குக் கற்றுத் தருகின்றேன். செபம் செய்கின்றேன்.

14. மக்கள் தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்க உதவுகிறேன்.

15. நான் பிறர் பேசுவதைக் கூர்ந்து கவனிக்கிறேன்.

16. எல்லாவற்றிலும் ஓர் ஒழுங்கைக் கடைப்பிடிக்கிறேன்.

மிக நீண்ட பட்டியல். ஆனால் இவை அனைத்தையும் நம் வாழ்க்கையின் வழிகாட்டும் நெறிகளாகக் கொண்டால் அதைவிட வேறு என்ன வேண்டும்? இவர்களைப் போலவே நீங்களும் உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நெறிகளைப் பட்டியலிட்டுக் கொள்ளலாமா? நீங்கள் சார்ந்திருக்கும் மதம் தரும் கட்டளைகள், நீதி நூல்கள் தரும் அறநெறிகள், ஆசிரியரும் - பெற்றோரும் தரும் அறிவுரைகள் இவற்றையெல்லாம் மனத்தில் நிறுத்தி அசைபோடுங்கள். ஏற்கனவே உங்களுடைய குறைகளையும், திறன்களையும் அறிவீர்கள். அவற்றின் துணை கொண்டு உங்களை ஆட்கொள்ள வேண்டிய மதிப்பீடுகளை, விழுமியங்களை எழுதிக் கொள்ளுங்கள். ஏன் அவை உங்களுக்கு அவசியம் என்பதனையும் குறித்துக் கொள்ளுங்கள். ஓர் எடுத்துக் காட்டு, எந்தச் சூழலிலும் உண்மையையே பேசுங்கள். அதுவே செயல்களில் தூய்மையும், ஒழுக்கத்தையும் உறுதிப்படுத்தும்.

**எந்த வயதில் எழுத வேண்டும்?**

எந்த வயதிலும் எழுதலாம். குறிப்பாக கல்லூரி மாணவ - மாணவியரும், பிற இளையோரும் எழுதிக் கொள்வது நல்லது. பெரியவர்கள் இளையோருக்கு இதனைச் செய்ய உதவவேண்டும். பிறகு அவற்றை முடிந்த வரையில் பின்பற்ற வேண்டும். வீட்டில், கல்விக்கூடத்தில், அலுவலகத்தில், விளையாட்டரங்கில் எங்கும் இந்த விழுமியங்களைச் சிரத்தையுடன் பின்பற்றுங்கள். ஆண்டுக்கொரு முறை மீள்பார்வை செய்யுங்கள். எத்தனை முறை வெற்றி பெற்றிருக்கிறோம் என்று கணக்கிட்டுப் பெருமிதம் கொள்ளுங்கள்.

# குருத்துவ திருநிலைப்படுத்தல்



திருத்தொண்டர் ஆறுமுகம் சாந்த பெற்றிக் அவர்கள் 1987ம் ஆண்டு பங்குனி மாதம் 28ம் திகதி தலவாக்கலை தூய அன்ரூஸ் தோட்டத்தில் திரு. சாந்த கிரிஸ்டொ திருமதி. காமல் மேரி ஆகிய தம்பதிகளுக்கு அன்பு புதல்வராக பிறந்தார், இவருக்கு அன்பு சகோதரியும் உள்ளார். இவர் தனது ஆரம்ப கல்வியை கொழும்பு டட்லி சேனாநாயக்க கல்லூரியில் பயின்றார். அதன் பின் 2004ம் ஆண்டு புரட்டாசி மாதம் 15ம் திகதி காலி மறைமாவட்டத்தில் உள்ள கலேகான புனித அலோசியஸ் கல்லூரியில் பயின்றார். 2007ம் ஆண்டு களுத்துறை கனிஷ்ட செவன குருமடத்தில் மெய்யியல் கற்கைக்கான ஆரம்ப பயிற்சியில் ஈடுப்பட்டார். 2008ம் ஆண்டு தொடக்கம் 2010ம் ஆண்டுவரை அம்பிடிய தேசிய குருமடத்தில் மெய்யியல் கற்கையை பயின்றார். 2010ம் ஆண்டு தொடக்கம் 2012ம் ஆண்டு வரை மேய்ப்புப்பணி அனுபவத்தில் ஈடுப்பட்டார். 2012ம் ஆண்டு தொடக்கம் 2016ம் ஆண்டு வரை கண்டி, அம்பிட்டிய தேசிய குருமடத்தில் இறையியல் கல்வியை பயின்றார். இவர் 2016ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ம் திகதி காலி மறைமாவட்ட அதி வணக்கத்திற்குரிய ஆயர் மேதகு ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை அவர்களால் திருத்தொண்டராக திருநிலைபடுத்தப்பட்டார். காலி மறைமாவட்டத்தில் வெலிகம, அல்பிடிய, காலி ஆகிய பங்குகளில் பணி புரிந்தார். 2017ம் ஆண்டு தை மாதம் 12ம் திகதி வியாழக்கிழமை அன்று காலி புனித செபமாலை அன்னை பேராலயத்தில் காலை 10 மணிக்கு அதி வணக்கத்திற்க்குரிய ஆயர் மேதகு ரேமன் விக்ரமசிங்க ஆண்டகை அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார். புதிய குருவானவரின் முதலாவது திருப்பலியானது 2017ம் ஆண்டு தை மாதம் 15ம் திகதி ஞயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு திம்பரிகஸ்சாய புனித திரேசாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இவருடைய குருத்துவ பணி வாழ்வில் ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள இறைவனை பிராத்திப்போம்.




# கிறிஸ்மஸ் விழா இரவு திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை



கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில் மார்கழி 24, இரவு, 9.30 மணிக்கு ஆற்றிய திருப்பலியில் வழங்கிய மறையுரையின் சுருக்கம்:

அன்பு சகோதர, சகோதரிகளே, “மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது.” (தீத்து 2:11) திருத்தூதர் பவுலின் வார்த்தைகள், இந்த இரவின் மறையுண்மையை வெளிப்படுத்துகிறது. இந்த இரவு, மகிமையின் இரவு. அந்த மகிமையை, வானதூதர்கள் பெத்லகேமில் பறைசாற்றினர். இந்த இரவு, மகிழ்வின் இரவு. ஏனெனில், இறைவனை, இனி, வானங்களிலும், ஆழ்ந்த தியானக் கருத்துக்களிலும் தேடாதவண்ணம், நம்மருகே மனிதராக வந்து சேர்ந்தார். “ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்” (எசாயா 9:5) என்ற வார்த்தைகளின் பொருளை, இடையர்கள் உணர்ந்து-கொண்டனர். “குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள் இதுவே உங்களுக்கு அடையாளம்” (லூக்கா 2:12) என்று வானதூதர் சொன்னதை, அவர்கள் எளிதாகப் புரிந்துகொண்டனர்.

வானதூதர் தந்த இந்த அடையாளம், அன்று மட்டுமல்ல, இன்றும் உண்மை. கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் உண்மையில் கொண்டாட வேண்டுமெனில், இந்த அடையாளத்தைத் தியானிக்க வேண்டும். வலுவற்ற ஒரு குழந்தையில் இறைவன் இருக்கிறார் என்ற அடையாளத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அடையாளத்தின் வழியே, நற்செய்தி ஒரு புதிரை வெளிப்படுத்துகிறது: அனைத்து வலிமையையும் கொண்ட ஒரு பேரரசர், ஓர் அரண்மனையில் இல்லை, மாறாக, ஒரு தீவனத் தொட்டியில் இருக்கிறார். இந்தக் குழந்தையைக் காண, அவர் இருக்கும் இடத்திற்கு சென்று, நம்மையே அவருக்கு முன் தாழ்த்தவேண்டும். தீவனத் தொட்டியில் இருக்கும் குழந்தை நமக்கு விடும் சவாலை ஏற்க துணிவோம்.

வசதியான படுக்கைகளில், தாயின் அரவணைப்பில் உறங்கும் குழந்தை அல்ல இது. மாறாக, ஆபத்தானச் சூழல்களில், குண்டுத்தாக்குதல்களுக்குப் பயந்து, பூமிக்கடியில் ஒளிந்திருக்கும் குழந்தையின் வடிவில், அளவுக்கதிகமான அகதிகள் நிறைந்திருக்கும் பாதுகாப்பற்ற ஒரு படகில் படுத்திருக்கும் குழந்தையின் வடிவில் இறைவன் நமக்குச் சவால்கள் விடுகிறார்.

பிறப்பதற்கு அனுமதியின்றி, கருவிலேயே கொல்லப்படும் குழந்தையின் வடிவில், ஆயுதங்களை வாங்குவதற்கு அளவற்ற பணம் இருக்கும் சூழலில், தன் பசியைப் போக்க முடியாமலும், தன் மகிழ்வுக்கு விளையாட்டுப் பொருள்கள் இல்லாமலும் அழும் குழந்தையின் வடிவில் இறைவன் நமக்குச் சவால்கள் விடுகிறார். கிறிஸ்மஸ் விழா, நம்பிக்கையையும், மகிழ்வையும் தரும் விழா எனினும், அதற்குள் பல துயரங்கள் பொதிந்துள்ளன. மரியாவுக்கும், யோசேப்புக்கும் விடுதியில் இடம் இல்லாததால், அவர்கள் இயேசுவை தீவனத் தொட்டியில் கிடத்தவேண்டி-யதாயிற்று. அன்று நிலவிய அக்கறையற்ற நிலை, இன்றும் தொடர்கிறது. கிறிஸ்மஸ் விழாவில், இயேசுவை மையப்படுத்தாமல், நம்மை மையப்படுத்தி நாம் விழா கொண்டாடுகிறோம்.

இருப்பினும், கிறிஸ்மஸ் விழா நம்பிக்கையின் விழா. “அப்பத்தின் வீடு” என்று பொருள்படும் பெத்லகேமில் இயேசு பிறந்ததால், தானே பிறருக்கு அப்பமாக மாறுவதைச் சொல்லாமல் சொல்கிறார். இக்குழந்தை கொண்டுவந்த நம்பிக்கையை இடையர்கள் புரிந்துகொண்டனர். இந்த இடையர்களோடு இணைந்து நாமும் பிறந்துள்ள இயேசுவின் அருகே செல்வோம். அன்னை மரியா, யோசேப்பு, இடையர்கள் அனைவரோடும் இணைந்து, இந்த மாபெரும் மறையுண்மையை உணர முயல்வோம். “நன்றி இறைவா, நன்றி. இவை அனைத்தையும் எனக்காகச் செய்துள்ளீர்” என்று குழந்தை இயேசுவிடம் சொல்வோம்.

## அன்னை தெரேசாவைப் புகழும் எலிசபெத் அரசியின்

# கிறிஸ்மஸ் செய்தி



மிகச் சாதாரண மக்கள், மிக உன்னதமானவற்றை செய்யமுடியும் என்பதற்கு, கொல்கத்தாவின் அன்னை தெரேசா சிறந்ததோர் எடுத்துக்காட்டு என்று, பிரித்தானிய அரசி எலிசபெத் அவர்கள், தன் கிறிஸ்மஸ் செய்தியில் கூறியுள்ளார்.

90 வயது நிறைந்த அரசி எலிசபெத் அவர்கள், இவ்வாண்டு வழங்கியுள்ள கிறிஸ்மஸ் செய்தியில், அன்னை தெரேசா அவர்களும், ரியோவில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் ஒலிம்பிக் விளையாட்டில் வெற்றி பெற்றவர்களும் நம் வாழ்வுக்கு உந்து சக்தியாக விளங்குகின்றனர் என்று கூறியுள்ளார்.

பல உன்னதப் பணிகளில் ஈடுபட்டுள்ள பலர், அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் அளவு புகழ் பெறுவதில்லை என்றாலும், அவர்களது பணியை, அர்ப்பண உணர்வுடன் செய்து வருகின்றனர் என்று கூறிய அரசி எலிசபெத் அவர்கள், மறைந்து வாழும் இத்தகையோருக்கு, அன்னை தெரேசா ஒரு கலங்கரை விளக்காக இருக்கிறார் என்று கூறியுள்ளார்.

”நாம் அனைவரும் பெரும் செயல்களை செய்ய முடியாமல் போகலாம், ஆனால், நாம் ஆற்றும் சிறு செயல்களையும் பெரும் அன்புடன் நம்மால் செய்யமுடியும்” என்று அன்னை தெரேசா அவர்கள் கூறிய சொற்களை, அரசி எலிசபெத் அவர்கள் தன் கிறிஸ்மஸ் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## மாலியின் ஒரு நகரில் முதன்முறையாக

# கிறிஸ்மஸ்



மாலி நாட்டின், ஒரு நகரில் 2012ம் ஆண்டிற்குப் பின்னர், இவ்வாண்டில் முதன்முறையாக, கிறிஸ்மஸ் பெருவிழா சிறப்பிக்கப்பட்டது என, ஊடகச் செய்திகள் கூறுகின்றன. மாலி நாட்டின் பத்து பெரிய நகரங்களில் ஒன்றான Gao நகரை, 2012ம் ஆண்டில், ஜிகாதி இஸ்லாம் தீவிரவாதிகள் கைப்பற்றி, கத்தோலிக்க ஆலயத்தை அழித்ததைத்தொடர்ந்து, கிறிஸ்தவர்கள், அந்நகரை விட்டு வெளியேறினர்.

பிரெஞ்ச் படைவீரர்கள், தீவிரவாதிகளிடமிருந்து அந்நகரை விடுவித்ததற்குப் பின்னர், கிறிஸ்தவர்கள் அந்நகருக்குத் திரும்பிவந்து, ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பினர் என்றும், ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், இவ்வாண்டில், உகாண்டா நாட்டு அருள்பணியாளர் ஒருவர், கிறிஸ்மஸ் திருப்பலி நிறைவேற்றினார் என்றும் செய்திகள் கூறுகின்றன. மேற்கு ஆப்ரிக்க நாடான மாலியிலுள்ள ஏறக்குறைய ஒரு கோடியே 75 இலட்சம் மக்களில், 95 விழுக்காட்டினர் முஸ்லிம்கள். 2 விழுக்காட்டினர் கிறிஸ்தவர்கள்.

# அன்னை மரியா வழியாக நாமனைவரும் ஒரே குடும்பத்தினர்



நாம் அநாதைகள் அல்ல, நமக்கொரு அன்னை இருக்கிறார் என்ற எண்ணம், நாமனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நோக்கி இட்டுச் செல்கிறது என இப்புத்தாண்டு திருப்பலியில் மறையுரையாற்றினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

புத்தாண்டு தினத்தன்று திருச்சபை சிறப்பிக்கும் இறைவனின் தாய் அன்னை மரியா என்ற திருவிழாவையொட்டி, தூய பேதுரு பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், விவிலியத்தில் அன்னை மரியா அதிகம் பேசியதாக காணப்படவில்லையெனினும், இறைவனின் மீட்புத்திட்டம் குறித்து அவர் கவனமாயிருந்து, ஆதிக் கிறிஸ்தவ சமூகத்தின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயல்பட்டார் என்று கூறினார்.

இறைவனின் தாயாகவும், நமதன்னையாகவும் ஆண்டின் முதல் நாளில் அன்னைமரியாவை நோக்குவது என்பது, ஆண்டு முழுவதும் நம்முடன் வரவிருக்கும் ஓர் உறுதிப்பாட்டை நினைவுகூர்வதாகும் எனவும் எடுத்தியம்பிய திருத்தந்தை, அன்னையர்களற்ற ஒரு சமூகம், இதயத்தை இழந்த ஒரு சமூகமாக இருக்கும் என்றார்.

அன்னையர்கள், இன்கனிவுக்கும், தியாகத்திற்கும், நம்பிக்கையின் பலத்துக்கும் புகழ்பெற்றவர்கள் என்பதையும் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிறையிலுள்ள குழந்தைகளின் அன்னையர், நோயாளிச் சிறார்களின் அன்னையர், போதைப்பொருள்களுக்கு அடிமையான இளையோரின் அன்னையர், புலம்பெயர்ந்தோர் முகாமிலுள்ள அன்னையர் என பலரிடமிருந்தும் தான் அதிக பாடங்களைப் பயின்றுள்ளதாகக் கூறினார்.

ஆன்மீகத்தில் நாம் அநாதைகளாக மாறிவிடாமல் நம்மை காப்பாற்றுபவர், நம் அன்னையரே என மேலும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# "இரக்கத்தின் ஆண்டு முடிந்தாலும் இரக்கம் முடிவதில்லை"



**கடவுளுக்கு மறுபெயர் இரக்கம்! இரக்கம் மட்டுமே திருச்சபையின் உள்ளடக்கமாக இருக்கையில், இயேசுவின் போதனையும், புதுமைகளும், வாழ்வும் இரக்கத்தின் வெளிப்பாடாக இருக்கையில், இரக்கமே கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் அடையாளமாக வேண்டாமா?**

இரக்கத்தின் ஆண்டுக்கு மட்டுமல்ல இரக்கச் செயல்கள், மாறாக இரக்கத்தையே வாழ்வாக்கி வாழ்கை முழுவதும் வாழ்வதற்கே...

இரக்கமே இறைவனின் பெயர், முகம், இயல்பு என்பதை கிறிஸ்தவ உலகிற்கு மட்டுமல்லாது, உலக மக்கள் அனைவருக்கும் உணர்த்தும் வண்ணம் கடந்த 08.12.2015ஆம் ஆண்டு இரக்கத்தின் மாபெரும் யூபிலி ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. யூபிலி ஆண்டின் அடையாளமாக வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் இரக்கத்தின் கதவைத் திருத்தந்தை திறந்து வைத்தார். உலகிலுள்ள அனைத்து மறைமாவட்ட பேராலயங்கள், திருத்தலங்களின், இரக்கத்தின் கதவுவுளும் அந்தந்த மறைமாவட்ட ஆயர்களால் திறந்து வைக்கப்பட்டன.

இரக்கத்தின் யூபிலி ஆண்டில் இரக்கத்தின் வாயில்களில் நுழைவதை இறை இரக்கத்தின் அனுபவமாகக் கருதி அகில உலகத் திருச்சபையுடன் இணைந்து கத்தோலிக்க கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நாமும் இரக்கத்தின் வாயில்களை நோக்கிப் பயணம் செய்து, அதன் வழியாக சென்று வந்தோம்.

நமது பங்குத்தலங்கள், மறைமாவட்டங்கள், துறவற சபைகளில், பங்கில் இயங்கும் பக்திச் சபைகளில் இறையிரக்கம் பற்றிய கருத்தரங்குகள், தியானங்கள் போட்டிகள் நாடகங்கள் திருயாத்திரைகள், என்பன மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு 20.11.2016 அன்றுடன் முடிவுக்கு வந்தது. இரக்கத்தின் யூபிலி ஆண்டு.

இரக்கத்தின் ஆண்டு முடிவடைந்து விட்டது. ஆகவே, நமது இரக்கத்தின் பயணமும் செயல்பாடுகளும் முற்றுப்பெற்றுவிட்டனவா?

இரக்கத்தின் யூபிலி ஆண்டில் இரக்கத்தின் கதவுளைத் திறந்த நாம், நம் இதயங்களைத் திறந்தோமா? புனித பவுலடியார் இவ்வாறு கூறுகிறார். "ஆலயத்தின் உள்ளாகவும், உடம்பாகவும் திகழ்கின்ற நம் ஒவ்வொருவரின் இதயக் கதவுகளைத் திறக்கும் நோக்குடனேயே ஆலய வாயில்கள் திறக்கப்பட்டன" நம்முடைய இதய கதவுகளைத் திறக்காமல் இரக்கத்தின் செயல்களை, இரக்கத்தின் வாழ்வை நடைமுறைப்படுத்த முடியாது. இக்கேள்வியை நம் ஒவ்வொருவரும், நம் மனதில் கேட்டுக்கொள்வோமா?

நம்முடைய இதயம், மரத்தாலானா கதவு அல்ல திறந்து மூட, திறந்த இதயங்கள் திறந்ததாகவே இருக்கட்டும். எமது மறைமாவட்டங்களிலும், பங்குக -ளிலும் வெறும் ஆடம்பரமாக வெளிக்காட்டல்களாக நாடகங்களிலும், போட்டியிலும், திருயாத்திரையிலும் இரக்கத்தின் ஆண்டை கொண்டாடிய நாம், நமது இல்லங்களிலும், நமது பங்குகளிலும், நமது மறைமா -வட்டங்களிலும் இவ்விரக்கத்தின் ஆண்டில் இரக்கச் செயல்களை தொடர வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம்.

இரக்கத்தின் யூபிலி ஆண்டில் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திறக்கச் சொல்வது வெறும் மரத்தாலான கதவையல்ல இரத்தமும், சதையும் உணர்வும் கொண்டு நமது இதயத்தையே, தாழிடப்பட்ட நமது இதயக் கதவுகளை திறந்தோமா? இயேசுவுக்கு, இயேசுவின் மக்களாகிய பாவிகளுக்கு, ஏழைகளுக்கு, ஒடுக்கப்பட்டோருக்கு, ஓரந்தள்ளப்பட்டோருக்கு, அநா -தைகளுக்கு, விதவைகளுக்கு, அங்கவீனர்களுக்கு, நோயாளிகளுக்கு, சிறையில் இருப்போருக்கு வானகத் தந்தையைப் போன்ற இரக்கமுள்ள இதயத்தை நாம் திறந்தோமா? இரக்கமுள்ள செயல்களை செய்தோமா? கிறிஸ்தவர்களுக்கு ஓர் அடையாளம் உள்ளதென்றால், அது இரக்கமாகத்தான் இருக்க வேண்டும்.

கடவுளுக்கு மறுபெயர் இரக்கம்! இரக்கம் மட்டுமே திருச்சபையின் உள்ளடக்கமாக இருக்கையில், இயேசுவின் போதனையும், புதுமைகளும், வாழ்வும் இரக்கத்தின் வெளிப்பாடாக இருக்கையில், இரக்கமே கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் அடையாளமாக வேண்டாமா? ஒரு நாட்டின் குடிமகனை அடையாளமாக அடையாள அட்டை கட்டாயம் என்கிறது அரசாங்கம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஓர் அடையாள அட்டை இருக்குமென்றால் அதன் பெயர் "இரக்கம்" ஆகதான் இருக்க முடியும்?

எதுவரை இரக்கத்தின் ஆண்டு தொடர வேண்டும்...?

1. இயேசுவை வேரோட்டமாகப் பின்தொடர இரக்க-த்தின் ஆண்டு தொடரட்டும் அதற்கு காலம் அவசியமில்லை.

எனது திருச்சபை, எனது பங்கு, எனது சமுதாயம், எனது குடும்பம் என்று சொந்தம் கொண்டாடும் உணர்வுடன் விசுவாசத்திலும், அன்பிலும் வாழும் நாம், மாற்கு நற்செய்தி 10ஆம் அதிகாரத்தில் "நிலைவாழ்வு பெற நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டு இயேசுவிடம் வந்த செல்வந்த இளைஞனைப் போல், கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவை முழுமையாகப் பின்பற்ற முடியாத பரிதாப சோக நிலையில் வாழ்கிறோமா? எனச் சிந்தித்துப் பார்ப்பது நல்லதுதானே?

அந்த இளைஞனைப்போல் நல்ல நோக்கத்துடன், நல்ல குடும்பங்களிலிருந்து நிலைவாழ்வு பெற கிறிஸ்தவ விசுவாச வாழ்வைத் தேர்ந்தெடுத்த நாம் அந்த இளைஞன் முகவாட்டத்தோடு இயேசுவைப் பின்பற்ற முடியாமல் திரும்பிச் சென்றதுபோல் நாமும் உள்ளோமா? கிறிஸ்தவ வாழ்வு, நற்செய்தியின் போதனைகளை நன்கறிந்தும், இயேசுவின் இரக்கத்திற்கான அழைப்பைப் பின்பற்ற தீர்க்கமான முடிவெடுக்காமல் உலகப்போக்கில் வாழும் மேம்போக்கான மனநிலையே நமது தனிப்பட்ட வாழ்வை, குடும்ப வாழ்வை, பொது வாழ்வை மகிழ்ச்சியற்ற பெரும் துன்ப இயலாக மாற்றியுள்ளது.

இந்தத் துன்ப இயலை மகிழ்ச்சிமிக்கதாக இரக்கத்தின் ஆண்டு தொரட்டும்.

2. காயப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கு உதவி செய்ய இரக்கத்தின் ஆண்டு தொடரட்டும்....

இரக்கம், கருணை, பரிவு போன்றவை மனிதர்களின் இயல்பான பண்புகள். இப்பண்புகளை இனம் கண்டு வாழாத மானுடம் செத்த மானுடம்! இரக்கத்தின் இப்பண்புகளையுடைய நம் கடவுளின் பெயர் இரக்கம். இன்று நாம் வாழும் சமுகத்தைக் காயப்பட்ட சமுகம் எனலாம். காயப்பட்ட சமுகத்தைக் கண்டும் காணாதிருத்தல் கிறிஸ்தவம் அல்ல: அது மனிதத்துவமும் அல்ல! இக்காயத்தைக் குணப்படுத்தும் மருத்துவர்களாகப் பணியாற்றவே நம் மானுட வாழ்விற்கும், கிறிஸ்தவ விசுவாச வாழ்விற்கும் அழைக்கப்பட்டோம். நமது திருச்சபை, நாம் வாழும் சமுதாயம் வறுமை, பசி, இல்லாமையால் மட்டுமல்ல, சாதியம், பேராசை, சுயநலம், அராஜகம் போன்றவற்றாலும் காயப்பட்டுள்ளது. இக்காயங்களுக்கு கட்டுப்போட்டு குணப்படுத்த இரக்கத்தின் ஆண்டு தொடரட்டும்.

3. கடவுளின் தாயன்பின் அடையாளமாக விளங்க இரக்கத்தின் ஆண்டு தொடரட்டும்...

திருச்சபையில் விசுவாச வாழ்வில் ஆழம் கண்டவர்கள் தொடக்கக் காலம் முதல் இன்றுவரை இறை இரக்கத்துக்குச் சான்று பகர்ந்து வந்துள்ளனர். நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்தவ விசுவாசிகள் என்ற நிலையில் ஆற்றும் மறைபரப்புப் பணியின் மையப் பொருளே இறைவனின் இரக்கத்துச் செயல்வடிவம் கொடுப்பது என்பதால், இப்பணிகளில் நமது பங்களிப்பின் அடர்த்தியை அதிகப்படுத்தி நாம் கடவுளின் தாயன்பின் அழுத்தமான அடையாளங்களாக விளங்க வேண்டும். மறைபரப்புப் பணியில் இரக்கச் செயல்கள் இடம்பெறாமல் இருக்க முடியாது. மறைபரப்புப் பணியில் இளைஞர்கள், இளம் பெண்கள் குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சினைகளை நன்கறிந்து, இரக்கத்துடன் கையாண்டு வழிநடத்துவதில் நமது பங்கை மகத்துவம் மிக்கதாக மாற்றும் அன்பியங்களாகப் பாடுபட இரக்கத்தின் ஆண்டு தொடரட்டும்.

4. பிளவுபடுத்தும் இரும்புக் கதவுகளை உடைக்க இரக்கத்தின் ஆண்டு தொடரட்டும்.

நடந்து முடிந்த இரக்கத்தின் ஆண்டில் நாம் இரக்கச் செயல்கள் ஆற்றுவதில் ஒரு படி உயர்ந்தோம் என்பது உண்மையே. இவ்வாறு திறக்கப்பட்டக் கதவுகள் என்றும் திறக்கப்பட்டவைகளாகவே இருக்க வேண்டும் என்பதுதான் இறைவிருப்பம். நமது பங்குத்தலங்கள், வாழ்விடங்கள், பணியாற்றும் இடங்களில் எல்லாம் உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், படிக்காதவர், சாதி மொழி போன்ற பேதங்களை வெளிப்படுத்தாத இடங்கள் என்ற நம்மால் உறுதியாகச் சொல்ல முடியுமா? அனைவரையும் அரவணைக்க, பங்கேற்கச் செய்ய நமக்குள் மறுப்புக் கூறும் கதவுகளை உடைக்க, பிளவுபடுத்தும் இரும்புக் கதவுகளை உடைக்க இரக்கத்தின் ஆண்டு தொடரட்டும்.

5) உறவுப் பாலங்களை எழுப்ப இரக்கத்தின் ஆண்டு தொரட்டும்.

திருப்பலியின் போது உளமாரச் சமாதானம் செய்து இரக்கத்துடன் அனைவரையும் அரவணைத்து, தனிப்பட்ட விதத்திலும், குடும்பமாகவும், பங்காகவும் மகிழச்சியாக வாழ்கிறோமா? நம்மிடையே ஒருவர் மற்றவருக்கு இடையே பெரும் கதவு நம்மை மூடியுள்ளதைத் திறக்க இரக்கத்தின ஆண்டு தொடரட்டும்.

6. இரக்கமுற்ற செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க இரக்கத்தின் ஆண்டு தொடரட்டும்...

அண்மைக் காலங்களில் நம் பங்குகளில், மறைமாவட்டங்களில், துறவறச் சபைகளில் பிறரின் மனத்தைப் பண்படுத்தும் வண்ணம் பழகத்தில் விடப்படும் மொட்டைக் கடிதங்கள், அவதூறுகள், வதந்திகள் போன்ற பிறரின் நற்செயலைக் கெடுக்கும் இரக்கமற்றச் செயல்கள் இனியும் நம் மத்தியில் இல்லாமல் இருக்க இரக்கத்தின் ஆண்டு தொடரட்டும்.

**இரக்க செயலை அடையாளமாகக் கொள்ளலாமே...!**

கடந்த ஆண்டு முழுவதும் தனிநபராகவோ அல்லது குடும்பமாகவோ அல்லது பங்காகவோ பல்வேறு இரக்கச் செயல்களில் ஈடுபட்டு வந்திருக்கலாம். நவம்பர் மாதம் இறை இரக்கத்தின் ஆண்டை திருச்சபை முடிக்கும் பொழுது நாம் இரக்கத்தின் ஆண்டைத் தொடர கீழ்காணும் தீர்மானங்களை எடுப்போம்.

- எனது குடும்பம் அல்லது பங்கு இறை இரக்க ஆண்டின் பயணமாக தொடர்ந்து செய்யவிருக்கும் ஓர் இரக்கச் செயல் என்ன?
- தனிப்பட்ட விதத்தில் நான் இறை இரக்க ஆண்டின் தொடர் பயணமாக தொடர்ந்து செய்யவிருக்கும் ஓர் இரக்கச் செயல் என்ன?

இறுதியாக...

இரக்கத்தின் செல்வந்தரான தந்தை கடவுளின் முகத்தை ஞாயிறு திருப்பலியில் நற்கருணை இயேசுவில் சந்திக்கும்நாம், இயேசுவின் இரக்கம் பற்றிப் போதித்தவைகளை, மேற்கோள் காட்டிய ஒப்பீடுகளை, உவமைகளைத் தியானித்து இறை இரக்கத்தை அனுபவித்து உணர ஒரு சென்மம் போதாது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது "இரக்கத்தின் முகம் " எண் 3இல் "இயேசுவை அருளடையாளங்கள் வழியாக அன்றாடம் வரவேற்கையில், தூய ஆவியாரின் துணையுடன் வானகத் தந்தையைப்போல் இரக்கமுள்ளவர்களாய் மாற முடியம். நமது வாழ்வை அவரது நன்மைத்தனத்தின் அடையாளமாக, ஓர் இலவசக் கொடையாக வழங்கவும் கற்றுக்கொள்வோம்" என்று கூறியுள்ளார்.இரக்கத்தின் யூபிலி ஆண்டின் அடிப்படைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து வாழ வேண்டிய கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகவும் பொருந்தும். இரக்கத்தின் சீடர்களாகவும், தூதுவர்களாகவும் மாறி, இறை இரக்கச் செயல்கள் வழியாக இரக்கத்தின் ஆண்டைத் தொடர்வோம்.

# கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

பொரளை கனத்த பொது மயான பூமியின் உட்பகுதி ஓரத்தில் உள்ள கல்லறைகளில் காணப்படும் இறந்தவர்களின் எச்சங்களாக உள்ள பகுதிகளையும், அவர்களது நினைவுச் சின்னங்களையும், அகற்றுவதற்காக நீதி மன்ற உத்தரவைக் கோரும் வழக்கு தொடர்பான அறிவித்தல். இலங்கையின் சட்ட சாசனத்தில் மயான பூமி மற்றும் மனிதப் புதைக்குழிகள் காணப்படும் இடங்கள், பற்றிய கட்டளைச் சட்டத் (231ஆம் அத்தியாயம்)தின் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பம்.

இலக்கம் : DCE/00001/16 : இலங்கை சட்டசானத்தின் 231வது பந்தியில் காணப்படும் மயான பூமி மற்றும் மனிதப் புதை குழிகள் உள்ள இடங்கள் தொடர்பாக கட்டளைச் சட்டத்தின் 14வது சரத்தின் கீழ் கோரப்படும் விண்ணப்பமாகும்.

வீ.கே.ஏ. அனுர, மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்பு 07

## மனுதாரர்

எதிராக

அதிமேதகு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, பேராயர்

ஆயர் இல்லம், பொரளை, கொழும்பு - 08.

## எதிராளி

பொரளை கனத்த பொது மயான பூமியில் ரோமன் கத்தோலிக்கப் பிரிவில் அடங்கும் பகுதியில் நல்லடக்கம் செய்யப்படடுள்ள, வணக்கத்துக்குரிய பெல்பொல விபஸ்ஸிதேரர் மாவத்தை, கித்துள்வத்த வீதி, என்பன தொடர்புபடும் நிலப்பகுதி, ஓரத்தின் உட்பகுதியிலுள்ள கல்லறைகளில் காணப்படும் இறந்தவர்களின் எச்சங்களின் பகுதிகளையும், அவர்களது நினைவுச் சின்னங்களையும் அகற்றுவதற்காக, உத்தரவொன்றைப் பிறப்பிக்குாறு இந்நீதிமன்றத்தில் மேற்படி இலக்க மயான பூமி பற்றிய சட்டத்தின் கீழ் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. நல்லடக்கம் செய்யப்பட்ட திகதி இறந்தவர்களின் பெயர், மரண அத்தாட்சிப்பத்திரத்தின் இலக்கம், என்னும் விபரங்கள் இங்கு பின்வரும் உப அட்டவணையில் மிகவும் விபரமாகக் குறிப்பபிடப்படும். 39 கல்லறைகள் இதில் அடங்குவதுடன், குறிப்பிட்ட வணக்கத்திற்குரிய பெல்பொல விபஸ்ஸி தேரர் மாவத்தை, கித்துள்வத்த வீதி என்பன தொடர்புபடும் பாதை அகலமாக்கப் படுவதற்காக, மனுதாரருக்குத் தேவைப்படும் காணிப்பகுதியின் அளவு 17.92 பர்ச்சஸ் ஆகும். மயான மற்றும் மனிதப்புதைக்குழி இடங்கள், தொடர்பான கட்டளைச்சட்டத்தின் 14வது சரத்தின் கீழ் மனுதாரர், இவ்விண்ணப்பத்தை முன்வைக்கின்றார். மனுதாரரினால் அந்த இறந்தவர்களின் எச்சங்களாகக் காணப்படும் பகுதிகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் அகற்றப்பட்ட பின்னர் அவை கனத்த பொது மயான பூமியின் பிரிதொரு இடத்தில் வைப்புச் செய்யப்படும்.

இது தொடர்பாக ஆர்வங் காட்டும் எந்தவொரு நபரும் 2017.01.30ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு. இந்நீதிமன்றத்தில் (இல 09) முன்வந்து மனுதாரரின் விண்ணப்பத்தை இடமளிக்காது, மறுப்பதற்கு ஏதாவது காரணங்கள் இருப்பின் அவற்றைத் தெரிவித்தல் வேண்டும்.

**1ஆம் உப அட்டவணை**

நபர்களுக்காக பிரதானிகளால் வழங்கப்பட்டுள்ள மனிதப்புதை குழிகளுக்கான நிலப்பகுதிகள் பற்றிய விபர அட்டவணை

| | வழங்கப்பட்ட திகதி | உறுதியின் இலக்கமும் வரைபட இலக்கமும் | பகுதி இலக்கம் | வழங்கப்பட்ட நபர்களின் பெயரும் விலாசமும் |
|---|---|---|---|---|
| 01 | 11.12.1973 | A.917/2269 - 1518 | 6FA18 | திரு. W.H. பர்டினென்ட் மே/பா நல்லாயன் கன்னியர் மடம், கொழும்பு -13 |
| 02 | 18.09.1973 | A.829/2249 - 1504 | 6FA19 | திருமதி. B. பெர்ணாந்து, 274/10, தெமட்டகொட வீதி கொழும்பு - 09 |
| 03 | 27.06.1968 | A.510/1825 - 1230 | 6FA21 | திரு. மில்ரோய் பொன்சேக்கா, எம் / 44 ஹட்சன் வீதி, கொழும்பு 03 |
| 04 | 01.11.1972 | A.829/2193 - 1454 | 6FA24 | திரு. வோல்டர் வென்ஹோஸ், 100/3 வோல் மாவத்தை கொழும்பு - 03 |
| 05 | 10.01.1973 | A.846/2212 - 1465 | 6FB19 | திரு நலின்ஸ்வேரிஸ், 88/4 எலிஹவுஸ் வீதி, மோதரை |
| 06 | 18.09.1972 | A.821/2187 - 1447 | 6FB24 | திரு. D.B ஆனந்தராஜா இல. 64, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13 |
| 07 | 03.05.1973 | A.868/2233 - 1484 | 6FC20 | திரு. R.C தசில்வா, 25 பிலிசியா மாவத்தை, ஹபு கொட கந்தானை |
| 08 | 22.10.1973 | A.910/2262 - 1508 | 6FD19 | திரு. M.C பெரென்ஜர், 5, ரோஸ்கோ, எவினியூ கொழும்பு - 07 |
| 09 | 22.10.1973 | A.910/2262 - 1508 | 6FD20 | திரு. M.C பெரென்ஜர், 5, ரோஸ்கோ, எவினியூ கொழும்பு - 07 |
| 10 | 30.04.1973 | A.866/2252 - 1482 | 6FE20A | திரு. விஜேரத்ன 65/10 பாக்வீதி கொழும்பு - 02 |
| 11 | 05.03.1974 | A.928/2274 - 1528 | 6FE22 | J.X.Y பர்னாந்து 62 முவர் வீதி, கொழும்பு - 06 |
| 12 | 28.12.1973 | A.919/2272 - 1520 | 6FE23 | திரு. S. ஸ்திமானி, 51/8 ஸ்வர்ண வீதி, கொழும்பு - 06 |
| 13 | 03.02.1966 | A.323/1661 - 1086 | 6FK17 | திரு. H. ரணசிங்க, மோதரை |
| 14 | 07.04.1973 | A.862/2228 - 1479 | 6FF19 | திரு. நொயல் பெரேரா 14/2 மீகொட கொலன்னாவ, வெல்லம்பிட்டிய |
| 15 | 10.04.1973 | A.901/2256 - 1502 | 6FF20 | S. தொன் அன்டனி மஹாபாகே |
| 16 | 28.02.1974 | A.926/2279 - 1526 | 6FF20A | திரு. A.W. ஜென்ஸ் 178/05, பஹலபியகம, யடவத்த |
| 17 | 25.03.1974 | A.928/2274 - 1529 | 6FG19 | திரு. C.H. தமெல் வராகொட களனிய |
| 18 | 04.08.1973 | A.891/2244 - 1494 | 6FG20A | திரு. J. ராஜகார் இல் 17 வூட்லன்ட் அவனியூ, நுகேகொட |
| 19 | 02.08.1973 | A.869/2204 - 1483 | 6FG21 | திரு. H. டெமிபெனல், புளுமெண்டல் மாடி வீடு, கொழும்பு - 13 |
| 20 | 16.11.1973 | A.918/2267 - 1514 | 6FH18 | திரு. B.D.F. விஜேசுந்தர 18, யக்கல வீதி கம்பஹா |
| 21 | 20.01.1975 | A.934/2289 - 1531 | 6FH21 | திரு. சூர் 349, நெலும் மஹர வீதி, மஹரகம |
| 22 | 21.07.1975 | A.935/2287 - 1532 | 6FH22 | திரு. மைக்கல், 452, தெமட்ட கொட வீதி, கொழும்பு - 09 |
| 23 | 28.12.1973 | A.919/2272 - 1520 | 6FE22A | திரு. S. அனோமா 51/8 ஸ்வர்ண வீதி, கொழும்பு - 06 |

**2ஆம் உப அட்டவணை**

2 கோரும் நிலப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள சடலங்கள் பற்றிய விபரம்

| தொடர் இல | இறந்தவர் பெயர் | இறந்த திகதி | வயது | ஆண் பெண் | மரணத்திற்கான காரணம் | நல்லடக்கம் செய்த திகதி | மரண அத்தாட்சி பத்திர இலக்கம் | நல்லடக்கம் செய்த இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ரொஸமன் டிரஸ் சொக்மன் | 2011.08.21 | 71 | பெண் | இயற்கை காரணம் | 2011.08.26 | 704/2011 - 22.08.2011 | 6FA18-1518 |
| 02 | பீ.சீ பர்னாந்து | 2000.08.05 | 84 | பெண் | வயது பலவீனம் | 2000.08.07 | | 6FA19 - 1504 |
| 03 | எஸ். ஜயசேகர | 1964.03.10 | | ஆண் | நீரிழிவு | 1964.03.11 | 1051 - 10.03.1964 | 6FA21 |
| 04 | மேபல் டென் ஹோப் | 1972.09.22 | 78 | பெண் | வயதான காரணம் | 1972.09.24 | 504 - 22.09.1972 | 6FA24 - 1404 |
| 05 | எஸ் சிமாரன் | 1972.08.22 | 72 | பெண் | சுவாசக் குறைபாடு | 1972.08.23 | 8892 - 22.08.1972 | 6FB19 - 1468 |
| 06 | என். ஆனந்தராஜா | 1995.08.05 | 83 | பெண் | வயதான காரணம் | 1995.08.06 | 3895 - 05.08.1995 | 6FB24 -1447 |
| 07 | ஈ.எம். டெனோர்காட் | 1972.09.05 | 66 | கு.வில்லை | டர்மிகல் இல் | 1972.09.07 | 8656 - 1972.09.06 | 6FC20 - 1484 |
| 08 | எம்.டீ. பேரென்ஜர் | 1973.01.24 | | பெண் | வாகன விபத்து | 1973.01.25 | IC - 24.01.1973 | 6FD20 |
| 09 | சீ.ஆர் பெரன்ஜர் | 1973.01.24 | | ஆண் | வாகன விபத்து | 1973.01.25 | IC - 24.01.1973 | 6FD19 |
| 10 | ஈ.ஈ. மாபர் லூக்கஸ் | 1993.03.19 | 76 | பெண் | காசனோமா ஓப்தடயட்ரஸ் | 1993.03.20 | 3484 - 1993.03.19 | 6FB20 -1482 |
| 11 | ஜே.எக்ஸ்.டீ. பெர்ணான்டோ | 1973.02.24 | 70 | ஆண் | சுவாசத்தொகுதி குறைபாடு | 1973.02.25 | 1958 - 24.02.1973 | 6FB22 |
| 12 | விக்டோரியா பாக்கியம் | 1973.02.26 | 83 | பெண் | வயது | 1973.02.26 | 843 - 1973.02.25 | 6FB23 - 1520 |
| 13 | ஏ. ரணசிங்க | 1998.03.11 | 70 | ஆண் | காடியோ டெஸ் பிரேடர், பெய்லியர், ஹைஸ் ரேட் | 1998.03.14 | 9794 - 1998.03.11 | 6FK17 -1086 |
| 14 | கேகிலியன் பெரேரா | 1973.02.28 | 58 | பெண் | இதய நோய் | 1973.03.03 | 1973 - 01.03.1973 | 6FB19 |
| 15 | கிரிலா பர்னாந்து | 1973.03.06 | 57 | பெண் | சுவாசக் குறைபாடு | 1973.03.08 | 2169 - 06.03.1973 | 6FF20 |
| 16 | எம். கெகரின் ஜேன்ஸ் | 2005.12.23 | 79 | பெண் | புற்றுநோய் | 2005.12.26 | | 6FF20 - 1526 |
| 17 | ஏ. சில்சியா பர்னாந்து | 2006.07.11 | 63 | பெண் | இயற்கை காரணம் | 2006.07.14 | 2270 - 11.07.2006 | 6FG19 - 1529 |
| 18 | ஆர்.ஈ.ஜே கனகரத்ன | 2014.05.03 | 64 | பெண் | இயற்கை காரணம் | 2014.05.06 | 3775 - 03.05.2014 | 6FG20 - 1494 |
| 19 | சி.என்.பீ சொய்சா | 1973.04.16 | 42 | ஆண் | சிரோசிஸ் ஒப் லிவர் | 1973.04.18 | 565 - 16.04.1973 | 6FG21 |
| 20 | ஈ.பி.ஜீ விஜேசுந்தர | 1973.09.16 | 54 | ஆண் | வெளிக்காரணி சுவாசம் | 1973.09.17 | 1118 - 16.09.1973 | 6F1118 |
| 21 | கார்ள் பெரேரா | 1974.01.13 | 51 | ஆண் | விபத்து | 1974.01.16 | 7105 - 13.01.1974 | 6FH21 |
| 22 | எம்.எஸ். மைக்கல் | 2014.01.08 | 70 | பெண் | இயற்கை காரணம் | 2014.01.10 | 3573 - 08.01.2014 | 6FH22- 1532 |
| 23 | எம். பெஸ்டியன் | | 64 | ஆண் | இயற்கை காரணம் | 1994.07.13 | 1244/94/A - 10.07.1994 | 6FB21 - 1520 |

» » 15

## 03 ஆண்டவரின் திருக்காட்சி

நம்பிக்கையுடன் அறிவிப்பார்கள். தொடர் தேடலில் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்வார்கள். நாங்களும் இறைவனைத் தேடி ஆலயம் வருகிறோம். எதைக் கொண்டு போகிறோம். பிறந்திருக்கும் புதிய ஆண்டில் நம் இறைவனுக்கு எதை பரிசாகக் கொடுக்கப் போகிறோம். பொன்னையும் பொருளையுமா? அல்லது பணத்தையா? இறைவன் அதையா எதிர்பார்க்கிறார்? இல்லை உன்னையே தான் எதிர்பார்க்கிறார். உங்கள் எண்ணங்களையும், செயல்களையும், தியாகங்களையும், இரக்கத்தையும், பகிர்வையுமே எதிர்பார்க்கிறார். இறைவனை நாம் காண தன்னிலை துறக்க வேண்டும்.

## XX உலக இஸ்லாமிய

இலக்கியவாதிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டாலும் இஸ்லாம் அல்லாத மூன்று முக்கிய ஆளுமைகளுக்கே சிறப்பு விருது வழங்கப்பட்டது. பல்வேறு தளங்களில் தமிழ்ப் பணியாற்றும் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார், மூத்த எழுத்தாளரும் மல்லிகை ஆசிரியருமான திரு. டொமினிக் ஜீவா, மூத்த எழுத்தாளரும் ஞானம் சஞ்சிகையின் ஆசிரியருமான டாக்டர் தி. ஞானசேகரன் ஆகியோருக்கே இந்த சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இரண்டாம் நாள் நிகழ்வில் ஜனாதிபதி கௌரவ மைத்திரிபால சிறிசேனா அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். இவர் மூன்றாம் நாள் நிறைவு விழாவில் கலந்துகொண்டு விருதுகளை வழங்க இருந்தார். ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டார். இலங்கை இஸ்லாமிய ஆய்வகம் இம்மாநாட்டைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது.

**தகவல் : திரு லவ்ஸ்டன், மன்னார்**

## XIX புனித யோசேவ்வாஸ்..

முன்னெடுக்கவும் திருத்தந்தை பிரான்சிஸ்.. அவர்களின் வேண்டுகோளின் படி குருநாகால் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹெரல் அன்டனி ஆண்டகையின் தலைமையில் ஓர் திருத்தலம் அமைப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. இவற்றை முன்னேடுத்துச் செல்ல எமது பங்குதந்நதை அருட்பணி அலெக்ஸ் ஜானக அடிகளாரின் வழிகாட்டலின் பங்கு மக்களும் இணைந்து செயல்படுகின்றனர்.

புனித யோவேவ்வாஸ் அடிகளாரின் ஆலயம் எவ்வித தங்குதடைகள் இன்றி ஆரம்பிக்கவும் எமது மூதாதையரின் விசுவாச வாழ்வை நாமும் கட்டிக்காத்து எமது இளைய சந்ததியினருக்கும் விட்டுச்செல்ல, இறைவனை வேண்டிய நிற்போம். அத்தோடு 2017 தை மாதம் 14ஆம் திகதி ஆலய அடிக்கல் நாட்டு விழாவும் வருடாந்த திருவிழா திருப்பலியும் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**ஆக்கம் : ஓய்வுபெற்ற ஆசிரியை சபினாபிள்ளை**

## XVII சிலைகளும் சிலை வழிபாடும்

பணமே இவரின் சிலை. அதைத் தேடும் தவறான வழிகள் இவரின் சிலை வழிபாடு

அதிகாரம் பணி என்ற போலி முகமூடிவை அணிந்து கொண்டு ஒருவர் அதிகாரத்தை இறுகக் கட்டிப் பிடிக்கும்போது, பதவிமோகம் தரும் அதிகாரம் இவரின் சிலை. இவ்வதிகாரத்தை மற்றவர்கள்மேல் செலுத்தி அவர்களை அடிபணிய வைப்பதில் எழும் இன்பம் இவரின் சிலை வழிபாடு

**பெயர் புகழ்**

தன்னை மற்றவர்கள் பெரியவர். அறிவாளி ஆற்றல் உள்ளவர், உயர் குடியினர் வல்லவர் என்று தன் பெயர் புகழை உயர்த்துவதே இவரின் சிலை. தான் செய்வது எல்லாவற்றிலும் தன் பெயரைப் பொறிக்க எடுக்கும் இவரின் முயற்சிகள் எல்லாம் இவரின் சிலைவழிபாடு.

**காமம்**

காமமே வாழ்வு என்னும் ஒருவருக்கு காமம் இவரின் சிலை. இதை இடைவிடாது அனுபவிக்கும் போக்கும். இவரின் சிலை வழிபாடு

**உணவு**

அளவுக்கு அதிகமான உணவுப் பிரியம் ஒருவருக்கு சிலை ஆகலாம். அதிகம் உண்ண ஆசைப்படுவது இவரின் சிலை வழிபாடாகலாம்.

கல்லைக் கடவுளாக்கினால் அது சிலை, மாறாக கல்லிலே கடவுளைக் கண்டால் அது சின்னம். கல்லை வழிபட்டால் அது சிலை வழிபாடு. மாறாக கல்லில் காணும் கடவுளை வழிபட்டால் அது கடவுள் வழிபாடு

பிலிப் I.V. DEi

## 14 கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

**3ஆம் உப அட்டவணை**

2 பொது சடலங்கள் புதைக்கப்படும் இடங்களில் புதைக்கப்பட்டுள்ள சடலங்கள் பற்றிய விபரங்கள்

| தொடர் இல | இறந்த திகதி | இறந்த வர் பெயர் | இடத்து இல்ககம் | மரண அத்தாட்சி பத்திர இலக்கம் | நல்லடக்கம் செய்த திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | 25.03.2016 | தேவசிகாமணி பிலோமினா | 6EM19 | 706 | 28.03.2016 |
| 02 | 28.03.2016 | டப்லி. சீலவதி | 6FE20 | 6022 | 30.03.2016 |
| 03 | 29.03.2016 | வரைவி. கணகலிங்கம் | 6FB20 | 1046 | 30.03.2016 |
| 04 | 28.03.2016 | சின்னராஜா என்டன் செல்வராஜா | 6EM20 | 4618 | 30.03.2016 |
| 05 | 29.03.2016 | ஆர்.ஏ கமலாவதி | 6EM20A | 761 | 02.04.2016 |
| 06 | 03.042016 | டின்பிரட் கெல்டிஸ் சுரவீர | 6FB20A | 6042 | 04.042016 |
| 07 | 03.04.2016 | ஏனபல்லவராணி அல்பிரட் | 6ED21 | 38 | 06.04.2016 |
| 08 | | ஆர். எ.டீ லெனார்ட் லக்சான் | 6EJ20 | 840/2016/R | 11.04.2016 |
| 09 | 11.04.2016 | அய்வன் | 6EM21 | 6230 | 12.04.2016 |
| 10 | 10.04.2016 | எஸ். திசேரா | 6FC20A | 6241 | 13.04.2016 |
| 11 | 12.11.2016 | மேரி திரேசாபிள்ளை | 6EO20A | 8123 | 13.11.2016 |
| 12 | 11.04.2016 | ஏன் டேவிட் | 6FB21 | 2990 | 13.04.2016 |
| 13 | 12.04.2016 | டேவிட் எஸ் முத்து | 6EJ20A | 7765 | 14.04.2016 |
| 14 | 16.04.2016 | எல்.பீ.டீ அபேகுணவர்த்தன | 6EJ21 | 5156 | 17.04.2016 |
| 15 | 15.04.2016 | பீ. எஸ். கோமஸ் | 6EJ22 | 897 | 18.04.2016 |
| 16 | 25.04.2016 | பீ. ஏ. மெடில்டா குரே | 6EM22 | 5431 | 25.04.2016 |

## 08 - 09 புனித யோசேவ்வாஸ் முனிவரின்....

**வைசூரி நோயும் முனிவரின் அர்ப்பணிப்பும்**

1686 அளவில் கண்டியில் கொடிய உயிர் கொல்லி நோயான வைசூரி வேகமாக பரவியது. நோயாளிகள் கைவிடப்பட்டுக்கிடந்தனர். இறந்தவர்களை அடக்கம் செய்யக் கூட தயங்கினர். உடல்களை காடுகளிலே வீசினர். வசதி படைத்தோர் இடம்பெயர்ந்து ஓடித்தப்பினர். இத்தகைய சூழலில் முனிவரும் இரண்டு குருமாரும் நோயாளிகளை ஒன்று சேர்த்து சேவையாற்றத் தொடங்கினர். அவர்களுக்கு கஞ்சி சுமந்து கொண்டு சென்று கொடுத்தல், உடை இல்லாதவர்களுக்கு உடை வழங்குதல், நோயாளிகளின் புண்களை தூய்மைப்படுத்தி மருந்திடுதல், இறந்தோரை அடக்கஞ் செய்தல் என்று பாரிய பணிகளை செய்து அந்த மனிதப் பேரவலத்திற்கு உதவி புரிந்தனர். இவர்களது சேவையை கண்ட பல நோயாளிகள் மனம்மாறி ஞானத்தீட்சை பெற்றனர். இவ்வாறு இவர்கள் செய்த அளப்பரிய சேவை மக்கள் மத்தியில் நன்மதிப்பையும், மன்னனிடத்தில் அதிக அபிமானத்தையும் பெற்றுக் கொடுத்தது. அதேவேளை மன்னன் விமலதர்மசூரியன் மருத்துவ நூல் ஒன்றினை ஆக்கவிரும்பி போர்த்துக்கேய மொழியில் இருந்த மருத்து நூலை மொழிபெயர்ப்பு செய்ய முனிவரை நாடினான். முனிவர் அதற்கு உதவினார். அக்காலத்தில் ஞான விசாரணைக்கு கார்வலு சுவாமியை அனுப்பினார். அவர் நீண்ட பயணங்கள் செய்து நோய்வாய்ப்பட்டு 1702 ஆடி 22இல் இறந்தார். அவருக்குப் பதிலாக "தாசல் தானா" என்ற குருவானவர் அனுப்பிவைக்கப்பட்டார்.

**முனிவரின் பயணங்களும் பணிகளும்**

இவ்வாறு சவால்களிலும் சோதனைகளிலும் முகங்கொடுத்து திருச்சபையை இலங்கைக்குள் கட்டி எழுப்பிக் கொண்டிருந்த யோசேவ்வாஸ் முனிவர், புத்தளம், சிலாபம், மன்னார், யாழ்ப்பாணம், தீவகம், திருகோணமலை, மட்டக்களப்பு... என நீண்ட பயணங்களை மேற்கொண்டும் பங்குகளை உருவாக்கியும் மூப்பர்களை நியமித்தும், ஞானவிசாரணை செய்தும், அருட்சாதனங்களை வழங்கியும், ஓய்வில்லாமல் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரது பெருமுயற்சிகளும், அர்ப்பணிப்புமிக்க வாழ்வியலும், இறைபக்தியும், தன்நம்பிக்கையும், திருச்சபையை வேகமாக தளைக்கச் செய்தன.

அவரது பணியின் சிறப்பையும் திருச்சபையின் எழுச்சியையும் அறிந்த கொச்சின் மேற்றாசனம் மேலும் நான்கு குரவர்களை இலங்கைக்கு அனுப்பியது. யோசேவ் தே யேசு மரியா, மைக்கேல் டி மெல்லோ மனுவல் டி மிரண்டா, யாக்கோமே கொண்சால்வேஸ், ஆகிய நான்கு குருக்களும் 1705இல் மன்னார் வந்தடைந்தனர். அவர்களோடு இணைந்த முனிவரும் ஏனைய இருவருமாக ஏழு பேரும் வன்னியில் ஒன்றாக 1705 புரட்டாதியில் நிறைவேற்றினார்கள்.

வந்த குருக்களை கோவிற்பங்குகளுக்கு ஏற்ப பிரித்து இலங்கைத் திருச்சபையை முனிவர் சிறப்பாக வழிநடத்தினார். வேத உண்மைகளை சுதேசிய மொழிகளில் மொழி பெயர்க்கவும், நூலாக்கவும் முயன்றார். எழுத்தாற்றல் மிக்க யாக்கோமே கொண்சால்வேஸ், இப்பணிக்கு முனிவருக்கு உதவினார். 1706 கார்த்திகை 26, பரிசுத்த பாப்பரசரினால் இலங்கை திருச்சபை அங்கீகரிக்கப்பட்டு பொது நீரோட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டது.

**இலங்கை திருச்சபையின் வளர்ச்சியும் முனிவரின் இறப்பும்**

ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் அடக்கி, ஒடுக்கி அழிக்கப்பட்டு குற்றுயிராய்க்கிடந்த திருச்சபைக்கு உயிர் கொடுத்த யோசேவ்வாஸ் முனிவரின் பணி வார்த்தைகளுக்குள் அடக்கப்படக்கூடியது அல்ல, டச்சு ஆதிக்கர்களின் கால் இடுக்குகுளுக்குள்ளேயே சத்திய வேதத்துளிரை வளரவிட்டு மரமாக்கியவர். இலங்கையில் அவர் வாழ்ந்த 24 வருடங்களிலும் அவர் எதிர்கொண்ட சவால்கள், சிறைவாழ்வு, உயிராபத்துக்கள், வஞ்சனையாளர்களின் சூழ்ச்சிகள்... சொல்லி முடியாதவை. இவைகளையெல்லாம் இறைபக்தியோடு எதிர்கொண்டு திருச்சபையை வளர்த்தெடுத்தார்.

1710 தொடக்கத்தில் தனது இறுதிப்பயணத்தினை அளம்பிலி கெட்டியாரகுடா திருகோணமலை, மட்டக்களப்பு என முடித்து திரும்பும் வழியில் நோயுற்றார். அவரை பல்லக்கில் ஏற்றியே கண்டிக்கு கொண்டு வந்தனர். அவரது உடல் நிலைக்கு பயணம் செய்தல் பொருத்தமற்றது என்று வைத்தியர்கள் கூறி இருந்தும், நோயாளிக்கு அவஸ்தை கொடுக்க ஒருநாள் பயணந் தொடர்ந்தவர். வரும்போது பல்லக்கில் இருந்து விழுந்து அடிபட்டார். அது அவரது கைகால்களை முடமாக்கியது மட்டுமன்றி, தலையில் பெருங்கட்டு உருவாகி காது கேட்க முடியாமலும், தலை வலியினாலும் வருந்தச் செய்தது. நான்கு மாதம் நோயினால் வருந்தி, ஆவணி 10ல் கோவைக்கு தனது இறுதிக் கடிதத்தையும் வரைந்துவிட்டு, "மெனெ செஸ்' சுவாமியை தனது இடத்திற்கு நியமித்துவிட்டு 1711 தை மாதம் 16ந் திகதி நடுநிசி அளவில், பாடுபட்டு இயேசுவின் சிலுவையை கையில் ஏந்தியவாறு பரவசத்துடன் தனது இன்னுயிரை இறைவனிடம் கையளித்தார். அவர் இறக்கும்போது அவருக்கு வயது 60. இறுதிக்காலத்தில், கொச்சின் மேற்றாசனம் தான் விட்ட தவறுகளை உணர்ந்து, முனிவரை கோவைக்கு அழைத்து சிறப்பிக்க நினைத்தது. ஆனால் முனிவர் அவை எதனையும் விரும்பாமல், இலங்கையிலேயே இறுதிவரைப் பணியாற்றி இறந்தார். அவர் வாழ்ந்த காலத்தில், சில்லாலை தொடக்கம், கண்டிராத எத்தனையோ புதுமைகள் அவருடாக நடந்தேறியதாக கூறப்படுகின்றது. அவரது புனித வாழ்வியலைக் கண்டு அக்கால இலங்கையர் "சம்மனசுச்சுவாமி" என்ற பெயரிட்டே அழைத்தனர். இத்தனை பெருமைக்குரிய இலங்கை அப்போஸ்தலர் யோசேவ்வாஸின் விண்ணக பிறப்பின் 300வது ஆண்டினைக் கொண்டாடும் இலங்கை மக்கள் ஒவ்வொருவரின் இதயத்திலும் பொதிக்கப்படவேண்டிய ஒரு வரலாற்று நாயகனாக யோசேவ்வாஸ் இருக்கின்றார் என்றால் மிகையாகாது

**நன்றி இறையியல் கோலங்கள்.**

# பொங்கல் ஸ்பெஷல்



## சுவையான சக்கரை பொங்கல்

பொங்கல் பண்டிகை என்றாலே பொங்கல் மற்றும் கரும்பு தான் ஸ்பெஷல். அதிலும் அந்த பொங்கலை புத்தம் புதிய அரிசியால், வெல்லம், நெய், பால் போன்றவற்றை வைத்து, சுவையாக அதிகாலையில் எழுந்து வைத்து, சூரியனுக்கு படைத்து வணங்குவர். பொங்கலின் ஸ்பெஷலே, பொங்கல் பொங்குவது தான். பொங்கலின் மற்றொரு சிறப்பான கரும்பிற்காகவே பொங்கல் பண்டிகைக்கு காத்துக் கொண்டிருப்பார்கள். ஏனெனில் இந்த பண்டிகையின் போது கரும்பு மிகவும் விலை குறைவில் கிடைக்கும். அத்தகைய சிறப்புடன் இருக்கும் பொங்கல் பண்டிகையின் போது வைக்கப்படும் சர்க்கரைப் பொங்கலுக்கான செய்முறையைக் கொடுத்துள்ளோம். அதைப் படித்து சர்க்கரைப் பொங்கலை வைத்து, பொங்கல் பண்டிகையை சந்தோஷத்துடன் கொண்டாடி மகிழுங்கள்.

### தேவையான பொருட்கள்:



- ★ பச்சரிசி - 1/2 கிலோ
- ★ பாசிப்பருப்பு - 50 கிராம் (ஊற வைத்து கழுவியது)
- ★ பால் - 3/4 லிட்டர்
- ★ முந்திரி - 10
- ★ உலர் திராட்சை - 10
- ★ வெல்லம் - 600 கிராம் (பொடி செய்து கொள்ளவும்)
- ★ நெய் - 150 கிராம்
- ★ பச்சை கற்பூரம் - 1 சிறிய கட்டி (பொடி செய்து கொள்ளவும்)
- ★ ஏலக்காய் பொடி - 1/2 டீஸ்பூன்

### செய்முறை:

முதலில் அரிசியை நீரில் ஊற வைத்து, பின் கழுவிய நீரை தனியாக ஒரு பாத்திரத்தில் ஊற்றி வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு மண் பானை அல்லது பொங்கல் வைப்பதற்கான பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் பால் மற்றும் அரிசி கழுவிய நீரை பாத்திரம் முழுவதும் நிரப்ப வேண்டும். பாலானது நன்கு கொதித்து, பொங்கி வரும் போது, அதிலிருந்து சிறிது நீரை எடுத்து விட்டு, பிறகு அரிசி மற்றும் பாசிப்பருப்பை போட்டு, நன்கு கிளற வேண்டும். அதே சமயம் மற்றொரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் நெய் ஊற்றி, முந்திரி மற்றும் உலர் திராட்சையை போட்டு, வறுத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

அரிசியானது வெந்ததும், அதில் வறுத்து வைத்துள்ள முந்திரி, உலர் திராட்சை மற்றும் சற்று தாராளமாக நெய் ஊற்றி பிரட்டி, பின் பொடி செய்து வைத்துள்ள வெல்லத்தை போட்டு, நன்கு கிளற வேண்டும். வெல்லம் கரைந்ததும், அதில் ஏலக்காய் பொடி மற்றும் பச்சை கற்பூரத்தை போட்டு ஒரு முறை கிளறி இறக்கி விட வேண்டும். இப்போது சுவையான சர்க்கரைப் பொங்கல் ரெடி!!! குறிப்பு : பொங்கலை மண்பானையில் செய்தால், அதன் சுவைக்கு அளவே இருக்காது. எனவே முடிந்தவரை மண்பானையில் செய்யவும்.

# வீட்டில் எறும்புத் தொல்லையா?

## இதையெல்லாம் ட்ரை பண்ணுங்க



நமது வீட்டில் சமையலறைக்கு சென்று சக்கரை டப்பாவைத் திறந்தால் போதும் அங்கு இருக்கும் சக்கரையை விட எறும்புகள் தான் அதிகமாக இருக்கும். மேலும் நமது வீட்டின் மூலைகயில் எறும்புகள் ஓட்டை போட்டு தங்கியிருக்கும். எனவே இந்த எறும்புகளை அழிப்பதற்கு கடைகளில் சென்று மருந்துகள் கலந்த சாக்பீஸ் போன்றவற்றை பயன்படுத்துவோம். ஆனால் எந்தவித பயனும் இல்லாமல் முடிவில் தோல்வியே மிஞ்சும். நமது வீட்டில் இருக்கும் இயற்கைப் பொருட்களைக் கொண்டு எறும்புகள் வராமல் தடுக்கமுடியும். எனவே நமது வீட்டில் இருக்கும் இயற்கைப் பொருட்களின் மூலம் எறும்புகளின் தொல்லையிலிருந்து எப்படி விடுபடுவது என்பதை பற்றி தெரிந்து கொள்வோம்.

**ஆப்பிள் சீடர் வினிகர்**

ஆப்பிள் சீடர் வினிகர் மற்றும் நீரை சம அளவில் கலந்து, அதனை ஒரு ஸ்பரே பாட்டிலில் ஊற்றி, எறும்புகள் இருக்கும் இடத்தில் தெளித்தால் எறும்புகள் அழிந்துவிடும்.

**மசாலாப் பொருட்கள்**

மசாலாப் பொருட்களாக மிளகுத் தூள், மஞ்சள் தூள், பட்டைத் தூள் மற்றும் உப்பு ஆகியவற்றை எறும்புகள் வரும் இடத்தில் தெளித்தால் எறும்புகள் வருவதைத் தடுக்கலாம்.

**வெள்ளரிக்காய்**

எறும்புகளைக் கொல்வதற்கு உதவும் பொருட்களில் ஒன்று தான் வெள்ளரிக்காய். இதை எறும்புகள் வரும் இடத்தில் வைத்தால், எறும்புகள் வராது.

**புதினா**

புதினாவை உலர்த்தி, அதனைப் பொடி செய்து, எறும்புகள் வரும் இடங்களான ஜன்னல் கதவுகள் மற்றும் வீட்டின் மூலைகளில் உள்ள ஓட்டைகளில் தூவினால், எறும்புகள் வராமல் இருக்கும்.

**பேக்கிங் சோடா**

பேக்கிங் சோடா மற்றும் சர்க்கரை பேக்கிங் சோடாவுடன் சமமான அளவில் சர்க்கரை சேர்த்துக் கலந்து, அதனை எறும்புகள் வரும் இடத்தில் தூவி விட வேண்டும். இதனால் எறும்புகள் அதை சாப்பிட்டு இறந்துவிடும்.

**டால்கம் பவுடர்**

இது மிகவும் சிறப்பான ஓர் எறும்புக் கொல்லிப் பொருளாக இருக்கிறது. பவுடரை எறும்புகள் உள்ள இடத்தில் தூவி விட வேண்டும். இதனால் எறும்புகள் தொல்லையிலிருந்து விடுபடலாம்.

**கிராம்பு**

சர்க்கரை டப்பாவில் சிறிது கிராம்புகளை போட்டு வைத்தால், எறும்புகள் சர்க்கரை டப்பாவில் வராமல் தடுக்கப்படும்.

**பூண்டு**

பூண்டுகளைத் தட்டி, அதனை எறும்புகள் உள்ள இடத்தில் வைத்தால், நொடியில் எறும்புகள் அனைத்தும் மாயமாய் மறைந்துவிடும்.

**எலுமிச்சை சாறு**

எறும்புகள் அதிகமாக இருக்கும் இடத்தில் சிறிது எலுமிச்சை சாற்றினை ஊற்றி வைத்தால், எறும்புகள் வராமல் இருக்கும். மேலும் வீட்டை துடைக்கும் போது, எலுமிச்சை சாறு கலந்த நீரில் நனைத்துத் துடைத்தால், எறும்புகள் வருவதைத் தடுக்கலாம்.

**போராக்ஸ் பவுடர்**

போராக்ஸ் பவுடரை எறும்புகள் உள்ள இடத்தில் தூவியோ அல்லது சர்க்கரை நீரில் கலந்தோ தெளித்தால், எறும்புகளின் தொல்லையில் இருந்து விரைவில் விடுபடலாம்.




# சளி மற்றும் இருமலுக்கான



## பாட்டி வைத்தியங்கள்!

தற்போதுள்ள காலநிலை மாற்றத்தால் ஏராளமானோர் இருமல், சளி போன்றவற்றால் கடுமையாக அவஸ்தைப்படுவார்கள். நீங்களும் இருமல், சளியால் அவஸ்தைப்படுபவராயின் அதற்கு கண்ட கண்ட மாத்திரைகளை எடுக்காமல், இயற்கை வழிகளின் மூலம் சரிசெய்ய முயலுங்கள். அதிலும் நம் பாட்டிமார்கள் பின்பற்றி வைத்தியங்களைப் பின்பற்றினால் இன்னும் சிறப்பான பலன் கிடைக்கும். இங்கு சளி, இருமலுக்கான சில பாட்டி வைத்தியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அதைப் படித்து பின்பற்றி சளி, இருமலில் இருந்து விடுபடுங்கள்.

- ✷ ஆரஞ்சு ஜுஸில் தேன் மற்றும் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து கலந்து குடித்தால், சளி, இருமல், தொண்டை வலி போன்றவற்றில் இருந்து விடுபடலாம்.
- ✷ கொய்யாப்பழத்தை மிளகுத் தூள் தொட்டு சாப்பிட, நுரையீரலில் உள்ள சளி வெளியேறி, இருமல் பிரச்சனையில் இருந்து தீர்வு கிடைக்கும்.
- ✷ மாட்டுப் பாலை நன்கு கொதிக்க வைத்து, அதில் தேன் கலந்து குடிப்பதன் மூலமும், சளி இருமல் தொல்லையில் இருந்து விடுபடலாம்.
- ✷ வெங்காயத்தை தீயில் சுட்டு சாப்பிடுவதன் மூலம் இருமல் மற்றும் சளியிலிருந்து விடுதலை கிடைக்கும்.
- ✷ வெற்றிலையை சாறு எடுத்து தேன் கலந்து குடித்தாலும் இருமலில் இருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும்.
- ✷ இரவில் படுக்கும் முன் பாலில் மிளகுத் தூள் மற்றும் மஞ்சள் கலந்து குடித்தால் இருமல் வருவதைத் தடுக்கலாம்.
- ✷ கற்பூரவள்ளி இலையை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்நீரைக் குடிப்பதன் மூலமும் விரைவில் சளித் தொல்லை நீங்கும்.

## குடும்ப தலைவிகளுக்கான வீட்டு உபயோக குறிப்புகள்....

- ✷ வீட்டில் எலித்தொல்லை அதிகமாக இருந்தால், எலி நடமாடும் இடங்களில் கருப்பு மிளகை அல்லது புகையிலை போட்டு வைத்தால் எலித்தொல்லை குறையும்.
- ✷ சட்டையில் ஒட்டியுள்ள பபிள்கம்மை நீக்க,அந்த சட்டையை குளிர்சாதன பெட்டியின் பிரீசரில் வைத்துவிட்டு,கொஞ்சம் நேரம் கழித்து எடுத்துப் பார்த்தால் போதும்.
- ✷ எலுமிச்சையிலிருந்து அதிக சாறு எடுக்க வேண்டுமென்றால், பிழியும் முன்னர் ஒரு மணி நேரத்திற்கு வெந்நீரில் எலுமிச்சையை ஊற வைத்தால் போதும்.
- ✷ உருளைக்கிழங்கு தோலை எளிதாக உரிக்க, வேக வைத்து எடுத்ததும் உடனே குளிர்ந்து நீரில் போட்டு வைத்தால் எளிதாக உரிக்கலாம்.
- ✷ கீரைகளை மூடிபோட்டு சமைக்கக்கூடாது. காய்கறி-களை ரொம்பவும் பொடியாக நறுக்கக்கூடாது. இதனால் சத்துக்கள் வீணாவதை தவிர்க்கலாம்.




## சிலைகள்

வானகத் தந்தைக்கும், வார்த்தையாய் ஆனவருக்கும், தூய ஆவியாருக்கும் கல், களிமண், மரம், உலோகம் போன்ற படைக்கப்பட்ட பொருட்களால் உருவங்கள் செய்து, இவைதான் அவர்கள் என்று அடையாளப்படுத்துவதே சிலைகள். சிலைகள் அவசியமாக ஆள் உருவில் இருக்கவேண்டும் என்பது நியதி அல்ல. எந்த உருவத்திலும் இவை இருக்கலாம்.

## சின்னங்கள்

இறந்தோரை அல்லது இருப்போரை நினைவுபடுத்த, கல், களிமண், மரம், உலோகம் போன்றவற்றால் கட்டிடங்களாக அல்லது வரையப்படும் படங்களாக இச்சின்னங்கள் இருக்கின்றன.

## சின்னங்களே சுரூபங்கள்

மனிதரான இயேசுவையும், இவரின் தாயாரான மரியாவையும், ஏனைய புனிதர்களையும் அடையாளப்படுத்தும் உருவங்களை கத்தோலிக்கர்கள் சுரூபங்கள் அல்லது படங்கள் என்கிறார்கள். இவை புனிதர்களைக் கடவுள்கள் ஆக்கிய சிலைகள் அல்ல, மாறாக இவை இவர்களை நினைவுபடுத்தும் அடையாளச் சின்னங்கள் மட்டுமே.

## சிலைகளா? சின்னங்களா?

நம்மில் சிலர் மனிதரை அடையாளப்படுத்தும் சின்னங்களைச் சிலைகள் என்று அழைப்பதால், கடவுளை அடையாளப்படுத்தும் சிலைகளையும். மனிதரை அடையாளப்படுத்தும் சின்னங்களையும் ஒன்றாக்கி, எல்லாவற்றையுமே சிலைகளாக்கி, சிலைகளில் இருந்து சின்னங்களை வேறுபடுத்த தெரியாது தடுமாறுகிறோம்.

## இயேசுவுக்கு சிலையா? சின்னமா?

வார்த்தையானவர் மனிதரானார். மனிதராகு முன் இருந்த வார்த்தையானவருக்குச் சிலையும் இல்லை, சின்னமும் இல்லை. மனிதரானபின் இவரை அடையாளப்படுத்தும் உருவங்கள் சின்னங்களாக மட்டுமே இருக்கின்றன. இவைகள் ஒருபோதும் சிலைகள் இல்லை.

## வானகத் தந்தையை நிலைவூட்டும் அடையாளங்கள்

வானகத் தந்தை தொடக்கமும் முடிவும் இல்லாதிருக்கிறார் என்பதை நினைவூட்ட ஒரு முதிர்ந்த வயதானவர் மேகங்களுக்குள் இருப்பதாக கற்பனைப் படம் வரைகிறார்கள். அல்லது இவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதை வெளிப்படுத்த ஒற்றைக் கண்ணை வரைகிறார்கள். இவைகள் சிலைகளும் அல்ல சின்னங்களும் அல்ல, வெறும் அடையாளங்கள் மட்டுமே.

## தூய ஆவியாரை நினைவூட்டும் அடையாளங்கள்

தூய ஆவியாரை அடையாளப்படுத்த ஒரு புறாவை வரைகிறார்கள். இயேசு திருமுழுக்குப் பெற்றபோது, தூய ஆவியார் இவர்மேல் புறா வடிவில் இறங்கினார் என்பதால் இவரை புறாவின் உருவத்தில் அடையாளப்படுத்துகிறார்கள். இதைப்போன்று நெருப்பு, தண்ணீர், மேகம், காற்று திருப்பொழிவு பெற்ற கரங்கள் என்று பல அடையாளங்கள் இவருக்கு இருக்கின்றன.

## கத்தோலிக்கரின் வழிபாடு

கத்தோலிக்கர்கள் மூவொரு இறைவனை மட்டுமே வழிபடுகிறார்கள். வானகத் தந்தையை மகிமைப்படுத்துவதே இவர்களின் இவ்வழிபாடு. இயேசு தம் பாடுகள், இறப்பு, உயிர்ப்பால் அவரை மகிமைப்படுத்துகிறார். இவரின் இப்புனித செயலில் பங்கெடுக்கத் தூய ஆவியார் கத்தோலிக்கரை இயேசுவோடு ஒன்றிணைக்கிறார். இதுவே கத்தோலிக்கரின் திருப்பலி என்ற திருவழிபாடு. இவர்களின் வழிபாட்டில் சிலைகள் எதுவும் இல்லை.

## கத்தோலிக்கரின் சுரூப வணக்கம்

மனிதரான இயேசுவுக்கும், இவரின் தாயாரான மரியாவுக்கும், புனிதர்களுக்கும் மரியாதை செய்வதுதான் கத்தோலிக்கரின் திருச்சுரூப வணக்கம். திருச் சுரூபங்களுக்கு இவர்கள் செலுத்தும் வணக்கத்தை, புனிதர்களைக் கடவுள்களாக்கி அவர்களுக்குச் செலுத்தும் வழிபாடு என்று சொல்வது ஒருவரின் அறியாமையைக் குறிக்கிறது. புனிதர்களின் வணக்கத்தை வழிபாடு என்று சொல்வது முற்றிலும் தவறானது. புனிதர்களின் சுரூபங்கள் வணக்கத்துக்கு உரியவையே அன்றி வழிபாட்டுக்கு உரியவை அல்ல.

## கத்தோலிக்கர் சிலைகளை வழிபடுகிறார்கள்?

கத்தோலிக்கர்கள் வானகத் தந்தைக்கும், வார்த்தை ஆனவருக்கும், தூய ஆவியாருக்கும் சிலைகள் எழுப்பி அவற்றை வழிபடுவதில்லை.

## மோசேயின் காலத்தில் நிகழ்ந்த சிலை வழிபாடு

வானகத் தந்தையோடு பேச, மோசே சீனாய் மலையின் உச்சிக்கு ஏறிச் சென்றார். இவரின் வருகை தாமதிக்கவே. மலையடிவாரத்தில் இருந்த மக்கள் (பெண்கள்) தங்கள் காது, கழுத்துக்களில் இருந்த நகைகளைக் கழற்றி ஆரோனிடம் கொடுத்து அவற்றை உருக்கி ஒரு மாட்டுக் கன்றை உருவாக்கினார்கள். காளை மாடுகளைக் கடவுள் என்று வழிபட்ட எகிப்தியரிடம் இருந்தே இஸ்ராயேலர் இதைப் பெற்றிருந்தார்கள். இதுவே தங்களை எகிப்தில் இருந்து அழைத்து வந்த கடவுள் என்று இதற்குப் பீடம் எழுப்பி, எரிபலிகள் செலுத்தினார்கள். இதனை அவர்கள் ஒரு விழாவாக, உண்டு குடித்துக் கும்மாளம் அடித்துக் கொண்டாடினார்கள். இஸ்ராயேலரின் இச்சிலை வழிபாட்டை விடுதலைப்பயண நூல் பதிவு செய்துள்ளது (வி.ப 32:2-7)

## எலியாவின் காலத்தின் நிகழ்ந்த சிலை வழிபாடு

தீர் சீதோன் நகர்களில் வாழ்ந்த கானனேயர் பாலுறவுக்கான கடவுளைச் நிலையாகச் செய்தார்கள். இதற்கு பாகால் என்று பெயரிட்டும் வழிபட்டார்கள். இவர்களிடமிருந்தே இஸ்ராயேலரும் இச்சிலை வழிபாட்டை இறக்குமதி செய்தார்கள் (1அர 16:31). இறைவாக்கினர் எலியாவின் காலத்தில் இவர்களிடம் இச்சிலை வழிபாடு உச்சநிலை பெற்றிருந்தது. ஆகாஸ் அரசரின் ஆட்சிக் காலத்திலேயே எலியா இறைவாக்கினர் தோன்றினார்.

ஆகாஸ் பாகால் என்ற பொய் தெய்வத்துக்கு சமாரியாவில் ஒரு பெரிய கோயில் எழுப்பி, அங்கு வைக்கப்பட்டிருந்த பாகாலின் சிலையை வழிபட வேண்டுமென மக்களை வற்புறுத்தி ஆணையிட்டான். இதனால் வானகத் தந்தையைப் பற்றிய எண்ணம் மக்களின் மனங்களில் இருந்து மங்கிப்போனது. சிலைவழிபாட்டை முறியடிக்க, பசி, கொலை மிரட்டல் போன்ற துன்பங்கள் ஊடாகப் பயணித்த எலியா, பாகால் தெய்வத்தின் நூற்றுக் கணக்கிலான இறைவாக்கினர்களைப் பொய்யான போலிகளாக்கி, வானகத் தந்தை ஒருவரே உண்மையான கடவுள் என்பதை எண்பித்தார் (1 அர 18:22-40).

## இவைகளும் சிலைகளா?

இஸ்ராயேலர் உருவாக்கிய தங்கக் கன்றும், பாகால் தேவதையும் சிலைகள்தான். அவற்றுக்கு இவர்கள் செய்த வழிபாடும் சிலைவழிபாடுதான். ஆனால் வானகத் தந்தையை நினைவூட்ட இவர்கள் பயன்படுத்திய பல பொருட்களையும், ஆற்றிய சில செயல்களையும், சிலைகள் என்றும் சிலை வழிபாடு என்றம் அழைக்கலாமா?

### கோல் :

ஆரோனின் கோல் பாம்பாக மாறி, அவ்வாறு பாம்பாக மாறிய எகிப்திய மந்திரவாதிகளின் கோல்களை விழுங்கியது (வி.ப 7:8-12). மோசே, தன் கோலை நீட்ட செங்கடலின் நீர் பிரிந்து பாதை திறந்தது (வி.ப 14:15-22). மோசே, தன் கோலை பாறையில் அடிக்க தண்ணீர் வந்தது. (வி.ப 17:6) மோசே, ஆரோன் இவர்களின் கோல்கள் சிலைகளா?

### வெண்கலப் பாம்பு

இஸ்ராயேலர் தங்கள் முணுமுணுப்பால் பாலைவனத்தில் நச்சுப் பாம்புகளால் கடியுண்டு பலர் இறந்தார்கள். இருந்தோரைக் குணமாக்க வெண்கலப் பாம்பொன்றைச் செய்து, அதைக் கோலில் உயர்த்தி கடியுண்டவர்கள் பார்க்க வை என்று வானகத் தந்தை மோசேயிடம் சொன்னார். அதைப் பார்த்த கடியுண்ட எல்லோரும் குணமானார்கள் (எண் 7:9). மோசே உயர்த்திய வெண்கலப் பாம்பு சிலையா?

### பத்துக் கட்டளைப் பலகைகள்

மோசே வானகத் தந்தையை சீனாய் மலையில் சந்தித்தபோது, அவர் பத்துக் கட்டளைகளையும் இரு கற்பலகைகளில் எழுதிக் கொடுத்தார். அவர் அவற்றைத் தம் கைகளில் தாங்கியவாறு மலையில் இருந்து இறங்கி வந்தார் (வி.ப 34:29) இப்பத்துக் கட்டளைகள் எழுதப்பட்ட கற்பலகைகள் சிலைகளா?

### மன்னா

இஸ்ராயேலர் வனாந்தரத்தில் பசியால் வாடியபோது, வானகத் தந்தை அவர்களுக்கு மன்னாவைக் கொடுத்து அவர்களின் பசியை ஆற்றினார் (இ.ச 8:16) வானகத் தந்தை இவர்களுக்கு கொடுத்த மன்னா சிலையா?

### வாக்குத்தத்த பேழை

இஸ்ராயேலர் தங்கத்தால் ஒரு பேழை செய்து, அதனுள் பத்துக் கட்டளைப் பலகைகளையும், மன்னாவையும் ஆரோனின் கோலையும் வைத்து அதற்கென ஒரு கூடாரம் அமைத்து அப்பேழையை அதனுள் வைத்தார்கள் (எபி 9:4-5) இந்த வாக்குத் தந்தப் பேழை சிலையா?

### பாஸ்கா விழா

ஆண்டுதோறும் தங்கள் எகிப்திய விடுதலையை நினைவூட்ட புளியாத அப்பத்தையும், கசப்பான கீரையையும், திராட்சை இரசத்தையும் உண்டு பாஸ்கா வழிபாடு செய்தார்கள் (இச 16:1-4) வானகத் தந்தையின் நினைவாக இஸ்ராயேலர் இவ்விருந்தை உண்டு குடித்தது சிலை வழிபாடா?

### தூபம் காட்டுதல்

தூயகத்துள் இருந்த வாக்குத் தத்தமப் பேழைக்கு தூபம் காட்ட லேவியின் வாரிசுகள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களின் வழிவந்தரவரான சக்கரியா ஆலயத்துள் நுழைந்து பேழைக்குத் தூபம் காட்டினார். (லூக் 1:8-10). வாக்குத் தத்தப் பேழைக்கு தூபம் காட்டியது சிலை வழிபாடா?

### திருவிவிலியம்

இறைவார்த்தையைத் தாங்கும் திருவிவிலியம் எழுதப்பட்ட மொழியும் காகிதமும் மனிதருடையது என்பதால் திருவிவிலியமும் ஒரு சிலையா?

### தேவநற்கருணை

இயேசுவின் உடலும் இரத்தமுமாக மாறும் அப்பமும் இரசமும் மனிதரின் உழைப்பால் உண்டான பொருட்கள் என்பதால் தேவநற்கருணையும் ஒரு சிலையா?

இவைகள் சிலைகளும் இல்லை, சிலை வழிபாடும் இல்லை. புனிதர்களின் சுரூபங்கள் சிலைகள் இல்லை என்பதால் அவைகளுக்குரிய வணக்கமும் சிலை வழிபாடு அற்றதாய் இருக்கிறது. திருவிவிலியத்திற்கும் தேவநற்கருணைக்கும் கத்தோலிக்கர் கொடுக்கும் இடம் சுரூபங்களுக்கு உயர்ந்தாய் இருக்கிறது. எனவே கத்தோலிகக் திருச்சபையில் சிலைகளும் சிலை வழிபாடும் அறவே இல்லை.

## இக்காலச் சிலைகளும், சிலை வழிபாடும்

### தற்பெருமை

தற்பெருமை என்பது தன்னைவிட வேறு எவரும் பெரியவர் இல்லை என்ற நிலை. இந்த எண்ணத்தால் ஒருவர் தன்னை தானே கடவுளாக்கிக் கொள்கிறார். கடவுள் ஒருவர் இருந்தாலும் அவர் இவருக்குப் பயனற்றவர் ஆகிறார். தற்பெருமை இவருக்கு சிலை. தன்னைவிட வேறு எவரும் உயரக் கூடாது எனத் தடுப்பது இவரின் சிலைவழிபாடு

### பணம்

பணம் ஒருவரின் வாழ்வுக்கு இன்றியமையாத தேவை. இதுவே இவரின் ஒரே தேவையாகிவிட்டால் பணமே இவரில் வாழ்கிறது. மனதில் எடுக்கும் இந்த முடிவால் இவர் கடவுளையும் காசுக்கு வாங்கி விற்க இயலுமானவராகிறார்.....

தொடர்ச்சி 15ம் பக்கம்

## "சிதறிக்கிடந்த மந்தைகளை ஒன்று சேர்க்கவே நான் இறைவனால் அனுப்பப்பட்டேன்" என்று கூறிய புனித யோசேவ்வாஸ் உலகமெங்கும் சென்று நற்செய்தியை பரப்புங்கள் என்ற ஆண்டவரின் அருள்வாக்கை நிறைவு செய்தார்.



# புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் வருகையும் மகா கல்கமுவ மக்களின் விசுவாச வளர்ச்சியும்"

பாரத மண்ணின் மைந்தனாக "பெனாலி என்னும் கிராமத்தில் பிராமண குலத்தில், கிறிஸ்தோப்பர் வாஸ், மரிய மிராண்டா ஆகிய பெற்றோருக்கு மகனாக பிறந்தார். 1651ஆம் ஆண்டு பிறந்த யோசேவ்வாஸ் அடிகளார் சிறுவயதிலிருந்து இறை அன்பிலும், கிறிஸ்தவ பண்பிலும் வளர்ந்து தன்னை முழுமையாக கடவுளுக்கு அர்ப்பணித்தார். பின்னர் ஒறட்டோரியன் சபையில் சேர்ந்து துறவியானார். இறைவனால் இறைபணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் குருநிலை அடைந்தார். ஆகவே யோசேவ்வாஸ் அடிகளாரை சிதறிக்கிடக்கும் மந்தைகளை ஒன்று சேர்க்க இறைவன் சித்தம் கொண்டார்.

அன்று இலங்கையில் விமலதர்மசூரியனின் ஆட்சி நிலவியது. ஒல்லாந்தர் காலத்தில் யாழ்குடா நாட்டில் வேதகலாபனை தலைத்தூக்கியது. குருக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். கிறிஸ்தவர்கள் ஆயன் இல்லா ஆடுகளைப்போல் சிதறிக்கிடந்தனர். அவ்வேளையில் தான் யோசேவ்வாஸ் அடிகளார் இறைசித்தத்தை ஏற்று தமது தாய் மண்ணையும் துறந்து ஏழையின் உருவின் ஜோன் என்பவருடன் படகேறி 1687ஆம் ஆண்டு இலங்கை மண்ணில் மன்னார் கரையில் காலடி வைத்தார். சில்லாலை என்னும் கிராமத்தை மையமாகக் கொண்டு கிறிஸ்தவர்களை ஒன்று சேர்த்து மறைத்தூதுப்பணியை ஆரம்பித்தார். ஓர் ஏழைப்பெண் வழங்கிய கஞ்சியின் மூலம் தமது பசியை நிறைவு செய்தார். காலணி காணா கால்களினால் நீண்ட தூரம் நடந்து கிறிஸ்தவர்களைத் தேடி இரகசியமாக திருப்பலி ஒப்புக்கொடுத்தார். இதை அறிந்த அரசன் அடிகளாரைக் கைது செய்ய ஆணையிட்டான். இதை தெய்வாதீனமாக அறிந்து கொண்ட யோசேவ்வாஸ் அடிகளார், இரகசியமாகப் புத்தளப்பகுதிக்கு தப்பிச்சென்று அங்குள்ள கரையோர மக்களுக்கு மறைபணியை முன்னெடுத்தார். ஒரு குறுகிய காலத்துக்குள் கண்டி அரசின் அழைப்பை ஏற்று, கண்டி வஹாக்கோட்டை பகுதிக்கு பயணமானார். செல்லும் வழியில் தான் மகாகல்கமுவ என்ற இக்கிராமத்தை வந்தடைந்தார்.

யோசேவ்வாஸ் அடிகளால் இக்கிராமத்தை அடைந்தபோது மலைகளும், அடர்ந்த காடுகளும், கரடுமுரடான பாதையும் யானை, புலி, பாம்பு போன்ற வனவிலங்குகளின் நடமாட்டமுமே காணக்கூடியதாக இருந்தன. வெறும் காலால் கரடுமுரடான பாதையில் அடர்ந்த காட்டினூடாகச் செல்லும் போது, கொடிய விலங்குகளை சந்திக்க நேர்ந்தபோது தமது சிலுவையின் சக்தியால் காப்பாற்றபட்டதாக எமது மூதாதையர் வாயிலாக அறிந்தோம். வனவிலங்குகளால் இங்கு மக்கள் படும் கஸ்டத்தை உணர்ந்தவராய் பாதுகாக்கும் நோக்கத்தோடும் தமது வருகையின் நினைவுச் சின்னமாகவும் கருங்காலி மரத்துண்டினால் ஒரு சிலுவையை அமைத்து பெரிய பாலை மரம் ஒன்றின் அடியில் விட்டுச்சென்றார். அதே சிலுவைதான் இன்றும் புனிதமாக பாதுகாப்பாக இருப்பதை நாம் காண்கின்றோம். புனித யோசேவ்வாஸ் அடிகளாரை எமது மூதாதையர்கள் சம்மனசு சுவாமி என்ற அழைத்ததாகவும் நாம் அறிகின்றோம். அடிகளார் விட்டுச் சென்ற சிலுவையை எமது மூதாதையர் புனிதமாகவும் வைத்து வணக்கம் செலுத்தினர். சிலுவையடியில் எண்ணெய் விளக்கேற்றி ஆழ்ந்த விசுவாசத்துடன் செபித்து விட தங்கள் வயல் சேனை வேலைகளுக்கு செல்வர். இங்குள்ளவர்கள் எமது மூதாதையர்கள் அனைவரும் முக்கிய தொழிலாக கமம் செய்பவர்களே ஆவர். அத்தோடு சிலுவையின் சக்தியால் கொடிய விலங்குகள் பேய் பசாசுகளின் துன்புறுத்தல் நோய் நொடிகள் அனைத்திலும் இருந்து பாதுகாக்கப்பட்டவர்கள். பாம்புகள் தீண்டியபோது பாலை மரத்தடியில் மண்ணை மருந்தாகவும், மரத்தின் பட்டை இலை என்பவற்றை விசுவாசத்துடன் பயன்படுத்துவர். இதனால் நோய்கள் சுகமடைந்தன.

1979இல் கல்கமுவாவின் பங்குத்தந்தையாகவும் கடமையாற்றிய அருட்தந்தை பிளேபர் அடிகளார் சிலுவையின் பாதுகாப்பிற்காக தகரத்தினால் ஒரு கூரை அமைத்து அவ்விடத்தை வணக்க ஸ்தலமாக மாற்றினார். அன்று முதல் மக்கள் மத்தியில் சிலுவை பக்தி அதிகரித்தது. 1987இல் குருனாகல் ஒரு புதிய மறைமாவட்டமாக இயங்கத் தொடங்கியது. மேதகு ஆயர் றேமன் பீரிஸ் ஆண்டகை அவர்களால் சிலுவை இருந்த இடத்தில் ஓர் தேவாலயம் கட்டுவதற்கு தீர்மானிக்கப்பபட்டது. இருந்த போது அது சாத்தியமாக இல்லை. 1995ஆம் ஆண்டு யோசேவ்வாஸ் அடிகளாருக்கு திருத்தந்தை இரண்டாம் ஜோன்போல் அவர்களால் முத்திப்பேறுபட்டம் வழங்கப்பட்டது. எனவே கிறிஸ்தவர்கள் மட்டும் அல்ல பௌத்த மக்களும் சிலுவையை வழிபட்டு தமக்கு தேவையான வரங்களைப் பெற்றுச் சென்றனர். அதனால் யோசேவ்வாஸ் அடிகளாரின் மறைத்தூதுப்பணி மேலும் பிரபல்யம் அடைந்தது.

1995ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி. எமில் பெரேராவும் உதவிப்பங்குத்தந்தையாக அருட்பணி நியூமன் அடிகளாரும், இங்கு ஒரு சிற்றாயலத்தை அமைத்தனர். அதில் புதன்கிழமை தோறும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அத்தோடு ஆண்டுதோறும் முத்திப்பேறு பெற்ற யோசேவ்வாஸ் அடிகளாரின் இறையடி சேர்ந்த (நாள் தை 16ந் திகதி) வருடாந்த திருவிழாவாக கொண்டாடப்பட்டு வந்தது. திரளான மக்கள் பல பாகங்களிலிருந்தும் வரத்தொடங்கினர். விசேடமாக புத்தளம் மாவட்டத்திலிருந்து நாவட்காடு நரக்களி, மாம்புரி மணல்தீவு, போன்ற கிராமங்களிலிருந்து வருகை தந்து அடிகளாரின் ஆசீரையும் விண்ணப்பங்களுக்கு நல்விடையையும் பெற்றுச்சென்றனர். அதிகமானோர் நன்கொடைகளையும் அளிக்கத் தவறவில்லை. இன்று யோசேவ்வாஸ் அடிகளாரின் யாத்திரை தலமாக வளர்ச்சி அடைந்தது என்றால் அடிகளாரின் புதுமையும் மக்களுக்கு இறைவனிடமிருந்து பெற்றுத்தந்த வரங்களும் ஆகும்.

1999ஆம்ஆண்டு பங்குத்தந்தையாக வருகை அந்த அருட்பணி. எட்மன் முருகுப்பிள்ளை அடிகளாரின் புனித யோசேவ்வாஸின் திருச்சிலுவையை ஒரு கண்ணாடி பேழைக்குள் வைத்து மேலும் பாதுகாப்பளித்தார். சிலுவை வைக்கப்பட்ட பாலை மரத்தடி கீழே விழாதபடி கற்தூண்கள் அமைக்கப்பட்டன. யாத்திரிகளின் வசதிக்காக படிக்கட்டுக்களை அமைத்து ஆலய வளவு அழகுப்படுத்தப்பட்டது. அதேவேளையில் புனித யோசேவ்வாஸ் இறைபதம் அடைந்து 300 ஆண்டுகள் நிறைவு விழாவை எமது மறைமாவட்ட ஆயர் மேதகு ஹெரல் அண்டனி ஆண்டகையின் தலைமையில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

அருட்பணி. நியூமன் அடிகளார் 2010ஆம் ஆண்டு கல்கமுவ பங்குத்தந்தையாக வருகை தந்தபோது மகாகல்கமுவ புனித அந்தோனியார் புதிய ஆலயம் நிர்மானிப்பதற்கு முன்னராக குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹெரல் அன்டனி ஆண்டகின் தீர்மானத்தின்படி யாத்திரை மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. அத்தோடு புனிதரின் திருச்சிலுவையும் திருச்சுருபமும் உள்ளடக்கப்பட்டு கண்ணாடியினால் வடிவமைக்கப்பட்டது. இதற்கான செலவீனங்கள் யோசேவ்வாஸ் அடிகளாரின் பக்தர்களின் நலன் விரும்பிகள் மூலமாக கிடைக்கப்பெற்றவையாகும்.

2015 ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களினால் முத்திப்பேறுபெற்ற யோசேவ்வாஸ் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார். அதற்கான முதற்திருப்பலியை மகாகல்கமுவ புனித யோசேவ்வாஸ் யாத்திரை தலத்தில் எமது மறைமவாட்ட ஆயர் மேன்மை தங்கிய ஹெரல் ஆண்டகையின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மேலும் 2015 இறை இரக்கத்தின் ஆண்டு ஆரம்ப திருப்பலியும் இரக்கத்தின் கதவு திறப்பு நிகழ்வும் புனிதரின் ஆலயத்தில் குருனாகல் மறைமாவட்ட ஆயரின் தலைமையில் திருத்தந்தையின் பிரதிநிதியினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பெருந்திரளான பக்தர்கள் அனைவரும் திருப்பலியில் பங்குகொண்டனர். கிறிஸ்தவர்கள் பாவமன்னிப்பு பெற்று இறை இரக்கத்தையும் பெற்றுச் சென்றனர். இறுதியாக எமது பங்கிற்கு பங்குத்தந்தையாக வருகை தந்த அருட்தந்தை பிரதீப் அடிகளார் பக்தர்களின் வசதிக்காக வெளி அரங்கம் ஒன்றை அமைத்து திருவிழா திருப்பலியையும் நடத்தி வைத்தார். மேலும் சனிக்கிழமைகளில் குணமளிக்கும் வழிபாடுகள் நடத்தி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதால் பக்தர்களின் வருகை அதிகரித்தது. புனித யோசேவ்வாஸ் அடிகளார் தமது மறைத்தூதுப்பணியின்போபது கால் பதித்த மண்ணிலே (மகா கல்கமுவ) தமது இல்லத்தை அமைத்துக்கொள்வது இறைவனின் சித்தமாகும். எனவே யாத்திரிகைகளின் வசதிக்காகவும் ஒன்றுகூடிச் செபிக்கவும் மறைத் தூதுப்பணியை

>> >> 15

# பாலையூற்றில் பொன்விழாக் காணும் தூய வின்சன் டி போல் சபை

St Vincent de Paul Society 1967 - 2017

தருமம் பெற்று தருமம் அளிப்பதே தூய வின்சன் டி போல் துறவற சபையின் பணியாகும். இவ்வாறு ஏழை எளியவர்களை அரவணைத்து அன்புப் பணி புரிந்து வருகின்ற திருகோணமலை பாலையூற்று தூய வின்சன் டி போல் சபையானது இவ்வருடம் பொன்விழாவைக் கொண்டாடுகின்றது.

2017 புதுவருட நள்ளிரவுத் திருப்பலியுடன் சபை ஆரம்பிக்கப்பட்டதன் 50வது வருட ஜூபிலி பிரகடனப்படுத்தலுடன் பொன்விழாவின் ஆயத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கத்தோலிக்கத் திருச்சபையில் பிறரன்புப் பணியில் ஆர்வம் கொண்டவர்களின் அர்ப்பணத்தோடும், பங்குத்தந்தையர்களின் ஆன்மீக வழிகாட்டுதலோடும் சுயமாகக் செயல்படுகின்ற பொதுநிலையினர் சபையாகிய இத்தரும சபை ஸ்தாபிக்கப்பட்டு 184வது ஆண்டில் கால் பதித்திருக்கும் வேளையில் பாலையூற்றுப் பங்கும் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் பூரித்து நிற்கின்றது. 1967ஆம் ஆண்டில் பாளையூற்று தூய லூர்து அன்னை திருத்தலப் பங்கில் தூய வின்சன் டி போல் சபை தோற்றுவிக்கப்பட்டது. பாலையூற்று தனிப்பங்காகி அதன் முதலாவது பங்குத்தந்தையாக 1965இல் நியமனம் பெற்றிருந்த அருட்பணி. சைமன் பெர்ணான்டோ அடிகளாரது அனுமதி ஆசீருடன் திருகோணமலை தூய மரியன்னை பேராலயம் பங்கைச் சேர்ந்த சகோதரர் பெனடிக் எனும் ஆசிரியர் ஒருவர் மேற்கொண்ட முயற்சியே பாலையூற்றில் அன்பின் சேவை மலர, வளர, மிளிரவும் அடிகோலியது.

“ஏழைகளுக்கு உதவுதல்” எனும் பிரதான நோக்கம் கொண்டு 1833ஆம் ஆண்டில் பிரான்ஸ் தேசத்தின் பாரிஸ் நகரில் பிரெட்றிக் ஓசானம் எனும் இளைஞனால் அவரது தோழர் அறுவரோடு ஸ்தாபிக்கப்பட்ட இச்சபையின் ஆரம்பகால அடிச்சுவட்டைப் பின்பற்றியதாக பாலையூற்றில் இரக்கச் சிந்தை கொண்டவர்களாய் முதலாவது நிருவாகத்தில் டெஸ்மன் குமாரசாமி, அன்ரன் யோண்சன், S.O ஞானப்பிரகாசம், R.S யோசப், உபால்டோ பெரேரா ஆகியோர் ஞாயிறு தினங்களில் வீடு வீடாகச் சென்று பணம், அரிசி போன்றவற்றை மக்களிடம் இருந்து பெற்று இல்லாதவர்களுக்கு அன்றைய தினமே உதவும் தருமப் பணியை ஆரம்பிக்கலாயினர்.

அத்துடன் கரோல் நிகழ்ச்சி, என்பிலப் (Envelope) மூலம் நிதி சேகரிப்பில் ஈடுபட்டு அதன் வழியாக கிடைத்த பணம் மூலம் நத்தார் - புதுவருட பண்டிகைக் காலத்தில் வறியவர்களுக்கும் மகிழ்ந்துண்டு களிப்புற புத்தாடைகள், உணவுப் பொட்டலங்களையும் பகிர்ந்தளித்து வந்தனர்.

இவ்வாறு ஆரம்பித்த சபையின் வளர்ச்சிப் பாதையில் அதன் பணிகளும் காலத்தின் தேவையறிந்து மாற்றம் கண்டன. குறிப்பாக 1972 - 1983 காலப்பகுதிகளில் ஆண் - பெண் எனும் இருபால் அங்கத்தவர்களும் தமது உடலை வருத்தி கடினமான பாரிய செயற்பாட்டின் மூலம் நிதி சேகரிக்கும் பணியிலும் ஈடுபட்டனர்.

எடுத்துக்காட்டாக விறகு வெட்டி விற்பனை செய்தல், யாத்திரிகள் நலன் கருதி கழிவறைகள் குழிகள் வெட்டி மலசல கூடம் அமைத்தல், ஆலய திருவிழாவிக்களின்போது குறைந்த விலையில் தரமான உணவு வகைகளை மக்கள் பெற்றுக்கொள்ளும் நோக்கில சிற்றுண்டிச்சாலை நடாத்துதல், திருமறை பொருட்கள் விற்பனை செய்தல் எனும் பணிகளால் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரம் அத்தியாவசியத் தேவைகள் பல நிறைவேறப்பட பெரும் வாய்ப்பாக அமைந்தன.

மேலும் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து வந்த வறிய குடும்பங்களுக்கு கிடுகுகள் அன்பளிப்பு செய்ததோடு பலரது வீட்டுக் கூரைகள் சபை அங்கத்தவர்களால் வேய்ந்து கொடுக்கப்பட்டதோடு பணியை பங்கு மக்கள் பாராட்டியும் இருந்தனர். இவற்றோடு இளவயதினருக்கு தையல் பயிற்சி நிலையமும், மாணவர்களுக்கு இலவச மாலை நேர வகுப்புகளும், வருமானம் குறைந்தோருக்கு சுய தொழில் மேம்பாட்டுக்கான உதவிகள், வீடு திருத்தப்பணிகள், மரண சடங்குகளிற்கான உதவிகள், அவரவர் தேவைக்கான கடனுதவிகள் என சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன.

இதன்பின் ஏற்படுத்தப்பட்ட நிருவாகங்களும், வழமையான வாராந்த மாதாந்த உதவிகள், ஸ்தாபகர் தினம், பாதுகாவலர் தினம் சிறப்பிதழ் ஆகிய செயற்பாடுகளோடு வைபவப் பொருட்கள் வாடகைக்கு விடுதல், தபசுகால ஒறுத்தல் உண்டியல் நிதி சேகரிப்பு என வேறு வகைகளிலும் நிதியினை திரட்டிக் கொண்டது.

இவற்றில் சிறப்பான போற்றுதற்குரிய ஒரு விடயம் எகெட் நிறுவனம், நன்கொடையாளர்களின் நிதி உதவி மற்றும் அங்கத்தவர்களின் முயற்சி, சரீர உழைப்பின் பயனாக திருகோணமலையில் முதல் தடவையாக சபையின் பாவணை, திருமறை பொருட்கள் விற்பனைக்கான நிரந்தரக் கட்டங்கள் இரண்டு அமைத்துக் கொண்டமை சுட்டிக்காட்டத்தக்க பணியாகும்.

இதனூடே இணைக்கப்பட்ட நாடுகள், தேசிய சபை வழங்குகின்ற நிதியினைக் கொண்டு மாணவர் புலமைப்பரிசில் உதவி, இயற்கை அனர்த்தப் பாதிப்பிற்கான உதவி, சுனாமி வீட்டுத் திட்டமும் சபையின் நிதியின் இனக்கலவரம், யுத்தகால அகததிகள், இடம் பெயர்ந்தோருக்கான நிவாரண உதவி, இரக்கத்தின் ஆண்டு வீட்டுத் திட்டம் என்பவற்றைச் செயல்படுத்தியதன் மூலம் ஆன்மீக இயக்குனர்கள், பங்கு மக்களது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டனர்.

வீடுகளில், வைத்தியசாலைகளில் நோயாளர்களை தரிசித்தல், சத்துணவு, மருந்து பொருட்கள் கையளித்தல், வயோதிபர் முதியோர்கள், கருணை நிவாசா இல்லத்தின் ஆதரவற்றவர்களைச் சந்தித்து அன்பளிப்புகள் வழங்கி மகிழ்வித்தல், வசதியற்றவர்களின் மரணச் சடங்கு மற்றும் மாணவர்களின் கற்றல் உபகரணங்கள், பாடசாலைக் கட்டணம், ரியூசன் வகுப்பு கட்டணங்களுக்கு உதவுதல் என பல பணிகள் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

இவ்வாறு காலத்தின் தேவைக்கேற்ப மக்களின் இன்னல்களைப் போக்கி அர்ப்பணிப்புடன் உன்னத பணியில் ஈடுபடுகின்ற தூய வின்சன் டி போல்சபையின் பாலையூற்று லூர்து அன்னை ஆலோசனை சபையானது தமது 50 வருட நிறைவு யூபிலி விழாவினையொட்டி ஐம்பது வறிய குடும்பங்களுக்கு விசேட உதவிகள் வழங்குதல், பங்கில் இயங்குகின்ற ஆலோசனை சபைகள் மற்றும் தூய வின்சன் டி போல் மறைமாவட்ட சபையுடனான ஒன்று கூடல், பாதுகாவலர் தினத்துடன் (புரட்டாதி 27) ஜூபிலி விழாவைக் கொண்டாடும் முகமாக சிறப்பத் திருப்பலியும் கலை நிகழ்வுகளுடன் அங்கத்தவர் கௌரவிப்பு, சிறப்பு மலர் வெளியீடு எனப் பல நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இறுதியாக இந்த ஐம்பது வருட காலத்தில் அளப்பரிய சேவையாற்றி உள்ளோம் வின்செனசியர்கள் பெருமிதப்படுவது முக்கியமானதல்ல, மாறாக ஒரு சபையின் வளர்ச்சி என்பது அதன் அங்கத்தவர்களின் ஒழுக்கத்திலும், பிரமாணிக்கத்திலும் அர்ப்பணிப்பிலும் தியாகத்திலும், பிரதிபலன் எதிர்பாராத செயல்பாடுகளிலும் தங்கியுள்ளது என்பதனை உணர்ந்து கொண்டு தலைமைத் துவப் பண்பிற்கு வரைவிலக்கணம் தந்த ஸ்தாபகர் அருளாளர் பிரெட்றிக் ஓசானத்தினதும், தாழ்ச்சி எனும் பண்பு நிறைந்தவரான சபையின் பாதுகாவலர் தூய வின்சன் டி போலின் வழியிலும் இயேசு வாழ்ந்து காட்டிய அன்பின் மாதிரிகைகளைப் பின்பற்றியவர்களாக வின்சென்சியன்கள் அனைவரும் தன்னலம் கருதாது அன்பின் சேவையைத் தொடர்வதே சிறப்புடையதாகும். இல்லையெனில் வெள்ளவிழா, பொன்விழா, வைரவிழா, நூற்றாண்டு விழா எனச் சிறபிப்பதில் அர்த்தமே இல்லை என்றாகிவிடும்.

**பொன்விழா வாழ்த்துக்கள்**

**ஆக்கம் : G. அல்பேட் பாலையூற்று**

## உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில்

# தமிழ் நேசன் அடிகளார் சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்

கொழும்பில் இடம்பெற்ற உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் இறுதிநாள் நிறைவு அரங்கில் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் சிறப்புரையாற்ற அழைக்கப்பட்டிருந்தார். அன்றைய அமர்வில் அடிகளாரின் தமிழ் இலக்கியப் பணிகளைப் பாராட்டி அவருக்கு சிறப்பு விருதும் வழங்கப்பட்டது.

கடந்த டிசம்பர் மாதம் 11,12,13 ஆகிய மூன்று தினங்களாக கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மன்ற மாநாட்டு மண்டபத்தில் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு சிறப்பாக நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு இலங்கையின் பல்வேறு பாகங்களில் இருந்தும் மற்றும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் இருந்தும் தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், இலக்கியவாதிகள் எனப் பலரும் வருகைதந்திருந்தனர்.

இம்மாநாட்டின் இறுதி நாள் நிறைவு அமர்வின்போது மன்னார் தமிழ்ச் சங்கத் தாபகரும், மன்னார் மறைமாவட்ட “கலையருவி” அமைப்பின் இயக்குனரும், “மன்னா” என்ற மாதாந்தக் கத்தோலிக்க பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் சிறப்புரையாற்றினார்.

நீண்ட நெடிய - இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான - தமிழ் இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியத்தில் தமிழ் மொழிக்கும் சமயங்களுக்கும் இடையிலான உறவு, தொடர்பு பற்றியும் இலக்கியத்தின் ஊடாக எவ்வாறு நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பலாம் என்பது குறித்தும் அடிகளார் இங்கு உரையாற்றினார். “தமிழால் சமயங்கள் வளர்ந்தன; சமயங்களால் தமிழ் வளர்ந்தது” என்பதை அடிகளார் சுட்டிக்காட்டி, உலகின் மற்ற மொழிகளோடு ஒப்பிடும்போது தமிழில்தான் அதிக சமய சார்பான





இலக்கியங்கள் உண்டு என்றும், “தமிழ் பக்தியின் மொழி” என்றும் பன்மொழி வல்லுனரான தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் தெரிவித்த கருத்துக்களையும் தமிழ் நேசன் அடிகளார் இங்கு குறிப்பிட்டு உரையாற்றினார்.

தமிழ் நேசன் அடிகளாருடைய தமிழ் இலக்கியப் பணிகளைப் பாராட்டி, அவருக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு விருதும் வழங்கப்பட்டது. நிறைவுநாள் அமர்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் கௌரவ ரிஷாத் பதியுதீன் அவர்கள் இந்த விருதை வழங்கிவைத்தார். சிறப்பு அதிதிகளாக பிரதி அமைச்சர் அமீர் அலி மற்றும் முன்னாள் அமைச்சர்கள், பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

நிறைவு நிகழ்வில் பல்துறை சார்ந்த பல இஸ்லாமிய கலை .....

>> 15

# கந்தானை புனித செபஸ்தியார் திருத்தலத்தின்

# 149 வருடாந்த திருவிழா 2017

கருப்பொருள் : இறைவா! நவீன உலகின் சவால்களுக்கு மத்தியில் குடும்ப வாழ்வை பாதுகாத்து தந்தருளும்...



**08ஆம் திகதி – ஞாயிறுக்கிழமை : காலை 6.30 மணிக்கு திருப்பலி**

பங்கில் இறந்த விசுவாசிகளுக்காகவும், தியாக உள்ளத்தினருக்காகவும் கல்லறை பூமியில் ஒப்புக்கொடுக்கப்படும்.

**11ஆம் திகதி – புதன்கிழமை : மாலை 4.00 மணிக்கு கொடியேற்றப்படும்.**

**– மாலை 6.15 மணிக்கு புனித செபஸ்தியார் திருத்தலத்தின் கிணறு ஆசீர்வதிக்கப்படும்.**

**11ஆம் திகதி – 18ஆம் திகதி வரை : மாலை 6.30 மணிக்கு திருச்செபமாலை மற்றும் பிரார்த்தனை**

**: மாலை 7.00 மணிக்கு நவநாள் மற்றும் திருப்பலி**

மறையுரை ஆற்றுபவர் : கொழும்பு உயர் மறைமாவட்ட குருமுதல்வர் வண.அருட்பணி. பிரான்சிஸ் சேனாநாயக்க அடிகள்

**14ஆம் திகதி சனிக்கிழமை : நோயாளர்களை ஆசீர்வதிக்கும் நாள்**

**: காலை 9.00 மணிக்கு திருப்பலி மற்றும் நோயாளர்களை ஆசீர்வதித்தல்**

**19ஆம் திகதி வியாழக்கிழமை : மாலை 7.00 மணிக்கு மாலை ஆராதனை**

**அதிமேதகு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.**

**20ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) திருவிழா – திருப்பலி**

**காலை 4.00, 5.00, 6.00 திருப்பலி – சிங்களம்**

**காலை 8.00 மணிக்கு திருவிழா திருப்பலி**
**மேதகு ஆயர் மெக்ஸ்வல் சில்வா**
**ஆண்டகையின் தலைமையில்**

திருவிழா திருப்பலியின் பின்னர் திருச்சுரூப பவனி இடம்பெறும்.

| | | | |
|---|---|---|---|
| முற்பகல் | : | 11.00 திருப்பலி | – சிங்களம் |
| பகல் | : | 12.30 திருப்பலி | – தமிழ் |
| மாலை | : | 5.00 திருப்பலி | – ஆங்கிலம் |
| மாலை | : | 6.00 திருப்பலி | – சிங்களம் |

இத்திருப்பலியானது திருத்தலத்தில் உள்ள குருக்களின் தலைமையில் நடைபெறும்.

மாலை 7.30 திருப்பலி – சிங்களம்

இவ் இறுதித் திருப்பலியானது கந்தானை வட்டாரத்தில் உள்ள குருக்களினால் ஒப்புக்கொடுக்கப்படும்.

மு.கு : 11ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை தினமும் மாலை 7.00 – 9.00 மணி வரை பாவசங்கீர்த்தனம் கேட்கப்படும்.

தை மாதம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலிகள் : காலை 6.30, 8.00, 9.30 மற்றும் 11.30 மணிக்கு (ஆங்கிலத்தில்) மாலை 5.00 மற்றும் 6.30 மணிக்கும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

திருத்தலபரிபாலகர்
அருட்தந்தையர்கள்

# மகா கல்கமுவ

**புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் வரலாற்று சிறப்புமிக்க வருடாந்த திருவிழாவும் 2017ஆம் ஆண்டு புனித யோசேவ்வாஸ் ஆண்டாக பிரகடனப்படுத்தலும்**



**2017 ஜனவரி மாதம் 14ஆம் திகதி**

**காலை 9.00 மணியளவில் நடைபெறும்.**

**வருடாந்த திருவிழா திருப்பலி (தமிழ், சிங்கள மொழிகளில்) எமது மறைமாவட்ட ஆயர் மேதகு ஹரல் அன்டனி ஆண்டகையின் கௌரவ அழைப்புடன்**



**கண்டி மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் வியானி பர்னாந்து ஆண்டகையால் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

**அன்றைய தினம் புனித யோசேவ்வாஸ் தேசிய திருத்தலத்திற்கான அடிக்கல் நாட்டுதல் நிகழ்வும் நடைபெறும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

உட்புகும் பாதை :

கொழும்பு நீர்கொழும்பிலிருந்து : கிரிவுல்ல ➡ கழுகமுவ சந்தி ➡ வாரியப்பொல ➡ பாதெனி ➡ தலதாகம ➡ கல்கமுவ

கண்டி, குருநாகாலிலிருந்து : குருநாகல் ➡ வாரியப்பொல ➡ பாதனிய ➡ தலதாகம ➡ கல்கமுவ

யாழ்ப்பாணம், மன்னார் : அநுராதபுரம் ➡ தலாவ ➡ தபுத்தேகம ➡ கல்கமுவ

புத்தளம், சிலாபம் : ஆனமடுவ ➡ நவகத்தேகம ➡ நான்னேரிய ➡ கல்கமுவ

**திருத்தலபரிபாலகர் : வண. அருட்பணி. அலெக்ஸ் ஜானக்க அடிகளார்,**
**புனித யோசேவ்வாஸ் மன்றம் மற்றும் பங்குமக்கள்**
**(தொ.இல 037 - 2253095 / 077 -0665616 )**

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்